சந்தியா பதிப்பகம்





# புத்தரின் போதனைகள்

ப. ராமஸ்வாமி

1045

# புத்தரின் போதனைகள்

தமிழில் :

ப. ராமஸ்வாமி

25 FEB 2003
MADRAS-600

சந்தியா பதிப்பகம்

52 (பழைய எண் 7), முதல் தளம், நான்காவது தெரு,
அஞ்சுகம் நகர், அசோக் நகர், சென்னை - 600 083, தமிழ்நாடு.
Phone : 044 - 4899968 E-Mail : piththan@yahoo.com

# பொருளடக்கம்

## பாகம் - 1


| | | |
|---|---|---|
| 1. | தற்பயிற்சி | 15 |
| 2. | சிந்தனை | 18 |
| 3. | ஞானம் | 20 |
| 4. | தியானம் | 21 |
| 5. | பேதைமை | 24 |
| 6. | கருத்துடைமை | 25 |
| 7. | மடிமை | 27 |
| 8. | களியாட்டம் | 28 |
| 9. | ஒழுக்கம் | 29 |
| 10. | அஹிம்சை | 31 |
| 11. | அன்பு | 32 |
| 12. | பொறுமை | 33 |
| 13. | கோபம் | 34 |
| 14. | நல்வினைகள் | 35 |
| 15. | தானம் | 37 |
| 16. | ஊழியம் | 38 |
| 17. | நண்பர்கள் | 39 |
| 18. | மௌனம் | 40 |
| 19. | இன்சொல் | 41 |
| 20. | இன்னாச் சொல் | 42 |


2 5 FEB

21. இன்பமும் துன்பமும் 43
22. தீவினைகள் 45
23. ஐயமும் திரிபும் 46
24. ஆஸவங்கள் 48
25. இரகசியம் 52
26. பிறன் இல் விழைதல் 53
27. கொடுங்கோலன் 54

## பாகம் - 2

28. புத்தர் 57
29. பௌத்த தருமம் 59
30. பௌத்த சங்கம் 66
31. பிக்குகள் 67
32. உபாஸகர்கள் 70
33. பிராமணர்கள் 72
34. சண்டாளர்கள் 74
35. பெண்கள் 75
36. நால்வகை வாய்மைகள் 77
37. அஷ்டாங்க மார்க்கம் 78
38. பன்னிரு நிதானங்கள் 80
39. ஆன்மா 86
40. உடல் 88
41. மரணம் 89
42. கரும நியதி 90
43. நிருவாணம் 92
அநுபந்தம் 95

# நூல்கள்

இந்நூலிலுள்ள போதனைகளில் ஒவ்வொன்றின் இறுதியிலும் குறித்துள்ள எண் கீழ்க்கண்ட நூல்களில் அதே எண்ணுள்ள நூலைக் குறிக்கும்; ஒவ்வொரு போதனையும் அதே எண்ணுள்ள நூலிலிருந்து எடுக்கப் பெற்றது:

1. தம்மபதம்
2. தரும-சக்கரப்-பிரவர்த்தன சூத்திரம்
3. மகாவக்கம்
4. உதானம்
5. மகா-பரி-நிருவாண சூத்திரம்
6. தேவிஜ்ஜ சூத்திரம்
7. ஆகங்கேய சூத்திரம்
8. சேதோகில சூத்திரம்
9. தீக நிகாயம்
10. விநய பிடகம்

25 FEB 2003

11. சுத்த நிபாதம்

12. குத்தக பாதம்

13. அங்குத்தர நிகாயம்

14. மஜ்ஜிம நிகாயம்

15. இதி-வுத்தகம்

16. புத்த சரிதை - அசுவகோஷர் இயற்றியதும், 'போ - ஷோ - ஹிங் - த்ஸான் - கிங்' என்ற அதன் சீன மொழிபெயர்ப்பும்

17. *The Life and Legend of Gautama - By the Rt. Rev. P. Bigandet*

18. *Buddhistische Anthologie - By Dr. K. U. Newmann*

19. சுள்ளவக்கம்

20. *Sutra Dsanglun - By R. Seydel*

21. சுத்த விபங்கம்

22. *Sutra of 42 - Sections - Kyoto, Japan*

23. ஜாதகக் கதைகள்

24. சம்யுத்த நிகாயம்

25. *The Gospel of Buddha - By Paul Carus*

26. மகா ராகுல சூத்திரம்

27. *Buddhism - By T. W. Rhys Davids*

28. *Sacred Books of the East - Volumes edited by Max Muller*

29. சீனத் தம்மபதம்

# முன்னுரை

உலகில் தோன்றிய ஆறு தீர்க்கதரிசிகளும் ஆசியா கண்டத்திலேயே அவதரித்தார்கள். சுமார் 3,000 - ஆண்டுகட்கு முன் ஜார துஷ்டடிரர் பாரசீக நாட்டில் தோன்றினார். லாவோத்ஸே, கன்பூஷஸ் இருவரும் சுமார் 2,500 ஆண்டுகட்கு முன் சீன தேசத்தில் வாழ்திருந்தனர். அதே காலத்தில் பாரத நாட்டில் வாழ்ந்திருந்த பெரியார் கௌதம புத்தர். புத்தருக்குப் பின்னால், இற்றைக்கு 1955 ஆண்டுகட்கு முன் பாலஸ்தீனத்தில் ஏசு கிறிஸ்து தோன்றினார். அவருக்குப்பின் கி. பி. 632 - ல் அரேபியாவில் நபிகள் நாயகம் அவதரித்தார்.

புத்தர் பெருமான் அவதரித்த ஆண்டு துல்லியமாக இன்னும் தீர்மானிக்கப் பெறவில்லை. பெரும்பாலான ஆசிரியர்கள் கி. மு. 563 என்று குறிப்பிட்டிருந்தபோதிலும், கி. மு. 573 தான் சரியான ஆண்டு என்பதற்கு அவர் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளே ஆதாரமாயுள்ளன. புத்தர் தமது 29 - வது வயதில் அரண்மனையை விட்டு வெளியேறித் துறவு பூண்டார். ஆறு ஆண்டுகள் அருந்தவம் புரிந்தபின், 35 - வது வயதில் அவர் பூரண ஞானமடைந்தார். அதன்பின் 45 ஆண்டுகள் வட இந்தியாவில் பல தலங்களுக்கும் நடந்துசென்று, அவர் தருமப்பிரச்சாரம் செய்துவந்து, இறுதியில் குசீநகரில் மகா - பரி - நிருவாணமடைந்தார். அவருடைய பிறப்பு, துறவு, மெய்ஞ்ஞானம்,மகா - பரி - நிருவாணம் ஆகிய நான்கில் ஒவ்வொன்றும் வைகாசிமீ பூர்ணிமையன்றே ஏற்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. இந்த நான்கு நிகழ்ச்சிகளுக்கும் பொருத்தமாயுள்ள ஆண்டு கி. மு. 573 ஒன்றுதான். புத்தருடைய காலம் கி. மு. 573 - 493 என்பதை அறிஞர்களும், ஆசிரியர்களும் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியிருக்கின்றது. இதன்படி புத்தர் அவதரித்து இப்போது 2,529 ஆண்டுகளாகின்றன.


26 FEB

எனினும், உலகிலே பெரும்பாலான மக்கள் 1956 ம் ஆண்டு மே (கலி 5058) புத்த வருடம் 2,500 எனக்கொண்டு, இவ்வாண்டு மே மீ 24 வ (வைகாசிப் பூர்ணிமை)யன்று பெருமானின் 2,500 ஆவது பிறந்த தினத்தை ஜயந்தியாகக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளனர் அவர் அவதரித்த இந்திய நாட்டில் நாடும் நகரும் நன்கறியும்படி இவ்விழா கொண்டாடப் பெறுகின்றது. இந்த ஜயந்தியில் எனது சிறு காணிக்கையாக இந்நூல் வெளிவருகின்றது.

எண்பது ஆண்டுகள் இந்திய நாட்டில் தங்கியிருந்து அருளறத்தை உபதேசித்து வந்த புத்தர் பெருமானுக்கு இந்த நாடும், உலகமுமே மிகவும் கடமைப்பட்டவை. பௌத்த தருமம் நிலைபெற்றுத் தழைத்தோங்கியிருந்த காலத்திலேயே இந்தியா செல்வமும் செழிப்பும் பெற்று உலகின் நடுநாயகமாக விளங்கி வந்தது என்பதைச் சரித்திரத்திலே காணலாம். கோசல நாட்டிலும், அதைச் சுற்றியிருந்த பிராந்தியங்களிலுமே பரவியிருந்த பௌத்த தருமத்தை, உலகப் பெருஞ் சமயமாக்கி உயர்த்திய அசோக சக்கரவர்த்தி மாநில மன்னர்களிலே முதன்மையானவராக இன்றளவும் கருதப்பெற்று வருகிறார். பௌத்த தருமத்தின் விளைவாக நாடெங்கும் கல்வியும் கலைகளும் பெருகி வளர்ந்தன; சிற்பங்களும் சிலைகளும் எக்காலத்தும் இல்லாத முறையில் செழித்துப் பெருகின. சாதி ஏற்றத்தாழ்வுகள் குறைந்து, எங்கும் சமரச மனப்பான்மை தழைத்தோங்கி வந்தது.

புத்த ஞாயிற்றின் ஒளி ஆசியா கண்டத்தின் பல நாடுகளிலும் இருளகற்றி, மக்கள் மனங்களிலெல்லாம் ஊற்றுக்கண்களைத் திறந்து வைத்து, எங்கணும் ஒரு புது வாழ்வை ஆரம்பித்து வைத்தது. சீனாவிலும், ஜப்பானிலும், கொரியாவிலும், தாய்லாந்திலும், ஜாவாவிலும், சுமத்திராவிலும், பர்மாவிலும், இலங்கையிலும், நேபாளத்திலும், திபேத்திலும் மற்றும் பல இடங்களிலும் பௌத்தம் பல்கிப் பெருகி வந்தது. பௌத்த பிக்குகளும், சிற்பிகளும், கலைஞர்களும் நான்கு திசைகளிலும் பரந்து சென்று போதிவேந்தரின் உபதேசங்களைப் பரப்பி வந்ததோடு, ஆலயங்கள் அமைத்தும், சிலைகள் நிறுவியும் நூல்கள் இயற்றியும் பெருந்தொண்டாற்றி வந்தனர். பௌத்த தருமத்தின் பண்பாட்டைப் பர்மாவில் பார்க்கலாம். போதி மாதவரின் புனிதக் கொள்கைகளை இலங்கையிலே மூல மொழியிலேயே பாதுகாத்து வைத்திருக்கின்றனர். பழம்பெரும் சீனாவில் முன்னாலிருந்த சமயங்கள் இரண்டோடு பௌத்தமும் கலந்து

K. Pandian

புது உருவம் பெற்று வளர்ந்துள்ளது. ஜப்பானிலே பௌத்த தருமத்தின் பக்தி மார்க்கமாக ஜென் பௌத்தம் செழித்து உரம் பெற்றுள்ளது. இன்று மாநில மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பௌத்த தருமத்தைப் போற்றி வருகின்றனர் என்று சொல்லலாம். இன்று புத்தரைப் பற்றியும், 2500 ஆண்டுகட்கு முன்னர் அவர் அருளிய அரிய உபதேசங்களைப் பற்றியும் உலகின் பல பாகங்களிலும் அளவற்ற ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அழிவுப் பாதையில் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் நம் உலகைப் பௌத்த தருமமே பாதுகாக்கும் என்று அறிஞர் பலரும் கருதுகின்றனர்.

புத்தர் பெருமானின் உருவ அழகு பற்றி வரலாறுகளும், கதைகளும் ஒருமுகமாகப் புகழ்ந்து கூறுகின்றன. 'வெண் திரையின்மீது விரிகதிர்கள் நாண, எரிதழல் தோற்றம், ஆண் யானை போன்ற நடை, மானின் கால்களைப் போன்ற கால்கள், மெல்லிய உடல், பொன் நிறம், நீண்ட விரல்கள், தடக்கைகள், சங்குபோல் உருண்டகணைக் கால்கள், அடர்ந்து இருண்ட தலைமுடி, கருநீலக் கண்கள், பசுவின் இமைகளைப் போல் நீண்டு அகன்ற இமைகள், பவள வாய், முத்துப்பற்கள், அமைதியான ஒளிபரப்பும் திருமுகம் - இத்தனை எழில் நலன்களும் கொண்டு, அவர் மக்களையும், மன்னர்களையும், மறையோர்களையும் வசீகரித்து வந்ததில் ஆச்சரியமில்லை யென்றே தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய குரல் இமயமலைச் சாரலிலேயுள்ள இசைப் பறவையின் குரலைப் போன்றது என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

புத்தர் சாத்திரங்களையோ, புராணங்களையோ மேற்கோள்களாகக் கொள்ளவில்லை. கண்முன்பு கண்ட விஷயங்களையே ஆதாரமாய்க் கொண்டு, பகுத்தறிவுக்கு ஒத்த முறையிலேயே உபதேசங்கள் செய்துவந்தார். உலகில் எங்கணும் துக்கம் நிறைந்திருப்பதைக் கண்டு, அவர் அதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்தார். துக்கத்தின் காரணம் அவா, அவாவின் காரணம் பேதைமை என்பது அவர் முடிவு. இவைகளை நீக்கி, மனிதன் விடுதலை பெற்று முன்னேறி, நிருவாணப் பேற்றை அடைவதற்கு அவர் வகுத்துள்ள வழி அஷ்டாங்க மார்க்கம்.

முதலாவதாக தெளிந்த பார்வை - நற்காட்சி - வேண்டும். இதனாலேயே பொருள்களின் உண்மை இயல்பை உணர முடியும். புலன் இன்பங்களைத் துறந்து, மனக்காழ்ப்பில்லாமல், அஹிம்சை நெறியிலே நிற்க வேண்டும். இது நல்லூற்றம். பொய்யுரை,

புறங்கூறுதல், நிந்தனை, பயனற்ற சொல் ஆகியவைகளிலிருந்து விலகி நிற்றல் நல்வாய்மை யென்ற மூன்றாம் படி. உயிர்க்கொலை நீக்கி, களவு, கவறாடலை ஒழித்து, தவறான சிற்றின்ப வேட்கைகளை அடக்கி வாழ்தல் நான்காம் படியாகிய நற்செய்கை. இதற்கு மேலாக, வாழ்க்கை நடத்தும் முறையும் தூயதாயிருக்க வேண்டும். புலால், மீன் முதலியவை விற்றல், வெட்டுவதற்காக விலங்குகள் விற்றல், மது வகைகள், இலாகிரிப் பொருள்கள், விஷங்கள், கொலைக் கருவிகள் முதலியவைகளில் வாணிபம் செய்தல் முதலிய தீய கருமங்களை விட்டு ஒழுங்கான முறையில் தொழில் செய்து பிழைத்தல் நல்வாழ்க்கை. ஆறாவதுபடி நல்லூக்கம், இது மிக மிக முக்கியமானது. நல்லூக்கம் ஒன்று இல்லாவிட்டால் மனிதனுக்குக் கடைத்தேற்றமே யில்லை. இதைக் கொண்டுதான் அவன் தன் மன மாசுகளை நீக்கி, நல்லெண்ணங்களை இடைவிடாமல் வளர்த்துச் சித்த உறுதி பெற முடியும். அடுத்த ஏழாம்படி நற்கடைப்பிடி. உடல் பல கந்தங்களின் சேர்க்கை யென்று தெளிவுற்று, அயர்வைக் களைநது, நிலைத்த சிந்தையுடனும், ஊக்கத்துடனும், சாந்தியோடு உறுதியுற்றிருத்தலே நற்கடைப்பிடி. புத்தர் பிரான் பிக்குகளுக்கு உபதேசஞ் செய்யும் போதெல்லாம், 'கருத்தோடிருங்கள்! கருத்தோடிருங்கள்!' என்று இதைக்கொண்டே இடைவிடாது கூறி வந்திருக்கிறார். கருத்தின்மை நரகப் பாதை, கருத்துடைமை சுவர்க்கப் பாதை என்பது அவர் கொள்கை. எட்டாவது படி நல்லமைதி.

இதுவரை குறித்துள்ள ஏழு படிகளுக்கும் சிகரமாக அமைந்துள்ளது நல்லமைதி. ஞானத்தினால் ஒருவன் நன்மை தீமைகளைப் பாகுபடுத்தி அறிய முடியுமே தவிர, மனத்தை ஒருநிலைப்படுத்த முடியாது. மனத்தை ஒரு நிலைப்படுத்துவதுதான் அரிய - மிக - அரிய - கலை. 'சித்தத்தை ஒருநிலைப்படுத்து - ஆயிரம் யானைகளின் பலம் உண்டாகும்' என்றார் பதஞ்சலியும். இது பயிற்சியினாலேயே கைகூடும். தியானம், சமாதி, யோகம் என்பவை உள்ளத்தை ஒருமுனைப்படுத்தும் கலையேயாகும். உள்ளத்தூய்மை, அன்பு, தெளிவு, அறிவை ஆதாரமாய்க்கொண்ட நம்பிக்கை ஆகியவற்றைப் பெற்ற பின்பே தியானம் அல்லது சமாதி நிலை எளிதாகும். இவ்வாறு எட்டுப்படிகளுள்ள அஷ்டாங்க மார்க்கத்தின்படி நடந்து,தியானத்தின் மூலம் பரிசுத்தமான எண்ணங்களை வளர்த்து, ஏகாந்த வாசத்தில் இன்பம் பெற முயற்சி செய்து வந்தால், முடிவில் முந்திய பிறவிகளின் வரலாறுகளும், எதிர்கால நிகழ்ச்சிகளும், பிரபஞ்சத்தின் நியதியும் தெளிவாகத் தெரிவதுடன், நிருவாண இன்பமும் சித்திக்கும் என்று போதி வேந்தர் அருளியுள்ளார்.

பௌத்த சமயத்துள் சில உட்பிரிவுகள் இருப்பினும், இந்நூல் தேரவாத பௌத்தத் திருமுறைகளை ஆதாரமாய்க் கொண்டு எழுதப் பெற்றுள்ளது. மேலை நாட்டு ஆசிரியர் பலர் மொழிபெயர்த்து உலகிற்கு அளித்துள்ள அழியாப் பெருமையுள்ள நூல்களிலிருந்து பொறுக்கித் தொடுத்த மலர்கள் பல இதிலே இடம் பெற்றுள்ளன. தமிழ்மொழியில் பெயர்த்து எழுதியதே என் பணியாகும். இந்நூலின் அதிகார வைப்புக் கவனிக்கத்தக்கது. முதற் பாகத்தில் மனிதன் பெற வேண்டிய நற்குணங்களும், விட வேண்டிய தீக்குணங்களும் கூறப் பெற்றுள்ளன. இரண்டாம் பாகத்தில் பௌத்த தரும அடிப்படைக் கொள்கைகள் விளக்கப் பெற்றுள்ளன. தற்பயிற்சியில் ஆரம்பமாகி நூல் நிருவாணத்திலே முடிகின்றது. புத்தர் பொன்மொழிகளைத் தேடித்திரிகின்ற காலையில் இத்தகைய ஒருநூல் என் கையிலே கிடைத்தமையே இந்தநூலை நான் எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது. இத்துடன் சேர்த்துப் படிக்க வேண்டிய நூல் தம்மபதம்.

தருமராஜரென்று போற்றப் பெறும் புத்தர் பெருமானது விரிவான சரிதத்தை அடியேன் 'போதிமாதவன்' என்ற நூலாக எழுதியுள்ளேன். பௌத்த சமயக் கொள்கைகளைப் பற்றிப் 'பௌத்த தருமம்' என்ற நூலொன்றும் எழுதியுள்ளேன்.

திருநெல்வேலி ப. ராமஸ்வாமி

25

# 1. தற்பயிற்சி

தருமமே எனது நிலம். வாழ்க்கையைப் பற்றியிருக்கும் ஆசை என்னும் களைகள் அதில் உண்டாவதை நான் களைந்தெறிகிறேன். ஞானம் என்பது என் கலப்பை; கருத்துடைமை எனது தார்க்கோல். விடாமுயற்சி என்ற எருதுகள் ஏரை இழுத்துச் செல்கின்றன. (மெய்ப் பொருளை உணரும்) தெளிவான காட்சிகளே நான் விதைக்கும் விதைகள். நல்லொழுக்கமே நான் பாய்ச்சும் நீர். எனது அறுவடை எது தெரியுமா? என்றும் அழிவில்லாத நிருவாண* அமிழ்தம். இந்த விளைவைப் பெறுகிறவர்களுக்கு என்றென்றும் குறைவேயில்லை! [11]

★★

நேர்மையான ஒழுக்கத்தை ஆதாரமாய்க் கொண்டு, சிந்தையை ஒருநிலைப்படுத்தும் சமாதியால் (தியானத்தால்) விளையும் பயன் பெரிது, மகத்தானது. சமாதியை ஆதாரமாய்க்கொண்டு அடையும் ஞானத்தால் விளையும் பயன் பெரிது, மகத்தானது. ஞானத்தால் செம்மையுற்ற உள்ளம் புலன்களின் ஆசைகளிலிருந்தும், 'நான்' என்ற அகங்காரத்திலிருந்தும், மயக்கம், அறியாமைகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றது. [5]

★★

ஒரு நுகத்தடியில் பூட்டப்பெற்ற இரு காளைகளாக விளங்குபவை புலன்களும், அவை நாடிச் செல்லும் பொருள்களும். இரண்டையும் குறித்த அளவுக்குள் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். கட்டுப்பாடில்லையென்றால், இரண்டுக்குமிடையே ஆசைகள் வளர ஆரம்பிக்கின்றன. ஏனெனில், இரண்டும் பொருத்தமில்லாதபடி ஒன்றுக்கொன்று மிஞ்சிய காளைகள்... ஆதலால்தான், 'இதயத்தை அடக்கிவையுங்கள், கட்டுப்பாடில்லாமல் அதைவிட்டு விடக்கூடாது' என்று நான் கூறுகிறேன். [16]

★★

உங்களுக்கு நீங்களே தீபங்களாயிருங்கள். உங்களுக்கு நீங்களே புகலிடமாயிருங்கள். வெளியில் எத்தகைய புகலிடத்தையும் நாடாதீர்கள். [5]

★★

---

*நிருவாணம் - பௌத்த தருமத்தின் இலட்சியமான முக்தி நிலை.

சத்தியத்தையே தீபமாக உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள். சத்தியத்தையே அடைக்கலமாக உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள். உங்களைத் தவிர வேறு சரணடைய வேண்டிய எவரையும் நாட வேண்டாம்! [5]

★★

என் பிக்குகளிடையே, இப்பொழுதோ, அல்லது நான் மரித்தபிறகோ, எவர்கள் தமக்குத் தாமே தீபமாயும், வெளியே எவ்வித உதவியும் தேடாமல், தமக்குத் தாமே அடைக்கலமாயும், சத்தியத்தையே தீபமாகப் பற்றிக்கொண்டும், சத்தியத்தையே தமது அடைக்கலமாகப் பற்றிக்கொண்டும், தம்மைத் தவிர வெளியே எவரிடமும் அடைக்கலத்தை நாடாமலும் இருக்கிறார்களோ, அவர்களே (இலட்சிய) சிகரத்தை அடைவார்கள். ஆனால் அவர்கள் கற்க வேண்டியதில் ஆர்வத்தோடு இருக்க வேண்டும்! [5]

★★

கூரை செம்மையாக வேயப்பட்ட வீட்டினுள் மழைநீர் இறங்காதது போல், நன்னெறிப் பயிற்சியுள்ள மனத்தினுள் ஆசைகள் நுழைய முடியாது. [1]

★★

சாத்திரங்கள் அனைத்தையும் கற்று ஒப்பித்தாலும், வாழ்க்கையில் அவற்றின்படி நடக்காதவன், ஊரார் பசுக்களைக் கணக்கிட்டு எண்ணும் ஆயனைப்போன்றவன். சமய வாழ்வில் சமணன்* அடையவேண்டிய பயனை அவன் பெற முடியாது. [1]

★★

நீரை நெறிப்படுத்திச் செல்வர் சிற்பக் கலைஞர்* அம்பை நேராக நிமிர்த்துவர் வில்லாளிகள்; மரத்தில் (சித்திரங்கள்) பொளிப்பார்கள் தச்சர்கள்; தம்மைத் தாமே அடக்கியாள்வர் அறிஞர். [1]

★★

தேர்ப்பாகன் குதிரைகளை அடக்கிப் பழக்கியிருப்பதுபோல, இந்திரியங்களை அடக்கி, அகங்காரத்தை அகற்றி, ஆசையாகிய கறைகளில்லாதிருப்பவனைக் கண்டு தேவர்களும் பொறாமைப் படுகிறார்கள். [1]

★★

* சமணன் - சிரமணன் - சிரத்தையோடு பௌத்த தருமத்தைப் பின்பற்றுவோன். ஜைன சமயத்தோரையும் சமணர் என்பது வழக்கம்.

* சிற்பக் கலைஞர் - எஞ்சினீயர்கள்.

ஒருவன் ஆயிரம் பேர் கொண்ட ஆயிரம் படைகளை வெற்றி கொள்கிறான்; மற்றொருவன் தன்னைத்தானே அடக்கி வெல்கிறான்; இவர்களுள் தன்னை வென்றவனே வெற்றி வீரருள் முதன்மையானவன்.[1]

★★

மாதந்தோறும் ஆயிரம் யாகங்களாக நூறு வருடம் யாகம் செய்பவன், தம்மைத் தாமே அடக்கிக்கொண்ட ஒருவரை ஒரு கணம் வணங்குதல் அந்த நூறு வருட வேள்வியைவிட மேலானது.[1]

★★

ஒவ்வொரு மனிதனும் முதலில் தான் நன்னெறியில் நிலைபெறுதல் வேண்டும்; பிறகுதான் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும். இத்தகைய ஞானி கிலேசமடைவதில்லை.[1]

★★

ஒருவன் தானே தனக்குத் தலைவன். வேறு யார் தலைவனாயிருக்க முடியும்? தன்னை நன்கு அடக்கி வைத்துக்கொண்டால், ஒருவன் பெறுவதற்கரிய தலைவனைப் பெற்றவனாவான்.[1]

★★

சகல பாவங்களையும் நீக்குதல்,
நற் கருமங்களைக் கடைப்பிடித்தல்,
உள்ளத்தைச் சுத்தம் செய்தல் -
இதுதான் புத்தருடைய உபதேசம்.[1]

★★

கோவேறு கழுதைகளும், சிந்து நாட்டு உயர்ந்த சாதிக் குதிரைகளும், பெரிய போர்யானைகளும் பழக்கிய பின்னால் சிறந்தவையாம். ஆனால் தன்னைத்தானே அடக்கியாள்பவன் இவை அனைத்திலும் சிறந்தவன்.[1]

★★

ஒருவன் தனக்குத்தானே தலைவன், தனக்குத்தானே புகலிடம். ஆதலால்; வணிகன் உயர்ந்த குதிரையை அடக்கிப் பழக்குவதுபோல, உன்னை நீயே அடக்கிப் பழகவும்.[1]

# 2. சிந்தனை

இவ்வுலகில் தோன்றிய ஒரு மனிதன் முறையான சிந்தனையினால் நன்மையிலே திளைத்திருக்க ஆரம்பிக்கிறான். செல்வமும் அழகும் நிலையாமையை அவன் கண்டுகொள்கிறான். தருமமே அவனுக்கு நிகரற்ற அணியாக விளங்குகின்றது.

ஆசையைத் தூண்டக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் அவன் எப்போதும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவாவின்மையால் ஏற்படும் வலிமையைப் பெறுகிறான்.

வெளி உதவியைச் சார்ந்து நின்றால், அவன் துக்கமே பெறுகிறான்; தன்னம்பிக்கை கொண்டவுடன், அவனுக்கு வலிமையும் இன்பமும் கிடைக்கின்றன. [16]

★★

மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது; சிந்தனைகளே அதன் அடிப்படை, சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் தீய எண்ணத்தோடு பேசினாலும், செயல் புரிந்தாலும், வண்டிச்சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வது போல், துக்கம் அவனைத் தொடர்ந்து செல்லும். [1]

★★

மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது; சிந்தனைகளே அதன் அடிப்படை, சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் தீய எண்ணத்தோடு பேசினாலும், செயல் புரிந்தாலும், வண்டிச்சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வதுபோல், துக்கம் அவனைத் தொடர்ந்து செல்லும். [1]

★★

மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது; சிந்தனைகளே அதன் அடிப்படை, சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் நல்லெண்ணத்துடன் பேசினாலும், செயல் புரிந்தாலும், நிழல் தொடர்ந்து செல்வதுபோல், இன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும். [1]

★★

அடக்குவதற்கு அரிதாயும், துடிப்புள்ளதாயும், தன் போக்குப்படி திரிவதாயுமுள்ள சித்தத்தை அடக்குதல் நல்லது; அடக்கியாளப் பெற்ற சித்தம் சுகமளிக்கும். [1]

★★

நிலையில்லாத சித்தத்தையுடையவரும், உண்மையான தருமத்தை அறியாதவரும், மனத்தின் சாந்தி குறைந்தவரும் பூரண ஞானத்தைப் பெறமுடியாது. [1]

★★

பகைவன் பகைவனுக்குச் செய்யும் தீமையைப் பார்க்கிலும், நிந்திப்பவன் எதிரிக்குச செய்யும் தீமையைப் பார்க்கிலும், தவறான வழியில் திரும்பிய சித்தம் அதிகக் கேடு விளைவிக்கும். [1]

★★

தாயும்,தந்தையும், சுற்றத்தாரும் நமக்குச் செய்யும் உதவியைப் பார்க்கினும், நல்ல வழியில் திரும்பிய சித்தம் அதிக உதவியளிக்கும். [1]

★★

கலங்கிய சிந்தனைகளும், உணர்ச்சி வெறிகளும், இன்பத்தில் தேட்டமும் உள்ள மனிதனுக்கு அவா வளர்ந்து கொண்டேயிருக்கும்; அவன் தன் கட்டைப் பலப்படுத்திக் கொள்கிறான். [1]

★★

சிந்தனைகளைச் சாந்தப்படுத்துவதில் நாட்டமுள்ளவன், எப்பொழுதும் விழிப்புள்ளவன், (உலகில்) இன்பமில்லை என்பதில் கருத்தைச் செலுத்துபவன், மாரனின்* மரணத் தளையிலிருந்து விடுபடுவான் - அதை முறித்தெறிவான். [1]

★★

நேர்மையான ஒழுக்கத்தை ஆதாரமாய்க் கொண்டு,சிந்தையை ஒருமுகப்படுத்தும் சமாதியால் (தியானத்தால்) விளையும் பயன் பெரிது, மகத்தானது. சமாதியை ஆதாரமாய்க் கொண்டு அடையும் ஞானத்தால் விளையும் பயன் பெரிது, மகத்தானது. ஞானத்தால் செம்மையுற்ற உள்ளம் புலன்களின் ஆசைகளிலிருந்தும், 'நான்' என்ற அகங்காரத்திலிருந்தும், மயக்கம், அறியாமைகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றது. [5]

---

* மாரன் - சாத்தனைப் போன்ற சீல விரோதி; அறத்தின் பகைவன்

# 3. ஞானம்

காமமாகிய வெள்ளம் யாவர்க்கும் அபாயம் விளைவிக்கும்; உலகத்தையே அது அடித்துக்கொண்டு போய்விடுகின்றது. அதன் சுழல்களிலே சிக்கியவனுக்கு மீட்சிபெற வழியில்லை. ஆனால் ஞானம் என்னும் ஓடம் அந்த வெள்ளத்திலிருந்து காக்கும், ஆழ்ந்த தியானமே அதன் துடுப்பு. [16]

★★

தருமஉபதேசங்களைக் கேட்டறிந்த ஞானிகள், ஆழமாயும், தெளிவாயும், அமைதியாயுமுள்ள ஏரியைப்போல், சாந்தியடைகிறார்கள். [1]

★★

ஞானத்திற்கு உரிய (ஏழு) அங்கங்களில்* சித்தத்தை நிலைநிறுத்தி, எதிலும் பற்று வைக்காமல், ஆசைகளை அடக்கி வென்று, எவர்கள் மாசற்ற ஒளிமயமாய்த் திகழ்கிறார்களோ, அவர்கள் இந்த உலகிலேயே நிருவாண மோட்சத்தை அடைகிறார்கள். [1]

★★

உண்மையான ஞானத்தின் மூலம் விடுதலை பெற்றவனுடைய மனம் சாந்தியாயிருக்கும், சொல் சாந்தியாயிருக்கும், செயலும் சாந்தியாயிருக்கும். [1]

★★

அறியாமையுடன் அடக்கமில்லாமல் நூறு வருடம் ஒருவன் வாழ்வதைக் காட்டிலும், ஞானத்தோடு தியானம் புரிந்துவரும் ஒருவன் ஒருநாள் வாழ்வதே மேலானது. [1]

★★

இந்த உலகம் அரசனுடைய அலங்கரிக்கப்பெற்ற தேர்போல ஜொலிப்பதை வந்து பார்! பேதைகள் இதிலே ஆழ்ந்து விடுகிறார்கள், ஞானிகளுக்கு இதிலே பற்றில்லை! [1]

★★

ஞானமில்லாதவனுக்குத் தியானம் இல்லை; தியானமில்லாதவனுக்கு ஞானம் இல்லை. தியானமும் ஞானமும் சேர்ந்திருப்பவனே நிருவாணத்தின் பக்கம் இருக்கிறான். [1]

---

* ஏழு அங்கங்கள் - ஞானத்தை அடைவதற்குரிய ஏழு கருவிகள்: சாமர்த்தியம், ஞாபகம், மனனம், சாத்திர ஆராய்ச்சி, ஆனந்தம், சாந்தி, சமதிருஷ்டி என்பவை. இவைகளை - 'ஸப்த போத்தியாங்கங்கள்' என்பர்.

# 4. தியானம்

வெளியேயுள்ள பொருள் எதையும் பற்றிக் கவனியாமல், (புலன்களின் மூலம் ஏற்படும்) உணர்ச்சிகளையும் விட்டு, உலகப்பொருள் எதிலும் சம்பந்தமில்லாத தியானத்தில் ஆழ்ந்திருக்கும்போதுதான், ததாகதர்* நிம்மதியாக இருக்கிறார். [1]

★★

தியானத்திலிருந்து ஞானம் உதயமாகிறது. தியானமில்லாவிடில் ஞானம் குறைகிறது. ஆக்கமும் கேடும் வரக்கூடிய இந்த இரு வழிகளையும் அறிந்து, அறிவு பெருகும் வழியை மனிதன் மேற்கொள்வானாக. [1]

★★

எவன் தியானத்தின் முடிவான உபசாந்தியை அடைந்துள்ளானோ, எவன் பயத்தையும், பாசத்தையும், பாவத்தையும் ஒழித்து விட்டானோ, அவன் பிறவியாகிய முட்களைக் களைந்தெறிந்தவன், (பல கந்தங்களால் அமைந்த) இந்தச் சடலமே அவன் (எடுக்க நேர்ந்த) கடைசி உடம்பாம். [1]

★★

ஐந்துவகைப் பாவனைகள் உள்ளன.

முதலாவது பாவனை அன்பைத் தழுவிய மைத்திரீ பாவனை; இதிலே, உங்களுடைய பகைவர்கள் உள்பட எல்லோருடைய நன்மையையும் விரும்பி உங்கள் மனம் ஒருநிலைப்பட்டிருக்கும்படி செய்துகொள்ள வேண்டும்

இரண்டாவது பாவனை கருணையைத் தழுவிய கருணா - பாவனை; இதிலே துயரப்படுகின்ற சகல ஜீவன்களையும் பற்றி எண்ணி, அவர்கள் துக்கங்களையும் கவலைகளையும் கற்பனை செய்து கண்டுகொண்டு, அதன் மூலம் அவர்களிடம் உள்ளத்தில் கருணை எழும்படி செய்துகொள்ள வேண்டும்.

மூன்றாவது பாவனை ஆனந்தத்தைத் தழுவிய முதித - பாவனை; இதிலே மற்றவர்களுடைய இன்ப நலன்களைப் பற்றி எண்ணி, அவர்களுடைய ஆனந்தங்களோடு கலந்து இன்புற வேண்டும்.

---

* ததாகதர் - முன்னோர் வழியிலே செல்பவர் என்று பொருள்; இங்கு புத்தர்; புத்தர் பெருமான் தம்மைத் ததாகதர் என்று சொல்லிக் கொள்வது வழக்கம்.

நான்காவது பாவனை அசுத்தத்தைப் பற்றிய அசுப - பாவனை; இதிலே, ஒழுக்கக் குறைவு, பாவங்கள், நோய்கள் ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி எண்ண வேண்டும். கணநேரத்து இன்பம் எவ்வளவு விபரீதப் பயன்களை உண்டாக்குகின்றது என்பதைக் கருதவேண்டும்.

ஐந்தாவது பாவனை எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் உபேட்சா - பாவனை; இதிலே, விருப்பு, வெறுப்பு, கொடுமை, துன்புறுத்தல், செல்வம், வறுமை முதலியவற்றிற்கு மேலாக எழுந்து, உங்கள் நிலைபற்றி, ஆசையோ, வெறுப்போ இல்லாமல், பூரணமான சாந்தியுடன் கருதவேண்டும். [27]

★★

(தியானங்களில் நான்கு வகை உண்டு. ஏகாந்தமான இடத்திலே அமர்ந்திருந்து, புலன் இன்பங்களைத் துறப்பது பற்றிச் செய்யும் தியானம் முதலாவது; இன்பமும் எழுச்சியும் நிறைந்த உபசாந்தியைப் பெறுதல் இரண்டாவது தியானம்; உடலுக்கு அப்பாற்பட்ட இன்பத்தில் திளைக்கும் முறையில் செய்யும் தியானம் மூன்றாவது; பரிசுத்தமான பூரண சாந்தி நிறைந்த நிலையில் மனம் இன்ப - துன்பங்களுக்கு மேலாக எழுந்து நிற்கும்படி செய்யும் தியானம் நான்காவது. )

**முதல் தியானம்:** இதிலே பிக்கு, புலனாசைகளை விட்டு ஒதுங்கி, தீய நிலைகளை விட்டு ஒதுங்கி, முதல் தியானத்தில் பிரவேசிக்கிறார். ஏகாக்ரகமான நிலைத்த சிந்தனையுடன் இருக்கிறார்.

**இரண்டாம் தியானம்:** பிறகு ஏகாக்ரகமான நிலைதத சிநதனையையும் உள்ளடக்கி, அவர் இரண்டாம் தியானத்தில் பிரவேசிக்கிறார்; இதில் உள்ளமைதியும் உள்ள உறுதியும் அதிகரிக்கின்றன.

**மூன்றாம் தியானம்:** எழுச்சியை அடக்கிக்கொண்டு, உபேட்சா பாவனையோடு, பிக்கு, கருத்தோடும், தன்னடக்கத்தோடும் இருப்பது மூன்றாம் தியானம்; அவர் உடலோடு இருக்கும்போதே ஆனந்த நிலையை அநுபவிக்கிறார். இந் நிலையை ஆரியர்கள்* சமதத்துவ மடைந்தவர் களின் ஆனந்தம்' என்று சொல்வார்கள்.

---

* ஆரியர்கள் - மேலோர்கள்.

நான்காம் தியானம்: முன்னால் பெற்றிருந்த இன்பத்தையும் துன்பத்தையும் துறந்து, அவர் நான்காவது தியானத்தில் பிரவேசிக்கிறார்; இதில் இன்ப துன்ப உணர்ச்சிகள் நீங்கியிருக்கும், பரிசுத்தமான சமதத்துவ நிலை ஏற்பட்டிருக்கும்.[8]

★★

ஓ பிக்குகளே! மக்கள் பரிசுத்தமடைவதற்கும், துக்கத்தையும், துயரால் அரற்றுதலையும் கடப்பதற்கும், சோகத்தையும், கையறு நிலையையும் ஒழிப்பதற்கும், தருமத்தைப் பெறுவதற்கும், நிருவாண முக்தியை அடைவதற்கும், இது ஒன்றுதான் வழி; 'ஸதிபட்டாணங்கள்'* என்ற நான்கு முறைகளுள்ள இந்த வழிதான் அது. அந்த நான்கு முறைகள் எவை?

உடல் (கந்தங்களின் சேர்க்கை) என்று கருதி, பிக்கு, ஊக்கத்தோடும், தன்னடக்கத்தோடும், விலகியுள்ள ஆசைகளையும் அயர்வையும் அடக்கிகொண்டு நிலைத்திருப்பார். இதேபோல் உணர்ச்சிகள், சிந்தனை மனநிலைகளைப் பற்றியும் தியானம் செய்வார்.[9]

* ஸதிபட்டாணங்கள் - ஸதிப் பிரஸ்தானங்கள்; அவை உடல், புலன்களின் உணர்ச்சிகள், உள்ள உணர்ச்சிகள், சிந்தனை, மனநிலைகள் ஆகியவற்றைப் பற்றித் தியானம் செய்யும் நான்கு முறைகள்.

# 5. பேதைமை

இந்த உலகிலோ, அல்லது அடுத்த உலகிலோ, எந்தத் துன்பங்கள் இருந்தாலும், அவைகள் அனைத்திற்கும் வேராக உள்ளது பேதைமை. அவை (அத்துன்பங்கள்) விருப்பம் அல்லது ஆசை காரணமாக எழுபவை.[15]

★★

விழித்திருப்பவனுக்கு இரவு நெடிதாகும்; களைத்திருப்பவனுக்கு வழி நெடுந்தூரமாகும்; நல்லறத்தை அறியாத மூடருக்கு (ஜனன மரணமாகிய) சம்சாரத் தொடர் எல்லையற்றதாகும். [1]

★★

பேதை தன் மடமையை உணர்ந்தால், அந்த அளவுக்கு அவன் அறிவுள்ளவன்; தன்னைப் பண்டிதனாக எண்ணிக்கொள்ளும் பேதை முழு மூடனேயாவான். [1]

★★

பாவம் பழுத்துப் பயனளிக்காதவரையில் மூடன் அதைத் தேன் என்று விரும்புகிறான்; ஆனால் அது பழுத்துப் பயனளிக்கையில், அவன் (ஆறாத்) துயரை அடைகிறான். [1]

★★

மலங்களில் எல்லாம் பெரியதோர் மலம் உண்டு - அறியாமையே முதன்மையான மலம். பிக்குகளே! அந்த மலத்தையும் ஒழித்துவிட்டு, மாசற்றவராக விளங்குவீர்! [1]

# 6. கருத்துடைமை

ஒளியிலிருந்து இருளுக்குச் செல்வதற்கும், இருளிலிருந்து ஒளிக்குச் செல்வதற்கும் வழிகள் இருக்கின்றன. இருளிலிருந்து அதிக இருளுக்கும், ஒளியிலிருந்து அதிக ஒளிக்கும் போவதற்கும் வழிகள் இருக்கின்றன. ஞானி அதிக ஒளியைப் பெறுவதற்குத் தன்னிடமுள்ள ஒளியைப் பயன்படுத்திக் கொள்வான். எப்போதும் அவன் உண்மையை உணர்ந்துகொள்வதற்காக இடைவிடாமல் முன்னேறிக் கொண்டேயிருப்பான். [16]

★★

ஓ பிக்குகளே! துறவி கருத்தோடும், விழிப்போடும் இருக்க வேண்டும். துறவி, இவ்வுலகில் இருக்கும்போது, உடலின் ஆசையாலும், புலன்களின் வேட்கையாலும், தவறான ஆராய்ச்சியாலும் எழும் துக்கத்தை வெல்ல வேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும், மன உறுதியுடன் செய்யுங்கள். உண்ணல், பருகல், நடத்தல், நிற்றல் முதலியவற்றிலும், உறங்கல் அல்லது விழித்திருத்தல், பேச்சு அல்லது மௌனம் ஆகிய எதிலும் கருத்தோடு நடந்து கொள்ளவும். (5)

★★

அறிவாளர்கள் எப்போதும் தீவிர முயற்சியுடனும், தளராத உறுதியுடனும், தியானத்துடனும், மகோன்னதமான விடுதலைப் பேறும் ஆனந்தமுமாகிய நிருவாணத்தை அடைகின்றனர். [1]

★★

அறிவாளி, மடிமையில் ஆழ்ந்தவர் நடுவே, முயற்சியுடையோனாகவும், உறங்குவோர் நடுவே, விழிப்புள்ளவனாகவும் இருப்பான்; பந்தயக் குதிரை வாடகைக் குதிரையைப் பிந்த விட்டுவிட்டு முன்னேறிப் பாய்வதுபோல், அவன் மற்ற யாவர்க்கும் முன்னால் செல்கிறான். [1]

★★

சிரத்தையின்றிச் செய்யும் காரியமும், ஒழுங்காகக் கடைப்பிடிக்காத விரதமும், மனமாரப் பேணாத பிரமசரியமும் பெரும் பயனை அளிக்க மாட்டா. [1]

★★

(இராஜ்யத்தின்) எல்லைப்புறத்தில் இருக்கும் நகரத்தை உள்ளும் வெளியும் அரண் செய்து காப்பதுபோல், ஒருவன் தன்னைக் காத்துக்கொள்க. கண நேரத்தையும் வீணாக்க வேண்டாம், ஒவ்வொரு

நிமிஷத்தையும் நல்வழியிலே பயன்படுத்தாமல் நிமிஷங்களை வீணாகக் கழித்தவர்கள் நிரயத்தில்* விழும்போது வருந்துவர்.[1]

★★

கருத்தில்லாமல் இருக்க வேண்டாம், மனத்தின் சிந்தனைகளை அடக்கிக் காக்கவும். சேற்றில் விழுந்த யானையைக் கரையேற்றுவது போலத் தீய வழியிலிருந்து உன்னை மீட்டுக் கொள்க.[1]

★★

பிக்குகளே! பிக்கு கருத்தோடும், தன்னடக்கத்தோடும் இருந்து வருவாராக. இதுவே உங்களுக்கு நான் செய்யும் உபதேசம். பிக்குகளே, ஒரு பிக்கு கருத்தோடிருப்பது எப்படி?

பிக்கு, உடல் (கந்தங்களின்)* கலப்பு என்பதை உணர்ந்து, ஊக்கத்தோடும், அமைதியோடும், கருத்தோடும், உலகிலுள்ள ஆசையையும் அதிருப்தியையும் அடக்கிக்கொண்டும் இருப்பார். இதுதான் ஒரு பிக்கு கருத்தோடு இருத்தல்.

பிக்குகளே! ஒரு பிக்கு தன்னடக்கத்தோடு இருத்தல் எங்ஙனம்?

பிக்குகளே! பிக்கு வெளியே செல்லும்போதும் இருப்பிடத்திற்குத் திரும்பும்போதும், அடக்கமாக நடந்து கொள்வார். முன்னால் நோக்குவதிலும், பின்புறம் நோக்குவதிலும் அவர் அமைதியோடு நடப்பார். (உடலையோ, கைகளையோ) வளைப்பதிலும், நீட்டுவதிலும், அவர் அமைதியோடிருப்பார். தம் உடைகளை அணிவதிலும், திருவோட்டை ஏந்துவதிலும், உண்ணல், பருகல், சுவைத்தல், விழுங்குதல், உடலின் உபாதைகளைக் கழித்தல், நடத்தல், நிற்றல், அமர்தல், உறங்கல், விழித்தல், பேசுதல், மௌனமாயிருத்தல் ஆகிய எல்லாவற்றிலும் அவர் அமைதியோடிருப்பார். பிக்குகளே, இதுவே பிக்கு தன்னடக்கத்தோடு இருத்தலாகும்.[9]

---

* நிரயம் - நரகம்.

* கந்தங்கள் ஐந்து: உருவம் (ரூப ஸ்கந்தம்), நுகர்ச்சி (வேதனா ஸ்கந்தம்), குறி (ஸம்ஜ்ஞா ஸ்கந்தம்), பாவனை (ஸம்ஸ்கார ஸ்கந்தம்), உணர்வு (விஞ்ஞான ஸ்கந்தம்.

# 7. மடிமை

ஒருவன் தன் விளக்கில் தண்ணீரை ஊற்றி நிரப்பினால், இருளை நீக்க முடியாது. உளுத்துப்போன கட்டையைக் கொண்டு தீக்கடைந்து நெருப்பை உண்டாக்க முடியாது. [16]

★★

கருத்துடைமையே நித்தியமான நிருவாண மோட்சத்திற்கு வழி; மடிமையே மரணத்திற்கு வழி. கருத்துடையவர் இறப்பதில்லை; மடிமையுடையவர் இருக்கும்போதே இறந்தவராவர். [1]

★★

அறிவில்லாத மூடர்கள் மடிமையுள் வீழ்கின்றனர்; அறிஞன் கருத்துடைமையைத் தனது முதன்மையான அருந்தனமாகப் பாதுகாக்கிறான். [1]

★★

மடிமையுள் விழவேண்டாம், காமத்தோடு புலன்களின் இன்பங்களில் புகவேண்டாம். கருத்தோடு தியானம் செய்பவன் எல்லையற்ற இன்பத்தை அடைவான். [1]

★★

மடிமையைக் கண்டு அஞ்சி, கருத்துடைமையில் களிப்படையும் பிக்கு, தவறி விழ முடியாது - அவன் நிருவாண மோட்சத்தின் அருகில் இருப்பான். [1]

# 8. களியாட்டம்

புலன்களை அடக்காமல், உணவில் நிதானமில்லாமல், மடிமையில் ஆழ்ந்து, வீரியம் குறைந்து, இன்பங்களுக்காகவே வாழ்ந்து வருவோனை, வலியற்ற மரத்தைக் காற்று வீழ்த்துவதுபோல, மாரன் முறியடிக்கிறான்.[1]

★★

இந்த உலகம் எப்பொழுதும் எரிந்துகொண்டேயிருக்கையில், இங்கே என்ன சிரிப்பு? இங்கே என்ன களியாட்டம்? இருளால் மூடப் பட்டிருக்கும் நீங்கள் ஏன் ஒளியைத் தேடுவதில்லை?[1]

★★

சரக் காலத்தில் காற்றில் பறக்கும் சுரைக்கொடி போன்ற இந்த வெள்ளை எலும்புகளைப் பார்ப்பவனுக்கு என்ன இன்பம் இருக்கிறது![1]

★★

அஸ்திகளைக் கொண்டு ஒரு மாளிகை கட்டி, ஊனும் உதிரமும் கலந்து சாந்து பூசப்பட்டிருக்கிறது; இதிலே வசிக்கின்றன முதுமையும், மரணமும், கர்வமும், கபடமும்.[1]

★★

மலத்தைத் தின்று வளரும் பெரும் பன்றியைப்போல், ஒருவன் உடல் கொழுத்துப் பெருந்தீனியில் பற்றுள்ளவனாகி, நீங்காத சோம்பலிலும் நித்திரையிலும் ஆழ்ந்து, படுக்கையிலே புரண்டு கொண்டிருந்தால், அந்த அறிவிலி திரும்பத் திரும்பப் பிறவியெடுக்க நேரிடுகிறது.

★★

பிக்குகளே! உன்னதமான விநய ஒழுக்கத்தில் இசை என்பது சோகமாக ஓலமிடுதலாகும்; நடனம் என்பது வெறும் பைத்தியமாகும். இந்த ஆரிய (மேலான) ஒழுக்கத்தில், சிரிப்பில் பற்களை வெளியே காட்டுதல் குழந்தைத்தனமாகும்... நீங்கள் உங்கள் மகிழ்ச்சியைக் காட்டுவதற்கு, இலேசாகப் புன்னகை செய்தாற் போதும்.

# 9. ஒழுக்கம்

பரிசுத்தமான ஒழுக்கத்திலிருந்து சுயமான வீரியம் பிறக்கின்றது; அதுவே அபாயங்களினின்றும் ஒருவனைக் காக்கும். நாம் பேரின்பத்திற்கு ஏறிச் செல்வதற்கு ஏற்ற ஏணி போலத் தூய ஒழுக்கம் விளங்குகின்றது. [16]

★★

புஷ்பத்தின் வாசனை காற்றை எதிர்த்து வீசாது; சந்தனம், தகரம்*, மல்லிகை முதலிய (எல்லா) மலர்களின் மணமும் அப்படித்தான். ஆனால் நன்மக்களின் (புகழ்) மணம் காற்றையும் எதிர்த்து வீசுகிறது. நல்ல மனிதனின் புகழ்மணம் நாலு திசையிலும் பரவி நிற்கிறது. [1]

★★

எந்தக் கருமத்தைச் செய்தால் பின்னால் மனம் நோகுமோ, எதன் பயனை அழுதுகொண்டே அநுபவிக்க வேண்டியிருக்குமோ, அது நற் செயல் ஆகாது. [1]

★★

உயிர்களின் செயல்கள் யாவும் பத்து விஷயங்களால் தீயவை ஆகின்றன. அந்தப் பத்து விஷயங்களையும் நீக்கிவிட்டால் அவை நல்லவை ஆகின்றன. உடலின் பாவங்கள் மூன்று, நாவின் பாவங்கள் நான்கு, உள்ளத்தின் பாவங்கள் மூன்று உள்ளன.

உடலின் பாவங்கள் கொலை, களவு, வியபசாரம்; நாவின் பாவங்கள் பொய்மை, புறங்கூறல், நிந்தனை, பயனற்ற பேச்சு; உள்ளத்தின் பாவங்கள் பொறாமை, துவேஷம், தவறு (உண்மையை உள்ளவாறு உணராமை).

ஆதலால் உங்களுக்குக் கீழ்க்கண்ட விதிகளை அளிக்கிறேன்:

1. கொல்ல வேண்டாம், உயிரைப் பேணுங்கள்.
2. திருட வேண்டாம், பறிக்கவும் வேண்டாம்; ஒவ்வொருவரும் தமது உழைப்பின் பயனைத் துய்ப்பதற்கு உதவி செய்யுங்கள்.
3. தீயொழுக்கத்தை (வியபசாரத்தை) விலக்குங்கள்;கற்பு நெறியில் வாழ்க்கையை நடத்துங்கள்.
4. பொய் பேச வேண்டாம்; தக்க முறையில் பயமில்லாமலும், அன்பு கலந்த உள்ளத்துடனும், உண்மையைப் பேசுங்கள்.

---

* தகரம் - ஒருவகை வாசனைச் செடி. இதிலிருந்து வாசனைப் பொடி தயாரிப்பதுண்டு.

5. பிறரைப் பழிக்கின்ற செய்திகளைக் கற்பனை செய்ய வேண்டாம், அவைகளைப் பரப்பவும் வேண்டாம். கூட வாழும் மக்களைப் பற்றிக் குறை கூற வேண்டாம். அவர்களுடைய நற்குணங்களைப் பாராட்டுங்கள்; அவர்களுடைய பகைவர்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்கத் தக்க முறையில் நடந்து கொள்ளுங்கள்.

6. ஆணையிட்டுப் பேசவேண்டாம், நாகரிகமாகவும், நயம்படவும் பேசவும்.

7. பயனில்லாதவற்றைப் பேசிப் பொழுதை வீணாக்க வேண்டாம், குறித்த விஷயத்தைப் பற்றிப் பேசுக, அல்லது மௌனமாயிருங்கள்.

8. பேராசைப் பட வேண்டாம், மற்ற மக்களுடைய இன்பங்களைக் கண்டு மகிழ்ச்சியடையுங்கள்.

9. உள்ளத்திலிருந்து துவேஷத்தை அகற்றுக; வெறுப்பை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டாம்; உயிருள்ள ஜந்துக்கள் அனைத்தையும் அன்பால் அணைத்துக்கொள்ளுங்கள்.

10. உள்ளத்திலுள்ள அறியாமையை அகற்றுக. உண்மையை அறிய ஆவல் கொள்க - முக்கியமாக எந்த விஷயத்தில் மெய்யை அறிய வேண்டுமோ அதில் கவனமாக இருங்கள்; இல்லாவிடில் நீங்கள் அவநம்பிக்கை அடைய நேரும். அல்லது தவறுகள் செய்ய நேரும். அவநம்பிக்கை உங்களுக்கு அலட்சிய பாவத்தை உண்டாக்கி விடும். தவறுகள் நீங்கள் வழி தவறிச் செல்லும்படி செய்து விடுபவை; இவைகளால் நித்தியமான வாழ்வுக்குரிய உன்னதமான மார்க்கத்தை நீங்கள் கண்டுகொள்ள முடியாமற் போகும். [22]

# 10. அஹிம்சை

தண்டனைக்கு எல்லோரும் நடுங்குகின்றனர், வாழ்வில் எல்லோருக்கும் பிரியமிருக்கின்றது. மற்ற உயிர்களையும் தன்னைப் போல் எண்ணி ஒருவன் கொல்லவும் கூடாது, கொலைக்கு உடன்படவும் கூடாது. [1]

★★

இன்பமாக வாழ விரும்பும் உயிர்களை ஒருவன் தன் சுகத்தை நாடித் தண்டித்துத் துன்புறுத்தினால், மரணத்திற்குப்பின் அவன் நலமடைவதில்லை.

★★

நீதியான அஹிம்சை நெறியிலே மற்றவர்களுக்கு வழிகாட்டுவோனே தருமத்தைக் காப்பான். மேதாவி, நீதிமான் எனப்படுவான். [1]

★★

கௌதமருடைய* சீடர்கள் எப்போதும் கருத்துடன் விழிப்பாயிருக்கிறார்கள்; இரவும் பகலும் எப்போதும் அவர்கள் மனம் அஹிம்சையைப் பற்றியே சிந்தித்திருக்கும். [1]

* கௌதமர் - புத்தர்.

# 11. அன்பு

தாய் தன் ஒரே சேயை அரவணைத்துப் போற்றுவதுபோல, உங்கள் அன்பு உலகிலே பரவட்டும்; ஒவ்வோர் உயிரையும் அரவணைத்துக் கொள்ளட்டும்; தடையற்ற சுதந்திரத்துடன் அது உயரேயும் கீழேயும் பறக்கட்டும்; துவேஷமும் பகையும் விலகி ஒழியட்டும்! [11]

★★

இவ்வுலகில் எக்காலத்தும் பகைமை பகைமையால் தணிவதில்லை; பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே பண்டை அறநெறி. [1]

★★

எத்தகைய நற்கருமங்களாயினும், அவை யாவும் இதயத்தைத் திறந்து வைக்கும் அன்பிலே பதினாறில் ஒரு பகுதிக்குக்கூட ஈடாகாது. இதயத்தைத் திறந்து வைக்கும் அன்பிலே அவை அடங்கியுள்ளன. அது (அன்பு) பிரகாசிக்கின்றது, ஒளியும் காந்தியும் அளிக்கின்றது.

# 12. பொறுமை

...யாராவது உங்கள் முன்னிலையில் உங்களை நிந்தித்தாலும், கை முஷ்டியால் உங்களை அடித்தாலும், உங்கள் மீது களிமண் உருண்டைகளை எறிந்தாலும், கழியால் உங்களைத் தாக்கினாலும், அல்லது வாளால் உங்களை வெட்டினாலும் - அப்பொழுதுகூட நீங்கள் அவரைப்பற்றி வெறுப்படையக்கூடாது: 'என் இதயம் நிதானம் தவறாதிருக்கும், வெறுப்படையாதிருக்கும். நான் துவேஷமான சொல் எதுவும் கூறமாட்டேன். நான் எல்லோரையும் நேசித்துக்கொண்டு, அன்போடு அவர்களுடன் வாழ்ந்து வருவேன்!' என்று சொல்வதற்கு நீங்கள் உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். [11]

# 13. கோபம்

வழி தவறிச் செல்லும் இரதம் போலப் பொங்கி வரும் கோபத்தை அடக்கியாள்பவனையே நான் சரியான சாரதி என்று சொல்வேன்; மற்றையோர் கடிவாளக் கயிற்றை(க் கையில்) வைத்திருப்பவர்களே. [1]

★★

வாக்கினால் வரும் கோபத்தை அடக்கிக் காக்கவும். நா அடக்கத்தில் பழக வேண்டும். வாக்கினால் உண்டாகும் தீமையை ஒழித்து, நல்ல ஒழுக்கத்தைப் பேணிவருக. [1]

★★

மனத்தினால் வரும் கோபத்தை அடக்கிக் காக்கவும். மன அடக்கத்தில் பழக வேண்டும். மனத்தில் உண்டாகும் தீமையை ஒழித்து, நல்ல ஒழுக்கத்தைப் பேணி வருக. [1]

# 14. நல்வினைகள்

நல்லதை விரைவாக நாட வேண்டும்; பாவத்திலிருந்து சித்தத்தை விலக்க வேண்டும். புண்ணிய கருமத்தைச் செய்வதில் தாமதித்தால், மனம் பாவத்தில் திளைக்க ஆரம்பித்துவிடும்.[1]

★★

மனிதன் புண்ணியத்தைச் செய்வானாகில், அதையே திரும்பத் திரும்பச் செய்வானாக. அவன் அதில் திளைத்திருக்கட்டும்; புண்ணிய மூட்டை மிகவும் இன்பகரமானது.[1]

★★

கையில் புண்ணில்லாதவன் விஷத்தைக் கையால் தொடலாம்; புண்ணில்லாதவனை விஷம் பாதிப்பதில்லை. தீய காரியத்தைச் செய்யாதவனைப் பாவம் பாதிக்காது.[1]

★★

பாவத்தை நல்வினையால் மறைக்கும் ஒருவன், மேகத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப்போல், இந்த உலகில் ஒளிபெறச் செய்கிறான்.[1]

★★

நிந்தனையை ஒழித்தல், பிறரை வருத்தாமலிருத்தல், அறத்திற்கு அடங்கியிருத்தல், நிதான உணவு, ஏகாந்தமாயிருந்து உயர்ந்த சிந்தனைகளில் ஒருமைப்பட்டிருத்தல் - இதுவே புத்தருடைய உபதேசம்.

★★

தூர தேசத்தில் நெடுங்காலம் சென்றிருந்தவன் சேமமாகத் திரும்பி வருகையில், சுற்றத்தாரும், நண்பர்களும், அன்பர்களும் அவனைக் களிப்போடு வரவேற்று உபசரிப்பார்கள்.

அவ்வாறே புண்ணியம் செய்தவன் இவ்வுலகை விட்டு மறு உலகம் செல்லும்போது, அவன் செய்த புண்ணியங்கள் (முன்னதாக அங்கே சென்று), சுற்றத்தார் அன்பன் திரும்பி வருகையில் வரவேற்பது போல, அவனை அங்கே வரவேற்கின்றன.[1]

★★

நல்லோர், இமயமலையைப்போல், நெடுந்தூரத்திலிருந்தே பிரகாசிக்கின்றனர்; ஆனால் தீயோர் இரவில் இருட்டில் எய்த அம்புகளைப்போல், கண்ணுக்கே புலனாவதில்லை.[1]

★★

...தானம்,ஒழுக்கம், தன்னடக்கம், ஆணவத்தை அடக்கல் ஆகியவை, ஆணுக்கும், பெண்ணுக்கும் அரிய புதையல் தனமாகும்.

மற்றவர்கள் அதை எடுத்துக்கொள்ள முடியாது, திருடர்கள் அதைத் திருடிக் கொண்டுபோக முடியாது. ஞானி நற்கருமங்களைச் செய்து வரட்டும்; ஒருவருக்குப் பின்னால் தொடர்ந்து செல்லக்கூடிய புதையல் அது ஒன்றுதான். [1]

இந்தப் புதையலிலிருந்து இம்மையிலே செழிப்பும். மறுமையிலே பேரின்பமும், நிருவாண முக்தியும் பெறமுடியும்.

தெளிவான நற்காட்சி. உள்ளத்தின் விடுதலை, சீடன் அடைய வேண்டிய பயிற்சிகளின் நிறைவு, தனக்குத்தானே ஞான ஒளி பெறுதல், ஆகியவை அனைத்தும் - புத்தநிலைகூட - இந்தப் புதையலிலிருந்து கிடைக்கும்.

# 15. தானம்

தானம் செய்பவன் உள்ளக்களிப்புடன் அமைதி பெறுகிறான். அவனுக்குக் கவலையுமில்லை, சஞ்சலமுமில்லை. [16]

★★

செல்வத்தைச் சேர்த்து வைக்கும் கருமி பாவத்தையே மூட்டை கட்டிச் சேர்த்து வைத்து, முடிவில் எல்லாவற்றையும் இழக்கிறான். [16]

★★

நெருப்புப் பற்றிய பொக்கிஷத்தில் மிஞ்சியிருப்பவைகளை அள்ளியெடுப்பது போல், பிறருக்குச் செல்வத்தை அள்ளிக்கொடுக்க வேண்டும். [16]

★★

செல்வம் தானாகத் தீமை பயப்பதில்லை; அதிலே பற்றுவைத்து, அதனுடன் ஒட்டிக் கொள்வதுதான் கூடாது! பற்றுக்கொண்டு உள்ளத்தை விஷமாக்குவதைவிட, அவன் உதறிவிடுவதே நலம்! [25]

★★

கருமிகளோ தேவர் உலகை நண்ணுவதில்லை; மூடர்களோ ஈகையைப் போற்றுவதில்லை. ஆனால் ஞானி, ஈகையில் இன்புற்று, (அதனால்) மறு உலகிலும் சுகமடைகிறான். [1]

★★

சகல தானங்களையும் தரும தானமே வெல்கிறது; சகல இனிமைகளையும் தரும இனிமை வெல்கிறது; சகல இன்பங்களையும் தரும இன்பம் வெல்கிறது; சகல துன்பங்களையும் அவாவின்மை வெல்கிறது. [1]

★★

வயல்களுக்குத் தீமை களைகள், மனித வர்க்கத்திற்குத் தீமை ஆசை; ஆதலால் ஆசையற்றவர்களுக்குச் செய்த உதவி பெரும் பயனை அளிக்கும். [1]

★★

பிக்குகளே! தானங்களில் இரண்டு வகைகள் இருக்கின்றன: பொருள்களை அளித்தல் (திரவிய தானம்), அறத்தினை அளித்தல் (தரும ஞானம்). இவ்விரண்டு தானங்களிலும் தரும தானமே சிறந்தது. [15]

★★

நியாயமான முறையில் செல்வத்தைச் சேர்த்தும், தாராளமாகத் தன் செல்வத்திலிருந்து தானம் செய்தும் வருபவன் நிறையப் புண்ணியத்தைத் தேடிக்கொள்கிறான். [11]

# 16. ஊழியம்

ஓ பிக்குகளே! எனக்குப் பணிவிடை செய்யும் எவரும் நோயாளியான மனிதனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். [10]

★★

அன்போடு இடைவிடாமல் செய்துவரும் ஊழியங்களின் மூலமாக [illegible]மான வாழ்வைப்பெற முடியும். கருணையாலும் தானத்தாலும் புனிதத்துவம் அடையலாம். [16]

★★

தயாளமுள்ள ஈகையாளனை எல்லோரும் விரும்புகின்றனர்; அவனுடைய புகழுக்குப் பெரிய மதிப்பு உண்டு; மரிக்கும்போதும் அவன் இதயம் சாந்தியும் மகிழ்ச்சியும் பெற்று விளங்கும்; அவனுடைய தானங்கள் மலர்ந்து கனியாகி அவனுக்குப் பயனளிக்கின்றன. [16]

★★

நமது உணவை (ப் பிறருக்கு) அளிப்பதால், நாம் அதிக வலிமை பெறுகிறோம்; மற்றவர்களுக்கு உடைகள் அளிப்பதால், நாம் அதிக அழகு பெறுகிறோம்; பரிசுத்தமான, சத்திய நிலையங்களை நிறுவுவதால், நாம் அரிய பொக்கிஷங்களை அடைகிறோம்; இதை உணர்ந்து கொள்வதுதான் கஷ்டம். [16]

★★

வாழ்க்கையில் உனக்கு அமைந்த நிலையிலே தங்கியிருக்கவும்; உன் முயற்சிகளைக் கருத்தோடு செய்து வரவும். வாழ்க்கையும், செல்வமும், செல்வாக்கும் மக்களை அடிமைப்படுத்துவதில்லை; ஆனால் வாழ்க்கை, செல்வம், செல்வாக்கு ஆகியவைகளை ஆசையோடு பற்றிக்கொள்ளலே அடிமைப்படுத்துகின்றது. [16]

# 17. நண்பர்கள்

(சம்சார) யாத்திரையில், ஒருவன், தனக்கு நிகரான, அல்லது மேலான நண்பன் துணைக்குக் கிடைக்கவில்லையானால், தன்னந்தனியே தொடர்ந்து செல்வானாக; மூடனுடைய துணை உதவியாகாது. [1]

★★

தீயோருடன் சேர வேண்டாம்; இழிந்தவருடன் இணங்க வேண்டாம்; ஒழுக்கமுள்ளவரோடு உறவாடுக; சான்றோர் தொடர்பை மேற்கொள்க. [1]

★★

மூடனுடன் குலாவுவோன் நெடுங்காலம் துன்புறுவான். மூடரோடு குலாவுதல், பகைவருடன் பழகுவதைப்போல், எப்போதும் துக்கந்தான். அறிவாளரின் இணக்கம்,சுற்றத்தாரோடு பழகுவதைப்போல இன்பமே பயக்கும். [1]

★★

அறிவாளியாயும், உன்னோடு ஒத்துப் பழகக்கூடியவனாயும், அடக்கத்தோடு நல்லொழுக்கமுடையவனாயும் ஒரு தோழன் கிடைப்பானாகில், எல்லா இடையூறுகளையும் கடந்து அவனுடன் கருத்தோடும் மகிழ்ச்சியோடும் நட்புக் கொள்வாயாக. [1]

# 18. மௌனம்

உடைந்துபோன மணி ஓசையற்றிருப்பதுபோல், உன்னை நீ அடக்கிக்கொண்டு அமைதியாயிருந்தால், நீ நிருவாணத்தை அடைந்தவனாவாய். ஏனெனில், நீ கலக்கம் நீங்கிச் செயலற்ற நிலையிலிருக்கிறாய். [1]

★★

பிக்குகளே! நீங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது, புண்ணியமான விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள், அப்படியில்லையானால், மேலான (ஆரிய) மௌனத்தைக்* கைக்கொள்ளவும்; இந்த இரண்டில் ஒன்றையே நீங்கள் மேற்கொள்ள வேண்டும். [11]

* ஆரிய மௌனம் - அமைதியான உள்ளத்துடனும், ஒருமைப்பாட்டுடனும் சிந்தனை தவறாமல் இருக்கும் நிலை.

# 19. இன்சொல்

ஆரியனுடைய (மேலானவனுடைய) வார்த்தைகள் அறிவளிப்ப தோடு, மகிழ்ச்சியும் அளிப்பவை என்பது உண்மைதான். [13]

★★

செருக்குடன் கோபம் நிறைந்தவர்கள் கோபமாய்ப்பேசுகிறார்கள்; மற்றவர்கள் குறைகளை அவர்களைச் சந்திக்கும்போது கூறுவார்கள்; நிந்திப்பதிலும், குற்றங்கள் காண்பதிலும், தமது பகைவரின் வீழ்ச்சியிலும் இன்படைகிறார்கள். ஆனால் இத்தகைய பழக்கங்களை ஆரியர்கள் (மேலோர்கள்) ஒருகாலும் பின்பற்ற மாட்டார்கள்.

# 20. இன்னாச் சொல்

மனிதர்கள் மட்டும் தங்கள் நாக்குகளைக் காத்துக் கொண்டாற்போதும், எல்லாம் நலமாக முடியும்! போர் புரியும் யானை தன் துதிக்கையில் அம்பு பாயாமல் கவனித்துக் கொள்வதுபோல், நீயும் உன்னைக் காத்துக் கொள்வாயாக! [26]

★★

யுத்தத்தில் யானை வில்லிலிருந்து தெறித்து வரும் அம்புகளைத் தாங்குவதுபோல, நான் பிறர் உரைக்கும் நிந்தை மொழிகளைத் தாங்கிக் கொள்வேன். ஏனெனில் பெரும்பாலான ஜனங்கள் பண்பற்றவர் களாகவே இருக்கின்றனர். [1]

★★

பழகிய யானையையே போருக்கு அழைத்துச் செல்வர்; பழகிய யானை மீதே அரசர் அமர்ந்து செல்வர். மக்களிலும் நல்வழியிலே பழகியவனே, நிந்தை மொழிகளைப் பொறுத்துக் கொள்வோனே சிறந்தவன். [1]

★★

பேச்சில் ஒழுக்கக்குறைவான நான்கு பழக்கங்கள் எவை?

ஒரு மனிதன் பொய்யனாயிருக்கிறான்... தன்னையோ, மற்றவர்களையோ காத்துக் கொள்வதற்காகவோ, வேறு ஏதேனும் அற்ப லாபத்திற்காகவோ, அவன் வேண்டுமென்றே பொய்களைக் கூறுகிறான்.

அல்லது, அவன் புறங்கூறுவோனாயிருக்கிறான். அவன் கேள்விப்படுகிற விஷயங்களை ஓரிடத்திலிருந்து வேறிடத்திலே பரப்புகிறான். அதன்மூலம் (மக்களிடையே) பிளவை உண்டாக்குகிறான். நட்பு முறைகளை அவன் தகர்க்கிறான். சமாதானப்படுத்துவதற்குப் பதிலாக, அவன் சண்டைகளை மூட்டிவிட்டு, அவைகளில் ஆனந்தமடைகிறான்.

அல்லது, அவன் கடுஞ் சொற்களைப் பேசுவான், முரட்டுத் தன்மையும், வெறுப்பும், கொடுமையுமுள்ள பேச்சைப் பேசுவான். அவனுடைய சொற்கள் நிந்தனையாகவும் உள்ளன.

அல்லது, அவன் பயனற்ற பேச்சுப் பேசும் சோம்பேறியாக இருக்கிறான்; அடக்கமோ, ஒழுக்கமோ அவனிடம் இல்லை. அவனுடைய பேச்சு மதிப்பற்றது. சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமற்றது, யாதொரு பயனுமற்றது. [14]

# 21. இன்பமும் துன்பமும்

உலக இன்பங்களைக் கண்டு நான் வெறுத்துவிட்டேன். விடங்கொண்ட நாகங்களைப் பார்க்கினும், வானத்திலிருந்து வீழும் இடிகளைப் பார்க்கினும், காற்றோடு கலந்து பரவும் பெரு நெருப்பைப் பார்க்கினும், நான் இந்த இன்பங்களைக் கண்டு அதிகமாக அஞ்சுகிறேன்.[16]

★★

நிலையற்ற இன்பங்களே நம் உண்மையான இன்பத்தையும், செல்வத்தையும் கொள்ளை கொள்ளும் சோரர்கள்! இவைகள் பாலைவனக் கானல் நீரே.[16]

★★

விறகிட்ட தீயைப்போல, இன்பத் தேட்டம் பெருகிக் கொண்டேயிருக்கும். அதற்கும் ஓய்வுமில்லை, ஒழிவுமில்லை. அதற்கு அடிமைப்பட்டவர்களுக்கு இம்மையிலும் இன்பமில்லை, மறுமையிலும் இன்பமில்லை.[16]

★★

இன்பங்கள் யாவும் நஞ்சுகள். ஆழ்ந்த அறிவுடையோர் இவைகளை அமுதம் என்று விரும்பலாகாது. இன்பங்கள் சீறிப் பாய்கின்ற சர்ப்பங்கள்! இவைகளை அண்டலாகாது.[16]

★★

இன்பங்களின் உண்மையான தன்மைகளை உணர்ந்தவர், அவைகளைப் பரிகாரங்களாகவே எண்ணுவர். தாகவிடாய்க்குத் தண்ணீர், பசிப்பிணிக்கு உணவு, வாடைக்கும் வெய்யிலுக்கும் வீடு, அம்மணத்தை மறைக்க ஆடை - இவ்வாறு ஏற்பட்டுள்ள பரிகாரங்களே நமக்கு இன்பங்களாகத் தோன்றுகின்றன![16]

★★

உலகில் இன்பமும் துன்பமும் இணைந்தே இருக்கின்றன. எந்த நேரமும் புன்னகை புரிந்து கொண்டிருக்கும் அரசனும் இங்கில்லை; எந்த நேரமும் வேதனையில் வாடிக்கொண்டிருக்கும் அடிமையும் இங்கில்லை![16]

★★

இன்பமானதையோ துன்பமானதையோ எவனும் பற்றிக் கொண்டிருக்க வேண்டாம். இன்பமானதைக் காணாமையும் துக்கம்; துன்பமானதைக் காண்பதும் துக்கமே. [1]

★★

ஆசைப்பட்டதிலிருந்து சோகம் தோன்றுகிறது; ஆசைப்பட்டதிலிருந்து அச்சம் தோன்றுகிறது;ஆசையற்றவனுக்குச் சோகமில்லை; பயம்தான் ஏது?[1]

★★

மக்கள் நிலையற்ற பொருளிலேயே பெரும்பாலும் நாட்டத்தைச் செலுத்துகின்றனர்; ஆனால் அனல் வெள்ளம்போல வாழ்க்கையின் முடிவு வந்து ஒரே கணத்தில் அதை அடித்துக்கொண்டு போகின்றது. எரிகின்ற விளக்கைக் கவனிப்பதற்கு நியமிக்கப் பெற்ற குருடனைப் போன்றவர்கள் அவர்கள். ஆனால் ஞானி, உலக சம்பந்தங்கள் அழியும் தன்மையுள்ளவை என்பதை உணர்ந்து, துக்கச் சுழலிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். தரும - ஞானம் மனிதனை உலக இன்ப - துன்பங்களிலிருந்து மேலேறச் செய்து, அவனுக்கு நித்தியமான சாந்தியை அளிக்கின்றது. [25]

★★

நிலைத்த, புனிதமான பேரின்பத்திற்காக அநித்தியமான உலக இன்பங்களைத் துறக்கும் பிக்குவின் செயலே உண்மையான பெரிய சித்தி அற்புதம் - (வேறு அற்புதங்களைச் செய்து காட்ட வேண்டியதில்லை.) [25]

★★

உனது இயதம் இன்னும் 'நான்' என்ற ஆணவத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறது; சுவர்க்கத்தைப் பற்றி நீ ஆவல் கொண்டிருப்பினும், அங்கேயும் உன் ஆணவத்திற்குரிய இன்பங்களையே விரும்பிக் கொண்டிருக்கிறாய்; எனவே தருமத்தின் இன்பத்தையும், தருமத்தின் நித்தியத் தன்மையையும் நீ உணர முடியவில்லை. *[3]

* இவ்வுரை கூததந்தர் என்ற வேதியருக்குக் கூறப்பட்டது.

## 22. தீவினைகள்

புதிதாய்க் கறந்த பால் போலே, பாவச் செயல் உடனே புளிப்பாக மாறுவதில்லை; நீறு பூத்த நெருப்பைப்போல் கனன்றுகொண்டே யிருந்து, அது மூடனைத் தொடர்கிறது.

★★

மனிதன் பாவத்தைச் செய்துவிட்டால், அதையே திரும்பத் திரும்பச் செய்யாதிருப்பானாக. அவன் அதில் திளைத்திருக்க வேண்டாம்; பாவ மூட்டை மிகவும் துக்ககரமானது. [1]

★★

'என் பக்கம் அண்டாது' என்று பாவத்தை இலேசாக எண்ணவேண்டாம்; துளித் துளியாக விழும் தண்ணீராலேயே குடம் நிரம்பிவிடும். பேதை கொஞ்சம் கொஞ்சமாகப் பாவத்தைச் சேர்த்தாலும், அவன் பாவத்தால் நிரம்பிவிடுகிறான். [1]

★★

ஏ மானி! .! இதை அறிந்துகொள்! பாவத்தை எளிதில் அடக்க முடியாது. பேராசையும் தீயொழுக்கமும் உன்னைத் தீராத துக்கத்தில் அழுத்தாமலிருக்கட்டும். [1]

★★

காம வெறி, போன்ற அனல் வேறில்லை; துவேஷத்தைப்போல் பற்றிக் கொள்ளும் முதலை வேறில்லை; (தெளிவின்றி) மயங்குதலைப் போன்ற வலை வேறில்லை; ஆசைகளைப்போல் (அடித்துக்கொண்டு போகும்) ஆறு வேறில்லை. [1]

★★

பிக்குகளே! உயிர்க்கொலை தீது, களவு தீது, சிற்றின்ப உணர்ச்சிக்கு அடிமைப்படுதல் தீது, பொய் பேசுதல் தீது, நிந்தனை தீது, பயனற்ற பேச்சு தீது, பொறாமை தீது, துவேஷம் தீது, போலிக் கொள்கைகளைப் பற்றிக் கொண்டிருத்தல் தீது; பிக்குகளே, இவை அனைத்தும் தீவினைகள். [18]

★★

சகுனங்கள், நட்சத்திரங்கள், கனவு சாத்திரங்கள், குறிகளைக் கொண்டு (நன்மை தீமைகளைப்) பார்த்தல் ஆகியவற்றை அறவே ஒதுக்கிய பிக்கு சரியான வழியிலே செல்வோனாவான்; அவைகளின் தீமைகளிலிருந்து அவன் விடுபட்டவன். [25]

★★

நட்சத்திரங்கள் பார்த்தல், ஜோசியம், குறிகளைக் கொண்டு அதிர்ஷ்டங்கள் துரதிர்ஷ்டங்களைக் கூறுதல், நன்மை தீமைகளை முன்னதாக அறிந்துகூறுதல் - இவைகள் யாவும் தகாத செயல்களாம். [25]

# 23. ஐயமும் திரிபும்

ஒரு மனிதனின் உடலில் விடம் தோய்ந்த அம்பொன்று பாய்கிறது. அவனுடைய நண்பர்கள் உடனே மருத்துவரை அழைத்து வருகின்றனர். மருத்துவர் புண்ணிலிருந்து அம்பை இழுக்க ஆரம்பிக்கிறார். அடிபட்டவன், 'நில்லுங்கள்! அம்பை எய்தது யார்? ஆணா, பெண்ணா, பிராமணனா, வைசியனா, சூத்திரனா? அவன் குடும்பம் எது? அவன் நெட்டையா, குட்டையா? அம்பு எத்தகையது? இவற்றையெல்லாம் நான் அறிந்துகொள்ளும்வரை அம்பை எடுக்க விடமாட்டேன்!' என்று பலபடக் கூறினால், என்ன நேரும்? இந்தக் கேள்விகள் அனைத்திற்கும் விடைகள் கிடைக்குமுன்பே அந்த மனிதன் உயிர் துறப்பான். இதுபோலவே, அப்பாலைக்கு அப்பால் என்ன இருக்கிறதென்பது போன்ற தன் கேள்விகளுக்கெல்லாம் விடையறிய விரும்பும் சீடன், துக்கம், துக்க காரணம், துக்க நீக்கம், துக்க நீக்க மார்க்கம் ஆகியவைகளைப் பற்றிய உண்மையை உணருமுன்பே மரித்துவிடுவான்.[14]

★★

சந்தேகம் தோன்றுவது இயற்கை, பல தலைமுறைகளாகப் பல இடங்களிலே தொடர்ந்து வந்துள்ளவை என்பதற்காக மட்டும் பழைய சம்பிரதாயங்களை நம்பவேண்டாம்; பலர் கூடிப் பேசுகிறார்கள் என்றோ, பரப்பி வருகிறார்கள் என்றோ, வதந்திகளாகிய எதையும் நம்ப வேண்டாம்; எவரோ பழங்காலத்துமுனிவர் ஒருவர் எழுதி வைத்ததைக் காட்டினால், அதை நம்பிவிட வேண்டாம்; நீங்களாகக் கற்பனை செய்து கொள்ளும் விஷயம் ஆச்சரியமானதாயிருப்பதைக் கொண்டு, அது ஒரு தேவனாலோ, வேறு அற்புதத் தேவதையாலோ, தோற்றுவிக்கப் பெற்றது என்று நம்பவேண்டாம். ஒரு விஷயத்தைக் கண்ணால் கண்டு, கருத்தால் ஆராய்ந்து, அது பகுத்தறிவுக்குப் பொருத்தமாயும், சகலருக்கும் நன்மை பயக்கக்கூடியதாயும் இருந்தால், அதை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்கவும்.[15]

★★

முதலாவது நமக்குத் தேவையானது 'ஸம்மா திருஷ்டி' (என்ற நற்காட்சி). ஐயம்,திரிபுகளுள்ள கொள்கைகளை நீக்கி, உண்மையைக் கண்டு கொள்ள அதுவே உதவியாகும். அதன் பின்பு அவாவின் பிடியிலிருந்து விடுதலை பெறுதல் எளிது.[16]

★★

பொய்யில் மெய்யைக் கற்பனை செய்து கொண்டு, மெய்யில் பொய்யைக் காணும் மருளுடையார் மெய்ப்பொருளை ஒருபோது அடைவதில்லை; அவர்கள் வெறும் ஆசைகளைத் தொடர்ந்து அலைவார்கள். [1]

★★

மெய்ப்பொருளை உணராமல் ஐயத்தில் உழல்வோனை எதுவும் புனிதமாக்கிவிடாது. ஆடையின்றி அலைதல், சடைத்தலை, புழுதியால் (உடல்) மாசடைதல், உபவாசம், வெறுந்தரையில் கிடத்தல், நீறு பூசுதல், அசைவில்லாமல் அமர்ந்திருத்தல் ஆகிய எதுவும் புனிதமாக்கிவிடாது. [1]

★★

இருளே இவ்வுலகின் இயற்கை, இங்கு சிலரே (விழிபெற்று) உண்மையைக் காண முடியும். வலையிலிருந்து தப்பிய பறவைகள் போல, சிலரே சுவர்க்கம் செல்கின்றனர். [1]

★★

பயங்கொண்ட மனிதர்கள் மலைகளையும், வனங்களையும், புனிதமான மரங்களையும், பண்ணியத் தலங்களையும் புகலிடமாகக் கொள்கிறார்கள். [1]

★★

இந்த அடைக்கலம் நல்ல பாதுகாப்புஅல்ல. இந்த அடைக்கலத்தால் மனிதன் வேதனைகளிலிருந்து விடுதலை பெறுவதில்லை. [1]

# 24. ஆஸவங்கள்*

வையகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டாலும், இன்னும் கடலுக்கு அப்பால் கண்டம் எதுவும் இருக்கிறதா என்று ஆசை கொள்ளல் இயல்பு. ஆசைக்கு ஓர் அளவில்லை! கடல் முழுதும் நீர் நிறைந்திருப்பினும், அதற்கு அமைதியில்லை. அதுபோல், எத்தனை எத்தனை இன்பங்கள் இருப்பினும், மனித குலத்திற்குத் தெவிட்டுதல் இல்லை! [16]

★★

உலக வாழ்வாகிய பெரிய விஷ விருட்சத்திற்கு வேராக அமைந்துள்ளது பேதைமை... [16]

★★

பிக்குகளே! எல்லாப் பொருள்களும் அனல் பற்றி எரிகின்றன. பிக்குகளே, பற்றி எரியும் இந்தப் பொருள்கள் யாவை?

பிக்குகளே! கண் பற்றி எரிகின்றது; உருவங்கள் எரிகின்றன; கட்புலனும் எரிகின்றது; கண்ணால் பார்த்த பொருள்களின் கருத்துக்களும் எரிகின்றன; புலன்களின் மூலம் உணரும் நல்லன, தீயன, அல்லாதன ஆகிய எல்லா உணர்வுகளும் எரிகின்றன.

எதைப் பற்றிக்கொண்டு இவைகள் எரிகின்றன?

ஆசைத் தீயிலும், துவேஷத் தீயிலும், வெறிகொண்ட பற்றுத் தீயிலும், ஜனனம், முதுமை, மரணம், துக்கம், புலம்பல், துயரம், சோகம், அவநம்பிக்கை ஆகியவற்றால் தோன்றும் தீயிலும் எரிகின்றன.

ஆசாபாசங்கள், வெகுளி, பேதைமை, வெறுப்பு முதலியவை இருக்கும்வரை - நெருப்பு தான் பற்றி எரிவதற்குரிய பொருள்கள் இருக்கும்வரை - தீ எரிந்துகொண்டேயிருக்கும். அதனால் ஜனன மரணங்களும், அவைகளைச் சார்ந்த துயரங்களும் நேர்ந்து கொண்டேயிருக்கும். [3]

★★

'நான்' என்னும் அகங்காரத்திற்கு அடிமைகளாகிக் காலையிலிருந்து இரவு வரை அதற்க்க ஊழியம் செய்து கொண்டிருப்பவர்களே! பிறப்பு, முதுமை, பிணி, மரணம் ஆகியவற்றைப் பற்றி ஓயாது அச்சம்

---

* ஆஸவங்கள் நான்கு: காமாவஸம், பாவாஸவம், திட்டாஸவம், அவிஜ்ஜாஸவம். காமாஸவம் - சிற்றின்பத் தேட்டம்; பாவாஸவம் - பிறப்புக்குக் காரணமான உயிராசை; திட்டாஸவம் - கற்பனையான பொய்க் காட்சி; அவிஜ்ஜாஸவம் - அறியாமை.

கொண்டவர்களே! 'நான்' என்ற கொடிய தலைவன் இல்லை என்ற நற்செய்தியைக் கூறுகிறேன், கேண்மின்!

'நான்' என்பது ஒரு தவறு, ஒரு மயக்கம், ஒரு கனவு. கண்களைத் திறந்து விழித்து எழுங்கள். விஷயங்களை உள்ளபடியே பாருங்கள். உங்களுக்குச் சாந்தி ஏற்படும். [16]

★★

மரம் தீப்பற்றி எரியும்போது புள்ளினங்கள் அதன்மீது குடியிருக்க முடியுமா? ஆசைகளால் ஏற்படும் சித்த விகாரமுள்ள இடத்திலே சத்தியம் தங்கியிருக்க முடியாது. இதை அறியாத கல்விமானைப் பெரிய முனி என்று பாராட்டினாலும், அவன் பேதையேயாவன். [16]

★★

நெருப்பை நீறு மறைத்திருப்பதுபோல் அகங்கார எண்ணம் ஒவ்வோர் உயரிய இலட்சியத்தையும் மறைத்து விடுகின்றது; சாம்பரை மிதித்த பாதத்தை உள்ளேயுள்ள நெருப்பு சுட்டுவிடுகின்றது. [16]

★★

இளமையில் பிரமசரியத்தைப் பேணாதவரும், செல்வத்தைத் தேடிக் கொள்ளாதவரும், உளுத்துப்போன விற்களைப் போல், பழமையை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள். [1]

★★

ஆசைகளுக்கு நிகரான அனல் வேறில்லை;
துவேஷத்திற்கு நிகரான நோய் வேறில்லை;
உடலோடு வாழ்வதற்கு நிகரான துயர் வேறில்லை;
சாந்திக்கு மேலான சந்தோஷமும் வேறில்லை. [1]

★★

புலனடக்கம் இல்லாமல் பொய் சொல்லித் திரியும் ஒருவன், தலையை முண்டிதம் செய்துகொள்வதால், முனிவனாகி விடமாட்டான். இச்சைகளுக்கும் பேராசைக்கும் அடிமைப்பட்டிருக்கும் ஒருவன் முனிவனாயிருப்பது எங்ஙனம்? [1]

★★

ஓ பிக்குகளே! ஒரு மரத்தை மட்டும் வெட்டினால் போதாது, ஆசைக் காட்டையே அரிந்து தள்ளுங்கள்! ஆசைக்காட்டிலிருந்து அபாயம் வருகிறது. காட்டையும் புதர்களையும் வெட்டி வீழ்த்திய பிறகு நீங்கள் விடுதலை பெறுவீர்கள். [1]

★★

ஆடவன் பெண்களிடம் கொள்ளும் காம ஆசை எதுவரை அழிக்கப்படாமல் அணுவளவேனும் இருக்கிறதோ,அதுவரை, பால்குடி மறவாத பசுங்கன்று தன் தாயிடம் ஒட்டிக் கொள்வதுபோல், அவன் மனம் (வாழ்வைப்) பற்றிக் கொண்டேயிருக்கும். [1]

★★

அவாவினால் உந்தப்பட்ட மனிதர்கள், வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப்போல், ஓடித்திரிகிறார்கள். அவாவின் விலங்குகளில் கட்டுண்டு அவர்கள் நெடுங்காலம் துயரத்தை அநுபவிக்கிறார்கள்; இப்படித் திரும்பத் திரும்ப நேரிடுகின்றது. [1]

★★

இரும்பு விலங்கையும், மரக்குட்டையையும், கயிற்றுக் கட்டையையும் அறிஞர் பலமான தளை என்று கூறுவதில்லை; ஆனால் பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்யப் பெற்ற நகைகளிலும், மனைவியிடத்தும், மக்களிடத்தும் வைக்கும் பாசமே மிகவும் பலமுள்ளது என்பர். [1]

★★

ஓ பிக்குகளே! அறநெறிக்கு எதிரான ஐந்து வகையான தடைகளையும்* அறவே நீக்காமலும்,அறிவுக்கு விலங்குகளாயுள்ள ஐந்து தளைகளையும்* முற்றிலும் உடைத்தெறியாமலும் உள்ள ஒரு பிக்கு, இந்தத் தருமத்திலும் விநயத்திலும் முழுப்பலனை அடைய முடியாது, பூரண வளர்ச்சியோ முதிர்ச்சியோ பெற முடியாது - எவ்வகையிலும் அது இயலாத காரியம்![a]

★★

பிக்குகளே! அறிந்தவன் ஒருவனுக்கு, பார்க்கும் வல்லமையுள்ள வனுக்கு, ஆஸவங்களை அழித்து விட இயலும்; அறியாதவனுக்கும், பார்க்க வல்லமையற்றவனுக்கும் அது இயலாது. அறிந்தவனுக்கும், பார்வையுள்ளவனுக்கும் ஆஸவங்களை அழிக்க முடியும் என்று சொல்கிறேன், ஏன்? அறிவோடு ஆராய்ந்து பார்ப்பதையும் அறிவில்லாமல் பார்ப்பதையும் அது பொறுத்திருக்கின்றது. [a]

★★

பிக்குகளே! அறிவில்லாமல் பார்ப்பவனுக்கு, அதுவரை தோன்றியிராத ஆஸவங்கள் முளைக்கின்றன. முன் தோன்றியுள்ள

---

* ஐந்து தடைகள் - அவா, வெறுப்பு, மடிமை, கர்வம், மயக்கம்.

* ஐந்து தளைகள் - உடம்பு உண்மை யென்னும் எண்ணம், சந்தேகம், பயன் கருதிச் செய்யும் விரதங்கள், புலன் இன்பங்களில் விருப்பம்; கோபம்.

ஆஸவங்கள் அதிகமாகின்றன. அறிவோடு ஆராய்ந்து பார்ப்பவனுக்கு, அதுவரை தோன்றியிராத ஆஸவங்கள் முளைப்பதில்லை, முன்தோன்றியுள்ள ஆஸவங்களும் அதிகப்படுவதில்லை. "

★★

பிக்குகளே! நற்காட்சியால் ஒதுக்கவேண்டிய ஆஸவங்கள் இருக்கின்றன, அடக்கி ஒழிக்க வேண்டிய ஆஸவங்கள் இருக்கின்றன. சரியான முறையில் உபயோகித்து அகற்ற வேண்டிய ஆஸவங்கள் இருக்கின்றன, பொறுத்திருந்து அகற்ற வேண்டிய ஆஸவங்கள் இருக்கின்றன. விலக்கியே ஒதுக்கவேண்டிய ஆஸவங்கள் இருக்கின்றன. (தோன்றிய பின்) நீக்க வேண்டிய ஆஸவங்கள் இருக்கின்றன, பயிற்சியினால் நீக்க வேண்டிய ஆஸவங்களும் இருக்கின்றன. [6]

554129

294.4
RAM

25 FEB 2003
MADRAS-

# 25. இரகசியம்

ஓ பிக்குகளே! மூன்று விஷயங்கள் இரகசியமாக நடைபெறுபவை; காதல் விஷயங்கள், புரோகிதர்களின் ஞானம், சத்திய மார்க்கத்திற்கு விலக்காயுள்ள தவறுகள்.

ஓ பிக்குகளே! காதல் கொண்டுள்ள பெண்கள், வெளிப்படையாகத் தெரிவதை அஞ்சி, இரகசியத்தை நாடுகிறார்கள்; ஓ பிக்குகளே, தங்களுக்கு (சுவாமி பிரசன்னமாகி) அருளிய விசேஷமான செய்திகள் உண்டு என்று உரிமை கொண்டாடும் புரோகிதர்களும் வெளிப்படையாகத் தெரிவதை அஞ்சி, இரகசியத்தை நாடுகிறார்கள்; உண்மையான நெறியிலிருந்து விலகிச் செல்லும் யாவரும், வெளிப்படையாகத் தெரிவதை அஞ்சி, இரகசியத்தை நாடுகிறார்கள். [18]

# 26. பிறன் இல் விழைதல்

மற்றொருவனுடைய தாரத்தை இச்சிக்கும் பேதை நான்கு விதமான பயன்களை அடைவான்: பாவம், அமைதியின்மை, உறக்கமின்மை, மூன்றாவதாகப் பழி, நான்காவதாக நரகம். [1]

★★

பாவம் ஏற்படுகிறது; அத்துடன் பாவிகளுக்குரிய தீய கதியும் அடைய வேண்டும்; அஞ்சி நடுங்கும் ஒருத்தியுடன் ஒருவன் அஞ்சிக்கொண்டே துய்க்கும் இன்பம் மிகவும் அற்பமானது; அரசனும் கடுமையான தண்டனை விதிக்கிறான். ஆதலால் எந்த மனிதனும் பிறன் மனைவியை விரும்புதல் ஆகாது. [1]

# 27. கொடுங்கோலன்

தீய கொடுங்கோலன் ஒருவன் இருந்தான். அக்காலத்தில் தேவேந்திரன் ஒரு வேடனைப்போல் உருவெடுத்துக்கொண்டு, மாதலீ என்ற அரக்கனைப் பெரிய நாயாக உருமாற்றிக் கையிலே பிடித்துக்கொண்டு பூவுலகுக்கு இறங்கி வந்தான்.

வேடனும் நாயும் கொடுங்கோலனின் அரண்மனைக்குச் சென்றதும், நாய் மிகவும் உரக்க ஊளையிட ஆரம்பித்தது. அந்த ஒலியினால் அரண்மனையின் அஸ்திவாரமே ஆடத்தொடங்கிற்று.

கொடுங்கோலன் வேடனைத் தன் சிம்மாசனத்தின் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தச் செய்தான். நாய் பயங்கரமாகக் குரைப்பதன் காரணத்தை அவன் வினவினான்.

'நாய் பசியாயிருக்கிறது!' என்றான் வேடன். நடுக்கமுற்றிருந்த மன்னன் அதற்கு உணவளிக்க உத்தரவிட்டான்.

அரண்மனையில் தயாரித்திருந்த உணவு முழுதும் நாயின் வாய்க்குள் போய்விட்டது; ஆயினும் அது பசியடங்காமல் மேலும் பலமாகக் குரைத்துக் கொண்டேயிருந்தது.

அரண்மனை உக்கிராணத்திலிருந்த பொருள்கள் எல்லாம் அதற்கு உணவாக அளிக்கப்பட்டும், அதன் குரைப்பு நிற்கவில்லை.

கொடுங்கோலன் மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல், பயங்கரமான அந்த வேடனைப் பார்த்து, 'இந்தப் பயங்கர மிருகத்தின் பசி இன்னும் என்னென்ன படைத்தால் தணியும்?' என்று கேட்டான்.

'என்ன படைத்தாலும் தணியாது; ஒருவேளை அதனுடைய எதிரிகள் எல்லோருடைய மாமிசத்தையும் படைத்தால் பசி குறையலாம்!' என்றான் வேடன்.

'அதன் எதிரிகள் எவர்கள்?' என்று கொடுங்கோலன் ஆவலோடு கேட்டான்.

வேடன் கூறியதாவது: 'இராஜ்யத்தில் மக்கள் பசியோடு இருக்கிறவரை இந்த நாய் குரைத்துக்கொண்டேயிருக்கும்; அநீதி செய்து, ஏழைகளை நசுக்கி வருபவர்களே இதன் எதிரிகள்!'

மக்களைக் கொடுமைப்படுத்தி வந்த மன்னனுக்குத் தன் கொடுமைகள் யாவும் நினைவுக்கு வந்தன. அவன் உள்ளத்தில் கழிவிரக்கம் தோன்றிற்று. அவன் வாழ்க்கையிலே முதல் முறையாக நீதி, நேர்மைகளைப் பற்றிய உபதேசங்களை அப்பொழுதுதான் கேட்க ஆரம்பித்தான்.

# பாகம் - 2

உலகம் உய்வதற்காக நான் தருமராஜனாக உலகிலே அவதரித்தேன்.

★★

நான் மறுகரையை அடைந்துவிட்டதால், மற்றவர்கள் நதியைக் கடந்து வர உதவி செய்கிறேன்; நான் முக்தியடைந்து விட்டதால், மற்றவர்கள் முக்தியடைய வழிகாட்டுகிறேன்; நான் துக்க நிவாரணம் பெற்றுவிட்டதால், மற்றவர்கள் ஆறுதல் பெற்றுச் சேம நிலையை அடைவதற்கு உதவி புரிகிறேன்.

★★

நீயேதான் முயற்சி செய்ய வேண்டும். ததாகதர் உபதேசம் மட்டுமே செய்வர். இந்த மார்க்கத்தில் இறங்கி, தியானத்தில் ஆழ்ந்தவர்களுக்கு (பாவம், மரணம் முதலிய) மாரனுடைய பந்தங்கள் விலகும்.

– புத்தர்

# 28. புத்தர்

ஓ பிக்குகளே! மாநில மக்களிடம் கொண்ட அன்பினாலே, அவர்களுடைய இன்பத்திற்காகவும், நலனுக்காகவும், தேவர்கள் மனிதர்களின் இன்பத்திற்காகவும், நலனுக்காகவும் ஒப்பற்ற ஒருவர் தோன்றுகிறார்.

இந்த ஒப்பற்ற ஒருவர் யார்? இவரே பூரணஞானமடைந்து, உயர்நிலை அடைந்துள்ள ததாகதர் ஆவார்.

அறிவு ஆற்றல்களினாலே ஒப்பற்ற ஒருவர் இவ்வுலகிலே அவதரித்திருக்கிறார். இந்த ஒப்பற்ற ஒருவர் யார்? இவரே பூரண ஞானமடைந்து, உயர் நிலை அடைந்துள்ள ததாகதர் ஆவார். [13]

★★

நான் அகங்காரத்தை அழித்து விடுதலை அடைந்துள்ளேன். எனது உடல் புனிதமாகியுள்ளது. எனது உள்ளம் ஆசையற்றுள்ளது. எனது இதயத்தில் உண்மை உறைந்துள்ளது. நான் நிருவாண முக்தியைப் பெற்றுள்ளேன். அதனால் தான் என் தோற்றம் சாந்தி நிறைந்திருக்கிறது. என் கண்கள் பிரகாசிக்கின்றன. இப்போது பூமியிலே எனது சத்திய ராஜ்யத்தை அமைக்க விரும்புகிறேன். இருளால் சூழப்பட்டவர்களுக்கு ஒளியளித்து, மக்களுக்கு நித்திய வாழ்வின் வாயிலைத் திறந்துவைக்க விரும்புகிறேன்! [16]*

★★

நான் யாவற்றையும் வென்றவன், நான் யாவற்றையும் அறிந்தவன், வாழ்வின் நிலைகள் யாவற்றிலும் நான் ஒட்டுப் பற்றில்லாதவன். எலலாவற்றையும் நான் துறந்தாயிற்று, அவாவை அழித்ததால் நான் முக்தியடைந்தவன். எல்லாவற்றையும் நானே கற்றுக்கொண்டபின், எவரை என் குருவென்று காட்டுவேன்? [1]

★★

ஆசைத் தளையால் கட்டுண்டு நெடுங்காலம் அலைந்து திரிந்து, இதுவரை எத்தனையோ பிறவிகளெடுத்துக் களைத்துவிட்டேன்!

பலவிதமான பிறவிகளை நான் எடுத்தாயிற்று - இந்த (உடலாகிய) குடிலைக் கட்டியவனை நான் இரவும் பகலும் தேடியும் காணவில்லை. மீண்டும் மீண்டும் பிறப்பது துக்கமாயுள்ளது. [1]**

★★

* புத்தர் ஞானமடைந்த பின் உபாகர் என்ற துறவியிடம் கூறியது.

** புத்தர் போதிமரத்தடியில் ஞானம் பெற்றவுடன் கூறியவை இவை.

குடிலைக் கட்டிய கொற்றனே! இப்போது உன்னைக் கண்டுகொண்டேன்! குடிலை மறுபடி நீ கட்ட முடியாது. உன்னுடைய உத்திரங்கள் எல்லாம் உடைந்துவிட்டன; குடிலின் முகடும் குலைந்து விட்டது. என் சித்தம் நிருவாணப் பேற்றில் இலயித்து விட்டது; (அதனால்) ஆசைகள் அவிந்தொழிந்துவிட்டன. [I]*

★★

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்;
அரிது அரிது மானிட வாழ்க்கை;
அரிது அரிது நல்லறம் கேட்டல்;
அரிது அரிது புத்தநிலை அடைதல். [I]

★★

பிக்குகளே! சந்திரனும் சூரியனும் உலகிலே உதயமாவதற்கு முன்னால் பேரொளியும், ஜோதிமயமான பெரும் பிரகாசமும் இருப்பதில்லை...

பிக்குகளே! அதேபோல, ஒரு ததாகதர் - அருகத்து, ஸம்மா, ஸம்புத்தர் - தோன்றுவதற்கு முன்னால் பேரொளியும், ஜோதிமயமான பெரும் பிரகாசமும் இருப்பதில்லை; எங்கும் அடர்ந்த இருளே நிறைந்திருக்கும், ஐயமும் மயக்கமுமான இருளே நிலைத்திருக்கும், நால்வகை ஆரிய (மேலான) வாய்மைகள் ** உபதேசிக்கப் பெறாமலும், தெளிவாக விளக்கப் பெறாமலும், ஆராயப் பெறாமலும் இருக்கும். [II]

★★

முட்டைக்குள் அடங்கிக் கிடப்பதுபோல அறியாமையுள் ஆழ்ந்திருப்பவர்களிலே, அறியாமை என்ற முட்டையின் தோட்டை உடைத்துக்கொண்டு முதலாவது வெளிவந்தவன் நான், உலகிலே நான் ஒருவனே மகோன்னதமான புத்த பதவியைப் பெற்றவன். பிக்குகளே, இவ்வாறு நானே ஜீவர்களில் மூத்தவனாயும் முதன்மையானவனாயும் இருக்கிறேன். [II]

★★

சூழ்ச்சியும் ஏமாற்றுக் குணமும் இல்லாத புத்தியுள்ள எந்த மனிதனும் என்னிடம் வரட்டும். அவனிடம் நேர்மை மட்டும் இருந்தால் போதும். நான் அவனுக்குப் போதனை செய்கிறேன். அவனுக்கு நான் தருமத்தை விளக்குகிறேன். [9]

---

* புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்றவுடன் கூறியவை இவை.

** நால்வகை வாய்மைகள் - துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கு அடிப்படையான உண்மைகள்.

# 29. பௌத்த தருமம்

(ஒரு தாய் கருவுற்று, ஒன்பது அல்லது பத்து மாதங்கள் வரை கவலையோடு பேணிவந்து, பின்னர் குழந்தை பிறப்பதையும், அது வளர்ந்து பாலப் பருவம் அடைந்து, பொம்மைகள், கழிகள், வண்டிகள் முதலியவற்றைக் கொண்டு விளையாடி வருவதையும், நாளடைவில் அது வலுவடைந்து புலன் உணர்ச்சிகளிலும் அறிவிலும் தேர்ந்து வளர்ச்சியடைவதையும் புத்தர் பெருமான் விவரித்துவிட்டு, மனிதன் பாசவலையில் வீழ்வதையும், விடுதலை பெறுவதையும் பற்றிக் கூறியுள்ளது.)

பின்னர் குழந்தை வளர்ச்சியடைந்து, கண், காது, நாசி, நா, உடல் முதலியவற்றின் தீண்டுகையால் ஏற்படும் ஐந்துவகைப் புலன் இன்பங்களோடும், முதிர்ந்துவரும் அறிவு ஆற்றல்களோடும், அலைந்து திரிகின்றது; பொருள்கள் யாவும் விருப்பத்தைத் தூண்டியும், மயக்கியும், இன்பமளித்தும், அருமையாயும், புலன்களின் இன்பத்திற்கு உகந்தவைகளாயும் விளங்குகின்றன.

கண்ணால் ஓர் உருவத்தைக் கொண்டு, மயக்குகின்ற உருவங்களிலே அவன் ஆசை கொள்கிறான், வெறுப்பான உருவங்களை விலக்குகிறான், சிந்தனை சிறிதுமின்றிக் கருத்தில்லாமல் அவன் வாழ்கிறான். துக்ககரமான, பயனற்ற அந்தப் பொருள்கள் யாவும் மிச்சமின்றி முழுதும் தீர்ந்துபோகக்கூடிய (பரிபாக நிலையான) மனத்தின் விடுதலையை, ஞானத்தினால் கிடைக்கும் விடுதலையை, அவன் அறிவதில்லை.

இவ்வாறு அவன் திருப்தி, அதிருப்தி ஆகியவற்றைப்பற்றித் தெரிந்து கொள்கிறான்; அவன் எந்த உணர்ச்சியை உணர்ந்தாலும், அது இன்பகரமானதோ, துன்பகரமானதோ, அல்லது இரண்டுமற்றதோ - எதுவாயிருந்தாலும் அதை வரவேற்கிறான், ஏற்றுக்கொள்கிறான். அதை விடாமல் பற்றிக்கொள்கிறான். இதிலிருந்துதான் மயக்கம் எழுகின்றது. உணர்ச்சிகளில் மயங்குதல் அவைகளைப் பற்றிக் கொள்வதாகும். பற்றிலிருந்து பவம் (அடுத்த பிறப்புக்குக் காரணமான கருமத்தொகுதி) தோன்றுகின்றது. பவத்திலிருந்து பிறப்பு (தோற்றம்) ஏற்படுகின்றது. பிறப்பினால் தளர்ச்சி - மரணம், சோகம், துக்கம், துயரம், அரற்றல், கையற்ற நிலை ஆகிய வினைப்பயன்கள் தோன்றுகின்றன. துக்கம் அனைத்தும் தோன்றுவது இவ்வாறுதான்.

(கண்ணைப் போலவே) காது, நாசி, நா ஆகிய புலன் உணர்ச்சிகளும், உடலின் தீண்டுகையால் வரும் உணர்ச்சிகளும், மனத்தால் வரும் உணர்ச்சிகளும், இவற்றால் அவன் விருப்பத்தையும் வெறுப்பையும் பெற்று, (முன்கூறியதுபோல்) விடுதலையைப் பற்றி அறியாமல் வாழ்கிறான்.[14]

★★

பின்னர் ஒரு ததாகதர், அருகத்து, ஸம்மா ஸம்புத்தர் தோன்றுகிறார்; அவர் பூரண ஞானமும் பயிற்சியும் பெற்றவர். நன்மையை நாடுவோர், உலகை உணர்ந்தவர், மக்களை நெறிப்படுத்திச் செலுத்துவதில் இணையற்ற சாரதி, தேவர்களுக்கும் மானிடர்க்கும் ஆசாரியர், போதியடைந்த பகவர் ஆவார். அவர் தருமத்தை உபதேசிக்கிறார். (மேலே கூறிய) மனிதன் அத்தருமத்தைச் செவிமடுத்துக் கேட்கிறான். உலகைத் துறந்து, மேலான தற்பயிற்சி முறையை மேற்கொள்கிறான்.

பின்னர் அவன் ஆரியச் சீலங்கள் அனைத்தும் கைவரப் பெற்று, புலன் உணர்ச்சிகளில் அடக்கம் பெற்று, தன்னடக்கத்தோடு கருத்துடனிருந்து, ஒதுக்கமான வாசஸ்தலம், வனம் அல்லது மரத்தின் அடிநிலம், மலை, அல்லது குகை, அல்லது மலைச்சரிவு, அல்லது சுடுகாடு, ஏகாந்தமான தோப்பு, அல்லது திறந்த வெளி. (அமர்வதற்கு) ஒரு வைக்கோற் குவியல் - ஏதாவது ஒன்றைத் தேர்ந்து கொள்கிறான்.

அங்கே பிட்சையெடுத்த உணவைப் புசித்துவிட்டு, அவன் அட்டணைக் காலிட்டு அமர்ந்து கொண்டு, உடல் நிமிர்ந்து, கருத்துடைமையில் நிலைபெற்று, உலகிலுள்ள ஆசாபாசங்களற்ற சிந்தனையுடன் தங்குகிறான். இன்னா செய்தல் என்ற கறையை ஒதுக்கிவிட்டு, அவன் அஹிம்சையில் நிலைபெறுகிறான். உயிருள்ள ஒவ்வொரு பிராணியிடத்தும் அன்புள்ள சிந்தனையோடு, அவன் தன் இதயத்திலுள்ள ஹிம்சை எண்ணங்கள் அனைத்தையும் கழுவித் தூய்மை செய்கிறான். மடிமையையும் அயர்வையும் ஒதுக்கிவிட்டு அவன் அவைகளிலிருந்து தப்பியிருக்கிறான். உள்ளொளியை உணர்ந்து, கருத்தோடும், தன்னடக்கத்தோடும், அவன் உள்ளத்தின் சோம்பலையும் அயர்வையும் துடைத்துச் சுத்தமாக்குகிறான். குழப்பத்தையும் கவலையையும்விட்டு, அவன் சலனமின்றி நிலைபெறுகிறான். உள்ளத்தின் சாந்தியுடன் அவன் கவலையையும் குழப்பத்தையும் நீக்கிச் சுத்தம் செய்கிறான். சந்தேகத்தை ஒழித்து, அவன் சலனமின்றி யிருக்கிறான்; நன்மையான விஷயங்களைப் பற்றி 'எப்படி', ஏன்' என்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டிராமல், அவன் உள்ளத்தைச் சலனமின்றித் தூய்மையாக்குகிறான்.

இவ்வாறு ஐந்து வகைத் தடைகளை* மேற்கொண்டு எஞ்சியுள்ள ஆஸவங்களையும் ஞானத்தால் அழித்து, புலன்களின் ஆசைகளிலிருந்து விலகி, தீவினைகளிலிருந்து ஒதுங்கி, அவன் நால்வகைத் தியானங்களை மேற்கொள்கிறான்.

பின்னர், அவன் கண்ணால் ஓர் உருவத்தைப் பார்த்தால், மயக்குகின்ற உருவங்களில் அவன் மேற்கொண்டு ஆசை கொள்வதில்லை.

---

* ஐந்துவகைத் தடைகள்: அவா, வெறுப்பு, மடிமை, கர்வம், மயக்கம்.

வெறுக்கத்தக்க உருவங்களிலும் அவன் வெறுப்படைவதில்லை, ஆனால் கருத்துடைமையில் நிலை பெறுகிறான். அவனுடைய சிந்தனைக்கு எல்லையில்லை. பயனற்ற பொருள்கள் யாவும் யாதொரு மிச்சமுமின்றித் தீர்ந்துபோகும் பரிபாக நிலையான இதயத்தின் விடுதலையை, ஞானத்தால் அடையும் விடுதலையை அவன் அறிவான்.

அவன் அதிருப்தி, அதிருப்தி இரண்டையும் தள்ளிவிடுகிறான். அவன் உணரும் இன்பகரமான, அல்லது துன்பகரமான, அல்லது இரண்டுமற்ற உணர்ச்சிகளை அவன் வரவேற்பதில்லை, ஏற்றுக் கொள்வதில்லை. அவைகளை விடாமல் பற்றிக் கொள்வதுமில்லை. அதனால் மயக்கம் தீர்கின்றது. மயக்கம் தீர்வதால் பற்று ஒழிகின்றது. பற்று ஒழிவதால் பவம்(கருமத் தொகுதி) ஒழிகின்றது... துக்கம் அனைத்தும் ஒழிவது இவ்வாறுதான்.

பிக்குகளே வேட்கையை (அவா அல்லது ஆசையை) அழிப்பதன் மூலம் பெறும் இந்த விடுதலையைப் பற்றி உங்களுக்கு நான் விளக்கமாகக் கூறியுள்ளதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். "

★★

(கௌசாம்பி நகரில் கங்கையின் வெள்ளத்திலே மிதந்து சென்று கொண்டிருந்த பெரிய மரக்கட்டை ஒன்றைச் சுட்டிக் காட்டிப் புத்தர் பெருமான் சீடர்களுக்குச் செய்த உபதேசம்.)

பிக்குகளே! இப்பொழுது ஒரு மரக்கட்டை இந்தக் கரையிலோ அந்தக் கரையிலோ சென்று தங்காமலும், நட்டாற்றில் ஆழ்ந்து விடாமலும், ஒரு திடரில் தட்டி மாட்டிக் கொள்ளாமலும், மானிடர் கைகளிலோ மற்றவர் கைகளிலோ அகப்படாமலும், சுழலில் சிக்கிக் கொள்ளாமலும், (தானாக) உள்ளூர உளுத்துப் போகாமலும் இருந்தால், - பிக்குகளே, அந்தக் கட்டை மிதந்து சென்று கடலை அடையும். மெதுவாகக் கடலுக்கே போய்ச் சேரும், கடலை நோக்கியே சென்றுவிடும். ஏன்? ஏனென்றால், பிக்குகளே, கங்கையின் பிரவாகம் கடலுக்கே செல்கின்றது, கடலுக்கே போய்ச் சேருகின்றது. கடலை நோக்கியே செல்கின்றது.

பிக்குகளே! அதைப்போலவே, நீங்கள் இந்தக் கரையிலோ அந்தக் கரையிலோ தங்காமலும் நட்டாற்றில் ஆழ்ந்துவிடாமலும், ஒரு திடரில் தட்டி மாட்டிக் கொள்ளாமலும், மானிடர் கைகளிலோ மற்றவர் கைகளிலோ அகப்படாமலும், சுழலில் சிக்கிக் கொள்ளாமலும், நீங்கள் (தாமாக) உள்ளூர உளுத்துப் போகாமலும் இருந்தால், - பிக்குகளே நீங்கள் நிருவாணத்தை அடைவீர்கள். நீங்கள் மெதுவாக நிருவாணத்திற்கே போய்ச் சேருவீர்கள், நிருவாணத்தை நோக்கியே நீங்கள் செல்வீர்கள். ஏன்? ஏனென்றால், பிக்குகளே, ஸம்மா திருஷ்டி (நற்காட்சி) மிதந்தே

செல்லும், மேல் நோக்கி மெதுவாகச் சென்றுகொண்டிருக்கும், நிருவாணத்தை நோக்கியே செல்லும்.

'இந்தக் கரை' என்பது (ஒருவருடைய) அகத்தே அமைந்துள்ள ஆறு புலன்களின் களன்கள்.

'அந்தக் கரை' என்பது புறத்தேயுள்ள ஆறு பொறிகளின் களன்கள்.

'நட்டாற்றில் ஆழ்தல்' என்பது மயக்கத்திற்கும் காமத்திற்கும் உரிய பெயர்.

'ஒரு திடரில் தட்டி மாட்டிக்கொள்ளல்' என்பது 'தான்' என்ற அகங்காரத்தின் பெயர்.

'மனிதர் கைகளில் அகப்படுதல்' என்பது என்ன?

இல்வாழ்வோன் ஒருவன் சமூகத்திலே வாழ்கிறான், ஆனந்தப் படுவோருடனே (சேர்ந்து தானும்) ஆனந்திக்கிறான், துக்கப்படுவோருடனே (சேர்ந்து தானும்) துக்கிக்கிறான். இன்பமடைவோருடனே (சேர்ந்து தானும்) இன்பம் நுகர்கிறான், துயரப்படுவோருடனே (சேர்ந்து தானும்) துயரப்படுகிறான், எல்லாவகைத் தொழில்களிலும் சம்பந்தப்படுகிறான். இதுதான் 'மனிதர் கைகளில் அகப்படுதல்' என்பது.

'மற்றவர் கைகளில் அகப்படுதல்' என்பது என்ன?

எவராவது ஒரு பிக்கு தேவர்களுடைய இனங்களிலே ஒன்றில் தாம் பிறக்க வேண்டும் என்றும், 'எனது சீலத்தினாலோ, பயிற்சியினாலோ, ஏதாவது தபசினாலோ, துறவு வாழ்க்கையினாலோ ஒரு தேவனாகவோ, அல்லது தேவர்களில் ஒருவனாகவோ தோன்ற வேண்டும்' என்றும் விரும்புதலாகும். இதுவே 'மற்றவர் கைகளில் அகப்படுதல். '

'சுழலில் சிக்கிக்கொள்ளல்' என்பது ஐம்புலன்களின் இன்பங்களுக்கும் பெயர்.

'(தானாக) உள்ளூர உளுத்துப் போதல்.' என்பது என்ன?

எவராவது ஒருவர் ஒழுக்கக் குறைவுள்ளவராகவோ, இவினையாளராகவோ, மாசுடையராகவோ, சந்தேகத்திற்கிடமான நடையுடையவராகவோ, கரவடச் செயல்களுடையவராகவோ இருத்தல்;அவர் துறவற விரதங்களை மேற்கொண்டிருப்பினும், துறவியாகார்; விரதங்களை மேற்கொண்டிருப்பினும்,அவர் புனித வாழ்வுடையவராகார்; உள்ளே உளுத்து, ஆசைகள் நிறைந்து, அசுத்தத்திற்குப் பிறந்தவரே அவர். அத்தகையவரே '(தாமாக) உள்ளூர உளுத்துப்போனவர்.' ¹¹

★★

(பௌத்த தருமம் ஒருதேர், பிறவிக் காட்டினுள் சிக்கி அலையும் மக்களை அந்த இரதம் நிருவாணப் பேற்றுக்கு அழைத்துச் செல்லும். அதைப் பற்றிய விவரம் இது.)

ஞானமடைந்து நம்பிக்கை கொண்டவர் உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி ஏறிச் செல்லும் இரதம் அது. அது நீதி நெறிமுறைகள் என்னும் பலகைகளால் செய்யப் பெற்றது. அதன் ஏர்க்காவலாக விளங்குவது அந்தக்கரணம் அல்லது மனச்சான்று; உள்ளமே அதன் நுகத்தடி; ஆனந்தமே அதன்அச்சு; சக்தியே அதன் சக்கரங்கள்; உள்ள நிறைவும் அமைதியுமே இழுத்துச் செல்லும் குதிரைகள்; கருத்துடைமை கவனமுள்ள சாரதி; அவாவின்மையே இரதத்தின் அலங்காரங்கள்; பற்றற்ற உள்ளத்தில் விளையும் அன்பும் அஹிம்சையுமே பாதுகாப்புக்கான ஆயுதங்கள். பொறுமையே தருமத்தின் கவசம். சாந்தி நிலையத்தை நாடி இரதம் உருண்டு ஓடுகின்றது. அந்த இரதம் ஒருவர் தாமே தமக்காகச் செய்து கொள்வது - அதற்கு ஈடும் இல்லை, எடுப்பும் இல்லை. அதிலே அமர்ந்துகொண்டு முனிவர்கள் உலகைவிட்டுச் செல்கிறார்கள், உண்மையிலேயே அவர்கள் குறித்த வெற்றியை அடைகிறார்கள். [24]

★★

ஓ பிக்குகளே! கங்கை, யமுனை,அசிரவதி, சரயு, மாஹி போன்ற பெரு நதிகள் கடலில் கலக்கும்போது தங்கள் பழைய பெயர்களையும், தோன்றிய இடங்களையும், எவ்வாறு இழந்து ஒரே சமுத்திரம் என்று பெயர் பெறுகின்றனவோ, அவ்வாறே க்ஷத்திரிய, பிராமண, வைசிய, சூத்திரர் என்ற நால் வருணத்தாரும் ததாகதர் உபதேசித்த தருமத்திலும் சீலத்திலும் புகுந்த பின்பு, வீட்டைவிட்டு வீடற்ற வாழ்க்கையை மேற்கொண்டபின்பு, அவர்களுடைய பழைய நாம கோத்திரங்களை இழந்து துறவிகள் என்றே அழைக்கப் பெறுவர். [4]

★★

ஓ பிக்குகளே! மகா சமுத்திரம் உப்பின் உவர்ப்பை மட்டுமே கொண்டிருப்பது போல இந்தத் தருமமும்விடுதலை என்ற ஒரே ருசியைக் கொண்டிருக்கிறது. [4]

★★

ஓ பிக்குகளே! அமிதமான இரண்டு வழிகள் இருக்கின்றன; உலகப் பற்றை விட்டவன் அவைகளைப் பின்பற்றலாகாது. உணர்ச்சி காரணமாகவும், முக்கியமாகப் புலனுணர்ச்சி காரணமாகவும், விரும்புதற்குரிய பொருள்களால் திருப்தியடையும் இழிவான பாமர வழி ஒரு பக்கத்தில் இருக்கின்றது - அது வழக்கமாக இருந்து வரினும்,

தகுதியற்றது, பயனற்றது, உலகப் பற்றுள்ளவர்களுக்கே பொருத்த மானது. மற்றொரு வழி (உடலைத் துன்புறுத்திக் கொள்ளும்) கடுமையான நோன்புகளை மேற்கொள்ளும் வழி - இதுவும் வழக்கமாயிருந்து வருகிறது - இதுவும் வேதனை தருவது பயனற்றது. (2)

★★

ஓ பிக்குகளே! பெரிய சாகரத்திலே முத்துக்கள், பலவிதமான மணிகள் நிறைந்திருக்கின்றன. அதுபோலவே, இந்தத் தருமத்திலும், விநயத்திலும் முத்துக்களும், பலவிதமான மணிகளும் நிறைந்திருக்கின்றன. அவைகளிலே சேர்ந்தவை நான்கு ஸதிப் பிரஸ்தானங்கள்.* நான்கு ஸம்யக் பிரதானங்கள் ** நான்கு இருபத்திபாதங்கள்,*** ஐந்து பலங்கள்,[$] ஏழு போத்தியாங்கங்கள்,[$$] ஐந்து இந்திரியங்கள்,[$$$] அஷ்டாங்க மார்க்கம்[%] ஆகியவை.[10]

★★

தரும உபதேசத்தை மகிழ்வுடன் பின்பற்றி, தருமத்திலேயே திளைத்து, தருமத்தையே எப்போதும் சிந்தனை செய்து, தரும வழியிலே நடக்கும் பிக்கு உண்மையான தருமத்திலிருந்து பிறழ்வதில்லை.

★★

---

* நான்கு ஸதிப்பிரஸ்தானங்கள்: (பாலி மொழியில் ஸதிபட்டானங்கள் என்பர். ) உடல், புலன்களின் உணர்ச்சிகள், மனம்,நிருவாணம் (தருமம்) ஆகியவை சம்பந்தமான மனோதத்துவ உண்மைகள்; அவை முறையே காயானுபாஸனை, வேதனானுபாஸனை, சித்தானுபாஸனை; தருமானுபாஸனை எனப்படும்.

** நான்கு ஸம்யக் பிரதானங்கள்: மனத்தில் தீய எண்ணங்கள் தோன்றாமல் தடுத்தல், முன் தோன்றியவைகளை அகற்றல், நல்லெண்ணங்கள் தோன்றச் செய்தல், முன்தோன்றிய நல்ல எண்ணங்களை வளர்த்தல் ஆகிய நான்கு முறைகள்.

*** நான்கு இருபத்தி பாதங்கள்: சாந்தம், வீரியம், சித்தம், மீமாம்ஸை என்பவை *(Urge, Energy, Thought, Investigation)*

[$] ஐந்து பலங்கள்: சிரத்தை, வீரியம், ஸதி, ஸமாதி, பிரஞ்ஞை என்ற ஐந்து ஆற்றல்கள்.

[$$] ஏழு போத்தியாயங்கள்: மெய்ஞ்ஞானமடைவதற்குரிய ஏழு அங்கங்கள் - ஸதி, தரும விசாரம், வீரியம், ஆனந்தம், மனனம், சமாதி, உபேட்சை.

[$$$] ஐந்து இந்திரியங்கள்: சிரத்தை, வீரியம்,ஸதி, சமாதி, பிரஞ்ஞை என்ற ஐந்து மன ஆற்றல்கள்.

[%] அஷ்டாங்க மார்க்கம்; இந்நூலில் 37 - ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

பிக்குகளே துறவு வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் பயன்களில் இல்லை. புகழிலும் கௌரவத்திலும் இல்லை; சீலங்களை முறையாகப் போற்றி வருவதில் இல்லை; அறிவும் உள்ளொளியும் பெறுவதிலும் இல்லை; ஆனால் துறவு வாழ்க்கையின் சாரம் என்பது நிச்சயமான இதய விடுதலையிலேயே உள்ளது - அதுவே குறிக்கோள். [19]

★ ★

எனது தருமம் பரிசுத்தமானது, மேலோர் தாழ்ந்தோர் என்றும், செல்வர் ஏழைகள் என்றும் அதற்கு வேற்றுமையில்லை.

தண்ணீரைப்போல எனது தருமம் எல்லோரையும் வேற்றுமையின்றிச் சுத்தம் செய்வது.

நெருப்பு ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையிலேயுள்ள சகல பொருள்களையும் பாகுபாடின்றி எரிப்பதுபோல், எனது தருமமும் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையற்றது.

எனது தருமம் ஆகாயத்தைப் போன்றது; அதில் அவ்வளவு விசாலமான இடமிருக்கின்றது. எல்லோரையும் ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர், வல்லமையுள்ளவர், மெலிந்தவர் யாவரையும் ஏற்றுக்கொள்ள இடமிருக்கின்றது. [20]

# 30. பௌத்த சங்கம்

சத்திய மார்க்கத்திலே செல்லத் தீர்மானிக்கும் ஒரு மனிதன் தனித்து நின்றால், அவன் வலிமை குன்றித் தன் பழைய பழக்கங்களுக்கே திரும்பிவிடக் கூடும். ஆதலால் நீங்கள் ஒன்று சேர்ந்து இருங்கள். ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ளுங்கள், ஒருவர் முயற்சிகளை மற்றவர்கள் பலப்படுத்துங்கள். [3]

★★

சகோதரர்களைப்போல இருங்கள்; அன்பில் ஒன்றாகவும், துறவறத்தில் ஒன்றாகவும், சத்தியத்தை நாடும் ஆர்வத்தில் ஒன்றாகவும் இருங்கள். [3]

★★

உலகின் திசைகளிலெல்லாம் சத்தியத்தையும் தருமத்தையும் பரப்புங்கள்; முடிவில் சகல ஜீவன்களும் தரும ராஜ்யத்தின் குடிகளாக இருக்கும்படி செய்யுங்கள். [3]

★★

இதுவே புனிதமான சங்கம்; இதுவே புத்தரின் சங்கம்; புத்தரைச் சரணடைந்துள்ளவர் அனைவர்க்கும் ஒருமைப்பாட்டை அமைக்கும் சங்கம் இதுவே! [3]

★★

சோதரர்களே! நான் சகல பந்தங்களிலிருந்தும் விடுதலை பெற்றுள்ளேன். மானிட இயல்புக்கு மேற்பட்ட பந்தங்கள், மானிடப் பந்தங்கள், யாவற்றிலிருந்தும் விடுதலையடைந்துள்ளேன். சோதரர்களே, நீங்களும் அமானுஷ்யமான பந்தங்கள், மானிடப் பந்தங்கள் - யாவற்றிலிருந்தும் விடுதலை பெற்றிருக்கிறீர்கள். சோதரர்களே, பல்லோருடைய நன்மைக்காகவும், பல்லோருடைய பேரின்பத்திற் காகவும், உலகின்மீது கருணை கொண்டு, தேவர்கள், மனிதர்கள் (யாவருடைய) சுகத்திற்காகவும், நன்மைக்காகவும், இன்பத்திற்காகவும் நீங்கள் வெளியே புறப்பட்டுச் செல்லுங்கள்! [13]

★★

எந்த இருவரும் சேர்ந்து செல்லாதீர்கள். சோதரர்களே, தொடக்கத்தில் இனிதாயும், நடுவில் இனிதாயும், முடிவில் இனிதாயும் உள்ள தருமத்தைப் பிரகடனம் செய்யுங்கள். பூரணமாக நிறைவு பெற்றுள்ள பரிசுத்தமான தரும வாழ்வின் அம்சங்களையும், அவற்றின் உட்பொருளையும் நீங்கள் தைரியப்படுத்துங்கள். காமவெறி முதலிய மண்ணினால் அதிகம் மறைக்கப் பெறாத கண்களையுடைய மக்கள் இருக்கின்றனர். தரும உபதேசத்தைச் செவியுறாமல் அவர்கள் நசித்துக் கொண்டிருக்கின்றனர். சிலராவது புரிந்துகொள்வர். (3)

# 31. பிக்குகள்

பகைவனை வென்று வீரத்தை நிலைநிறுத்திய போர்வீரன் வீரச்சின்னங்களை அணிவான் - அதேபோலத் துறவி துக்கம் என்ற பகைவனை வீழ்த்தித் துவராடை என்னும் வீரச் சின்னத்தை அணிவான்.[16]

★★

ஓ பிக்குகளே! உங்களுக்குத் தருமத்தைப் பற்றித் தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதை நீங்கள் (ஐயம், திரிபு இல்லாமல்) பூரணமாகத் தெரிந்துகொண்டு, அதை அனுஷ்டிக்கவும்! அதைப் பற்றித் தியானம் செய்யவும்! உண்மையான சமயம் நெடுங்காலம் நிலைத்திருப்பதற்காகவும், பெருங்கூட்டமான மக்களுக்கு நன்மையும் இன்பமும் ஏற்படும்படியும், உலகின்மீது இரக்கம் கொண்டும், உயிர் படைத்த சகல ஜீவராசிகளின் நன்மைக்காகவும், ஆதாயத்திற்காகவும், தருமம் நீடித்து நிலைபெறுவதற்காக அதை வெளியே பரவச் செய்யுங்கள்![5]

★★

ஓ பிக்குகளே, வாருங்கள்! உங்களுக்கு மீண்டும் நினைவுறுத்துகிறேன்: ஒன்றாகச் சேர்க்கப் பெற்ற பொருள்கள் (பஞ்ச பூதங்களின் கலப்பால் தோன்றுபவை) யாவும் அழியும் தன்மையுள்ளவை. நீங்கள் கருத்தோடு முக்திக்கு வழிதேடுங்கள்! [5]

★★

ஓ பிக்குகளே, கருத்தோடிருங்கள்! புனிதமாயிருங்கள்! சிந்தனை நிறைந்திருங்கள்! செய்து கொண்ட முறையில் உறுதியுடன் நில்லுங்கள். உங்களுடைய சொந்த இதயங்களையே நன்றாகக் கண்காணித்து வாருங்கள்! எவர்கள் சலனமடையாமல், சத்தியத்தையும், தருமத்தையும் பற்றுகிறார்களோ, அவர்கள் வாழ்க்கைக் கடலைத் தாண்டிவிடுவார்கள்! துக்கத்திற்கு முடிவு கட்டி விடுவார்கள்! [5]

★★

சூரியனும், சந்திரனும், எல்லாமும் அழியக்கூடியவையே. எல்லாப் புத்தர்களும், எதிர்காலப் புத்தர்களும் அழிவுறக் கூடியவர்கள். நானும் பரிநிருவாணமடைந்து விடுவேன்... கதிரவன் மேற்கு மலைகளில் ஏறிச் செல்வதுபோல், மேல் நோக்கிச் செல்லும் (தருமப்) பாதையில் அடிமேல் அடியாக முன்னேறிச் செல்லுங்கள்! [5]

★★

பிக்குகளே, இப்பொழுது கவனியுங்கள்! (சேர்க்கையாகச்) சேர்ந்துள்ள பொருள்கள் யாவற்றிலும் (பிரிந்து) அழிவுறும் இயல்பு அடங்கியுள்ளது என்பதை நினைவுறுத்தியே நான் உங்களுக்கு உபதேசம் செய்கிறேன். உங்களுடைய விமோசனத்திற்காக இடைவிடாமல் கருத்தோடு உழையுங்கள்! [5]*

★★

மனமாசுகள் நீங்கி, எவன் சகல சீலங்களிலும் நிலைத்து நின்று, அடக்கமும் உண்மையும் உள்ளவனோ, அவனே சீவர உடைக்கு உரியவன். [1]

★★

தர்ப்பைப் புல்லைத் தவறாக இழுத்தால் அது கையை அறுத்து விடுகிறது; அதுபோல், தீயவழியில் பயிலும் துறவறமும் ஒருவனை நரகில் சேர்க்கின்றது. [1]

★★

ஓ பிக்கு! இந்த ஓடத்தைக் காலியாக்கு; பாரம் குறைந்தால் இது இலகுவாக ஓடும்; விருப்பையும் வெறுப்பையும் சேதித்துவிட்டால், நீ விடுதலைப் பேற்றை அடைவாய். [1]

★★

பிக்குகளே! வஸ்ஸிகைச் செடி வாடிப்போன மலர்களை உதிர்த்து விடுவதுபோல், நீங்களும்,விருப்பு வெறுப்புகளைக் கைவிட்டுவிட வேண்டும். [1]

★★

உடலில் அமைதி, பேச்சில் அமைதி, உள்ளத்தில் அமைதியுடன், நிதான நிலைபெற்று,உலகின் ஆசைத் தூண்டுதல்களை ஒழித்த பிக்குவே உபசாந்தி பெற்றவன் என்று கூறப்படும். [1]

★★

இளவயதாயிருப்பினும், புத்த தருமத்தில் மன மகிழ்ச்சியுடன் ஈடுபடும் பிக்கு, மேகத் திரையிலிருந்து விடுபட்ட வெண்மதி போல, இவ்வுலகில் ஒளியைப் பரப்புகிறான். [1]

★★

* இந்த உபதேசமே புத்தர் பெருமான் சீடர்களுக்குக் கடைசியாகக் கூறிய உபதேசமாகும்.

ஓ பிக்கு! உன்னை நீயே துண்டித்துக்கொள்; உன்னை நீயே சோதனை செய்துகொள். உன்னை நீயே தற்காப்புச் செய்து கவனமாயிருந்தால், நீ இன்புற்று வாழ்வாய். [1]

★★

பிக்குகளே! ஆசாரியர் சீடனைத் தமது மகனைப் போலக் கருத வேண்டும். சீடனும் ஆசாரியரைத் தன் தந்தையாகக் கருத வேண்டும். இவ்வாறு அவ்விருவரும், ஒருவருக்கொருவர் மரியாதையும் அன்பும் கொண்டு, சங்கத்திலே வாழ்ந்து, விநய ஒழுக்கம் வளர்ந்து, பெருகி முன்னேறச் செய்து வெற்றி பெறுவார்கள். [10]

# 32. உபாஸகர்கள்

ஒருவன் புறத்திலே நகைகள் அணிந்திருந்தாலும், அவன் மனம், புலன்களை வெற்றி கொண்டிருக்க முடியும். வெளித்தோற்றம் தரும வாழ்க்கை அன்று. அது உள்ளத்தைத் தீண்டாது. சிரமணன் சீவர ஆடையைப் புனைந்துகொண்டே, உலகப் பற்றுக்களில் ஆழ்ந்திருக்கவும் முடியும். [3]

★★

ஏகாந்தமான வனங்களிலே தங்கியிருந்தும், ஒருவன் வையகத்தின் ஆடம்பரங்களை விரும்பினால், அவன் உலகப் பற்றில் ஆழ்ந்தவனாவான்; உலகத்தாரைப் போல உடைகள் அணிந்த ஒருவன், தன் இதயத்தை வான மண்டலத்திலே பறக்கவிட்டு, உன்னதமான சிந்தனைகளை மேற்கொள்ளவும் கூடும். [3]

★★

துறவியும் இல்வாழ்வோனும், 'நான்' என்ற அகங்காரத்தை விட்டு விட்டால் இருவர்க்குள்ளும் பேதமேயில்லை. [3]

★★

இல்வாழ்வோர்களே! சிறந்த ஒழுக்கத்தைப் பேணாத ஒருவன் அடையும் நஷ்டங்கள் ஐந்து வகையானவை. முதலாவதாக, ஒழுக்கமில்லாததால், அவன் மடிமையில் ஆழ்ந்து மிகுந்த வறுமையை அடைகிறான்; அடுத்தாற்போல், அவனைப் பற்றிய இகழ்ச்சி எங்கும் பரவி விடுகின்றது; மூன்றாவதாக, அவன் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், குடும்பத் தலைவர்கள், சிரமணர்கள் ஆகிய எவர்களுடைய கூட்டத்திற்குச் சென்றாலும், அவன் வெட்கமும் கலக்கமும் அடைகிறான்; நான்காவதாக, அவன் மரிக்கும்போது கவலை நிறைந்தே மரிக்கிறான்; கடைசியாக, மரணத்திற்குப்பின் உடல் அழிவுற்றதும், அவன் மனம்* துயர நிலையிலேயே இருக்கும். அவனுடைய கருமம் எங்கே தொடர்ந்து சென்றாலும், அங்கே துக்கமும் துயரமும் இருக்கும். கிருகஸ்தர்களே, இவையே தீவினையாளன் அடையும் ஐந்து வகை நஷ்டங்கள்!

★★

* மனிதன் மரித்த பின்பு அவன் மனம் சம்பந்தமான விஞ்ஞானக் கந்தத்தின் நுண்ணிய பகுதி ஒன்று எஞ்சியிருந்து அடுத்த பிறவிக்குக் காரணமான வினைப்பயனை ஏற்கும் என்பது பௌத்த தருமக் கொள்கைகளுள் ஒன்று.

இல்வாழ்வோர்களே! சிறந்த ஒழுக்கத்தைப் பேணும் ஒருவன் அடையும் நன்மைகள் ஐந்து வகையானவை. முதலாவதாக, அந்த நன்மையாளன், ஒழுக்கத்தில் நிலைபெற்று, ஊக்கத்தினால் செல்வத்தைப் பெறுகிறான்; அடுத்தாற்போல், அவனைப் பற்றிய புகழுரைகள் எங்கும் பரவுகின்றன; மூன்றாவதாக அவன், க்ஷத்திரியர், பிராமணர், குடும்பத் தலைவர்கள்,சங்க உறுப்பினர்கள் முதலிய எவர்களுடைய கூட்டத்திற்குச் சென்றாலும், அவன் நம்பிக்கையும் தன்னடக்கமும் கொண்டு விளங்குகிறான்; நான்காவதாக, அவன் கவலையின்றி மரிக்கிறான்; கடைசியாக மரணத்திற்குப்பின் உடல் அழிவுற்றதும், அவன் மனம் சாந்தி இன்பத்தோடு இருக்கும். அவனுடைய கருமம் எங்கே தொடர்ந்து சென்றாலும், அங்கே சுவர்க்க இன்பமும்சாந்தியும் நிலவும். கிருகஸ்தர்களே, நல்வினையாளன் பெறும் ஐந்து வகை ஊதியங்கள் இவை![5]

# 33. பிராமணர்கள்

ஓ பிராமணா! வீரத்துடன் எதிர்த்து வெள்ளத்தைத் தடுத்துநில்; ஆசைகளை விரட்டிவிடு. படைக்கப்பட்ட எல்லாம் அழிவடையும் என்பதை உணர்ந்தபிறகு, படைக்கப் பெறாததை நீ அறிவாய்! [1]

★★

எவன் தியானத்துடன் உள்ளானோ, ஆசைகள் அற்றவனோ, நிலையான அமைதியுள்ளவனோ, கடமைகளைச் செய்து முடிப்பவனோ, எவன் மாசற்றவனோ, எவன் உத்தமமான ஞானியின் முடிவான நிலையை அடைந்தவனோ, அவனையே நான் பிராமணன் என்று அழைப்பேன். [1]

★★

மெய், வாய், மனம் ஆகிய மூன்றினாலும் பிறருக்குத் துன்பம் செய்யாது, இம்மூன்றிலும் அடக்கமுள்ளவனையே நான் பிராமணன் என்று சொல்வேன்! [1]

★★

ஒருவன் பிராமணனாவது சடைத்தலையால் அன்று; தன் கோத்திரத்தால் அன்று; பிறப்பினாலும் அன்று; எவனிடம் சத்தியமும் தருமமும் நிலைத்துள்ளனவோ, அவனே பாக்கியவான்; அவனே பிராமணன்! [1]

★★

தாமரை இலைமேல் தண்ணீர் போலவும், ஊசிமுனைமேல் கடுகு போலவும், இன்பங்களோடு ஒட்டாமலுள்ளவன் எவனோ, அவனையே நான் பிராமணன் என்று சொல்வேன். [1]

★★

இகத்திலும், பரத்திலும் எதிலும் ஆசையற்றவன், எதிலும் நாட்டமற்றவன், தளைகளற்றவன் எவனோ, அவனையே நான் பிராமணன் என்று சொல்வேன்! [1]

★★

மூன்று வேதங்களையும்* கற்றுணர்ந்த பிராமணர்கள் சொல்வது இதுதான்: 'எங்களுக்குத் தெரியாத, நாங்கள் பார்த்திராத ஒன்றை அடைவதற்கு நாங்கள் வழிகாட்ட முடியும்; ''இதுதான் நேர்பாதை, இதன்படி செல்பவன் பிருமத்தோடு ஐக்கியமாவதற்கு இதுவே நேரான மார்க்கம்!'' என்று நாங்கள் கூற முடியும்... '

---

* புத்தர் காலத்தில் மூன்று வேதங்களுக்குள்ளேயே நான்காவதான அதர்வண வேதமும் சேர்ந்திருந்தது; வேதங்களை மூன்றாகவும், நான்காகவும் குறிப்பிடுவதுண்டு.

தாங்களே அறியாத, பார்த்திராத, பிருமத்தோடு ஐக்கியமாவதற்குப் பிராமணர்கள் வழிகாட்டுதல் என்பது உலக இயல்புப்படி நடவாத காரியம்!...

குருடர்கள் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு நிற்கையில், முதலில் இருப்பவரும் பார்க்க முடியாது. நடுவில் இருப்பவரும் பார்க்க முடியாது, கடைசியில் இருப்பவரும் பார்க்க முடியாது என்பதைப்போலவே, இந்தப் பிராமணர்களுடைய பேச்சும் இருப்பதாக நான் கருதுகிறேன். முதலில் இருப்பவரும் காணவில்லை, நடுவில் இருப்பவரும் காணவில்லை. கடைசியில் இருப்பவரும் காணவில்லை. ஆகவே இந்தப் பிராமணர்களுடைய பேச்சு பரிகாசத்திற்கு இடமாயும், வெறும் சொற்குவியலாயும், பொருளற்ற வெற்றுரையாகவுமே இருக்கின்றது! '

★★

ஒருமனிதன், 'இந்த நாட்டிலுள்ள தலைசிறந்த அழகியை நான் விரும்புகிறேன்; அவளிடம் எவ்வளவு காதல் கொண்டுள்ளேன்!' என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். ஜனங்கள் அவனிடம், 'நல்லது அன்ப! நீ காதல் கொண்டு உருகும் நாட்டிலே சிறந்த நல்லழகி க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்தவளா, பிராமண குலத்தவளா, அல்லது வைசிய, சூத்திர குலத்தவளா?' என்று கேட்பார்கள். அப்போது அவன் என்ன பதில் சொல்ல முடியும்? 'தெரியாது!' என்றுதான் சொல்வான்.

'அந்தத் தலைசிறந்த அழகியின் பெயர் யாது? அவளது குலப்பெயர் என்ன? அவள் நெடிய உருவமுள்ளவளா, குள்ளமானவளா? அவள் கறுப்பா, பொதுநிறமா, சிவப்பா? அவள் எந்த நகர் அல்லது கிராமத்தில் வசிக்கிறாள்?' என்றெல்லாம் வினவினால் அவன் 'தெரியாது!' என்றுதான் பதில் சொல்ல முடியும்.

அப்போது ஜனங்கள், 'நண்பா! நீ தெரிந்திராத, பார்த்திராத, ஒரு பெண்ணிடம் காதல் கொண்டு நீ உருகுகிறாயா?' என்று கேட்பார்கள். அவனும் 'ஆம்!' என்பான்.

அதைப் போலத்தான் இதுவும். பிருமம் இருக்கிறது என்றும், அதை அறியாமலும் பாராமலும் இருப்பவர்கள், அதை அடைந்து அதனுடன் ஐக்கியமாவதற்கு வழிகாட்ட முன்வருவதும் அறிவீனமானதேயாம்... அப்படி உலகில் சாத்தியமில்லை. '

★★

அந்தணா! அக்கினியில் சமித்துக்களைச் சொரிவதால் மட்டும் பரிசுத்தம் வந்துவிடுவதாகக் கருதவேண்டாம். ஏனெனில் அது வெளியேதான் நிகழ்வது; ஆதலால் அந்த வழியை விட்டுவிட்டு, நான் எனது அக்கினியை அகத்திலுள்ளேதான் மூட்டியிருக்கிறேன். அது என்றும் எரிந்துகொண்டிருக்கும். "

# 34. சண்டாளர்கள்

சாம்பலுக்கும் பொன்னுக்கும் குறிக்கத் தகுந்த வேற்றுமை உண்டு; ஆனால் ஒரு பிராமணனுக்கும் சண்டாளனுக்கும் அத்தகைய வேற்றுமை எதுவுமில்லை. காய்ந்த கட்டையைக் கடைவதில் எழும் தீயைப்போல் பிராமணன் உண்டாக்கப் பெறவில்லை; அவன் வானத்திலிருந்து இறங்கி வரவில்லை, காற்றிலிருந்து தோன்றவில்லை, பூமியைத் துளைத்துக் கொண்டு மேல் வரவில்லை. சண்டாளன் எவ்வாறு தோன்றினானோ, அதுபோலவே பிராமணனும் ஒரு ஸ்திரீயின் கருப்பையிலிருந்து பெறப்பட்டவனேயாவான். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியான அங்கங்களைப் பெற்றிருக்கின்றனர், எள்ளளவு வித்தியாசமும் இல்லை. அவர்களை வெவ்வேறு வர்க்கங்கள் என்று எப்படிப் பிரித்துக் கருத முடியும்? மனித குலத்திலே எத்தகைய குறிப்பிட்ட வேற்றுமையும் உளது என்று கருதுவதை இயற்கை மறுத்துக் காட்டுகின்றது.

★★

கோபமுள்ளவனும் துவேஷமுள்ளவனுமான மனிதனே சண்டாளன்; தீயவனாயும், ஏமாற்றுபவனாயும், தவறு செய்பவனாயும், கரவடம் நிறைந்தவனாயும் இருப்பவனே சண்டாளன்.

எவன் கோபமூட்டுபவனாயும், பேராசையுள்ளவனாயும், பாவகரமான ஆசைகளுள்ளவனாயும், பொறாமை, அயோக்கியதை, வெட்கமின்மை, பாவங்கள் செய்வதில் பயமின்மை ஆகியவற்றோடு விளங்குபவனாகவும் இருக்கின்றானோ, அவனையே சண்டாளன் என்று அறியவும்

பிறப்பினால் ஒருவன் சண்டாளனாவதில்லை; பிறப்பினால் ஒருவன் பிராமணனாவதுமில்லை; செயல்களினாலேயே ஒருவன் சண்டாளனாகிறான், செயல்களினாலேயே ஒருவன் பிராமணனாகிறான். "

★★

உயிர்களுக்குத் ததாகதர் (புத்தர்) போதனை செய்கையில், பாரபட்சம் காட்டுவதேயில்லை. சூரியனும், சந்திரனும், நல்லவர் தீயவர் என்றோ, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றோ, மணமுள்ளவர் மணமற்றவர் என்றோ வேற்றுமை பாராமல், உலகம் முழுவதற்கும் ஒளி செய்வது போலவும், அவைகளின் கதிர்கள் பாரபட்சமின்றி எல்லாப் பொருள்களின் மீதும் பரவுதல் போலவும், ததாகதர் போதிக்கும் அறிவொளி உயிர்கள் அனைத்திற்கும் சமமாகவே வருகின்றது.

# 35. பெண்கள்

**ஆனந்தர்:** பகவ, பெண்கள் சம்பந்தமாக நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

**புத்தர்:** ஆனந்த! அவர்களைப் பார்க்கவே வேண்டாம்.

**ஆனந்தர்:** ஆனால் அவர்களைப் பார்க்க நேர்ந்துவிட்டால் என்ன செய்யவேண்டும்?

**புத்தர்:** ஆனந்த! பேசாமல் இருந்துவிடுங்கள்!

**ஆனந்தர்:** பிரபு! அவர்கள் எங்களிடம் பேசினால், நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

**புத்தர்:** ஆனந்த, மிகவும் எச்சரிக்கையுடன் விழிப்பாயிருக்கவும்! [5]

★★

மனிதன் பெண்களிடம் கொள்ளும் ஆசை அழிக்கப்படாமல் மிகவும் சிறிதளவாவது மிஞ்சியிருக்கும்வரை, பால்குடிக்கும் கன்று தாயிடம் பற்றுக்கொண்டிருப்பது போல, அவன் மனம் பற்றில் தோய்ந்தேயிருக்கும். [1]

★★

## பிக்குணிகளுக்குரிய முக்கிய விதிகள்

1. ஒரு பிக்குணி நூறு வயதானவளாயிருந்தாலும், ஒரு பிக்கு எவ்வளவு இளைஞனாயிருந்தாலும், அவனைக் கண்டதும், அவள் எழுந்து வணங்க வேண்டும்.
2. ஒரு பிக்குகூட இல்லாத பிராந்தியத்தில் பிக்குணி மாரிக் காலத்தில் தங்கியிருக்கக்கூடாது.
3. ஒவ்வொரு பட்சத்திலும் (மாதம் இருமுறை) பிக்குணி பிக்குகளிடம் தரும உபதேசம் பெற வேண்டும்.
4. வருஷா காலம்* முடிவடையும்பொழுது பிக்குகளும், பிக்குணி களும் கூடிய சங்கத்தின் முன்பு மற்றவர் கண்டும், கேட்டும், சந்தேகித்தும் உள்ள விஷயங்களைப் பற்றிப் பிக்குணி விசாரணைக்கு உட்பட்டிருக்க வேண்டும்.
5. பெருந் தவறு புரிந்துள்ள பிக்குணி, ஒரு பட்ச காலம் அதற்குப் பரிகாரம் தேடிக்கொண்டு, இருபாலாரும் கூடியுள்ள சங்கத்தின் நன்மதிப்பைப் பெறவேண்டும்.

---

* வருஷா காலம் - மழை காலம்.

6. இரண்டு வருஷா காலங்கள் முடிய இந்த விதிகளில் ஆறு விதிகளை முறையாகக் கடைப்பிடித்து வந்த பிக்குணி பயிற்சி முடிந்து, இரு பாலாரும் சேர்ந்துள்ள சங்கத்திடம் பிக்குணிக்குரிய முழு அந்தஸ்தையும் பெறலாம்.

7. எக்காரணத்தையிட்டும் பிக்குணி, ஒரு பிக்குவை ஏசவோ, கண்டிக்கவோ கூடாது.

8. பிக்குணி பிக்குகளிடம் பேசுதல் கூடாது. ஆனால் அவர்கள் அவளிடம் பேசலாம். [10]

★★

பெண் வயது முதிர்ந்தவளாயிருந்தால், அவளை உங்கள் தாயாகப் பாவிக்கவும், இளமையாயிருந்தால், உங்கள் சகோதரியாகப் பாவிக்கவும் மிகவும், சிறுமியாயிருந்தால், உங்கள் குழந்தையாகப் பாவிக்கவும்.

★★

ஆடவர்களின் காமம் கொடூரமானது, அதைக் கண்டு அஞ்ச வேண்டும்; ஆதலால் இடைவிடா முயற்சி என்னும் வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு, ஞானம் என்னும் கூரிய அம்புகளைத் (தயாராகத்) தொடுத்து வைக்கவும்.

# 36. நால்வகை வாய்மைகள்

*1. ஓ பிக்குகளே! துக்கத்தைப் பற்றிய உயரிய வாய்மை இது:*

*பிறப்பிலே வேதனை இருக்கின்றது; தளர்ச்சி வேதனை, பிணி வேதனை, மரணம் வேதனை, இன்ப கரமாயில்லாதவைகளின் சேர்க்கை வேதனை, இன்பகரமானவைகளிலிருந்து பிரிதல் வேதனை, நிறைவேறாத ஆசையும் வேதனையானது. சுருங்கக் கூறினால், பற்றுக் காரணமாக எழும் ஐந்து உபாதானக் கந்தங்களுமே* வேதனையா யுள்ளவை.*

*2. ஓ பிக்குகளே! துக்க உற்பத்தி பற்றிய உயரிய வாய்மை இது.*

*உண்மையில் இதுதான் வேட்கை - புதுப்பிறவிக்குக் காரணமானதும், புலன்கள் இன்பத்தோடு அங்கும் இங்குமாக அலைந்து இன்பத்தேட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தூண்டுவதுமான வேட்கை; அதாவது (காமம் முதலிய) உணர்ச்சிகளைத் திருப்தி செய்யவோ, எதிர்கால வாழ்வில் ஆசை கொள்ளவோ, அல்லது (இந்த வாழ்வில்) வெற்றியடையவோ, கொள்ளும் பேராவல்.*

*3. ஓ பிக்குகளே! துக்க நீக்கத்தைப் பற்றிய உயரிய வாய்மை இது:*

*வேட்கை சம்பந்தமான காமிய உணர்ச்சி எதுவும் எஞ்சியிராமல் அழிந்து விடுதலே இது (துக்க - நீக்கம்) - இந்த வேட்கையை ஒதுக்கி உதறித் தள்ளிவிட்டு, இதிலிருந்து அறவே விடுதலையாகி, (உள்ளத்தில்) இது தங்குவதற்கு இடமேயில்லாமற் செய்தலாகும்.*

*4. ஓ பிக்குகளே! துக்க நீக்கத்திற்கு உரிய மார்க்கம் பற்றிய உயரிய வாய்மை இது; உண்மையில்,இது அஷ்டாங்க மார்க்கமே; அதாவது:*

| | |
|---|---|
| நற்காட்சி | நல்வாழ்க்கை |
| நல்லூற்றம் | நல்லூக்கம் |
| நல்வாய்மை | நற்கடைப்பிடி |
| நற்செய்கை | நல்லமைதி |

*ஆகிய எட்டுப்படிகள் உள்ள வழி.* [3]

★★

*பிக்குகளே! நால்வகை ஆரிய (மேலான) உண்மைகளை உணர்ந்து கொள்ளாமலும், ஊடுருவிப் பார்க்காமலும் இருந்ததாலேயே, நீங்களும் நானும், இந்த (ப் பிறப்பு - இறப்பாகிய சம்சார) யாத்திரையில் நெடுந்தூரம் சென்று சுற்றியலைந்துவிட்டோம்.* [4]

---

* கந்தங்கள் - ஸ்கந்தங்கள்; அவை உருவு (ரூபம்); நுகர்ச்சி (வேதனை), குறி (ஸம்ஜ்ஞை), பாவனை (ஸம்ஸ்காரம்), உள்ள அறிவு (விஞ்ஞானம்) என்பவை.

# 37. அஷ்டாங்க மார்க்கம்

*(இது எட்டு அம்சங்களைக் கொண்ட பயிற்சி முறை. அந்த எட்டு அம்சங்களாவன: நற்காட்சி (Right View), நல்லூற்றம் (Right Aspiration), நல்வாய்மை (Right Speech), நற்செய்கை (Right Activity), நல்வாழ்க்கை (Right Living), நல்லூக்கம் (Right Effort), நற்கடைப்பிடி (Right Mindfulness), நல்லமைதி (Right Contemplation))*

நற்காட்சி: துக்கத்தைப் பற்றியும், துக்க உற்பத்தியைப் பற்றியும், துக்க நிவாரணத்தைப்பற்றியும், துக்க நிவாரண மார்க்கத்தைப் பற்றியும் அறிந்திருப்பதே நற்காட்சி எனப்படும்.

நல்லூற்றம்: நல்லூற்றம் என்பது என்ன, பிக்குகளே? (புலன் இன்பங்களைத்) துறத்தல், மனக்காழ்ப்புக் கொள்ளாமை, அஹிம்சை ஆகியவற்றில் உறுதியாக நிற்றலேயாகும்.

நல்வாய்மை: பொய்யுரையிலிருந்தும், புறங்கூறுவதிலிருந்தும், நிந்தைப் பேச்சிலிருந்தும், பயனற்ற சோம்பேறிப் பேச்சிலிருந்தும் ஒதுங்கியிருத்தல் - பிக்குகளே, அதுவே நல்வாய்மை எனப்படுவது!

நற்செய்கை: உயிர்க்கொலை, தமக்கு அளிக்கப் பெறாதவைகளைக் கவர்ந்து கொள்ளல், முறை தவறிய சிற்றின்ப உணர்ச்சிகள் ஆகியவற்றிலிருந்து விலகல் - பிக்குகளே, அதுவே நற்செய்கை எனப்படும்!

நல்வாழ்க்கை: தவறான வழியில் வாழ்க்கை நடத்துவதை விட்டு, நியாயமான முறையில் ஆரியச்சீடன் தன் ஜீவனத்துக்கு வேண்டிய வருவாயைப் பெறுகிறான் - பிக்குகளே அதுவே நல்வாழ்க்கை!

நல்லூக்கம்: பிக்குகளே! இதிலே, (சீடன்) இதற்குமுன் தோன்றியிராத ஒழுக்கக் குறைவான நிலைமைகள் எழாதபடி சித்த உறுதியை ஏற்படுத்திக் கொள்கிறான்; அவன் முயற்சி செய்கிறான், (அதற்குரிய) ஆற்றலைப் பயன்படுத்துகிறான், உள்ளத்தை (அதன்மீது) செலுத்தப் போராடுகிறான். இதேபோல, ஏற்கனவே எழுந்துள்ள தீய ஒழுக்கக் குறைவான நிலைமைகளை நீக்குவதற்கும் அவ்வாறே செய்கிறான். இதேபோல, இதுவரை தோன்றியிராத நல்ல நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்காக அவன் அவ்வாறு செய்கிறான். ஏற்கனவே எழுந்துள்ள நல்ல நிலைமைகள் நிலைபெறுவதற்காகவும், அவை பழுதாவதைத் தடுப்பதற்காகவும், அவை பெருகும்படி செய்வதற் காகவும் அவைகளைப் பழக்கப்படுத்திப் பயன் பெறுவதற்காகவும் அவன் அவ்வாறே செய்கிறான். பிக்குகளே, இதுவே நல்லூக்கம் எனப்படும்.

நற்கடைப்பிடி: பிக்குகளே! இதிலே ஒரு பிக்கு, உடல் (கந்தங்களாலாகிய) கலப்பு என்று கருதி, ஊக்கத்துடனும், நிலைத்த சிந்தையுடனும், உலகிலுள்ள பேராசையையும் அயர்வையும் அடக்குவதன் மூலம் சாந்தி பெற்றும் வசித்திருக்கிறான். (உடலைப் போலவே) உணர்ச்சி சம்பந்தமாயும், புலன்களின் அறிவு (இந்திரிய ஞானம்) சம்பந்தமாயும், செய்கைகள் சம்பந்தமாயும் ... மனத்தின் சிந்தனைகள் சம்பந்தமாயும் (அவன் அடக்க வேண்டியவைகளை) அடக்கி வாழ்ந்து வருவான். பிக்குகளே, இதுவே நற்கடைப்பிடி எனப்படும்!

நல்லமைதி: பிக்குகளே! இதிலே ஒரு பிக்கு, புலன்களின் ஆசைகளிலிருந்து ஒதுங்கி,தீய நிலைகளிலிருந்தும் ஒதுங்கி, குறித்த ஒரு பொருளைச் சார்ந்து நிலைத்த சிந்தனையுடன் முதலாவது தியானத்தில் பிரவேசிக்கிறான். இது ஏகாந்த வாசத்தில் தோன்றும், ஆர்வமும் ஆனந்தமும் நிறைந்தது.

பிறகு, நிலைத்த சிந்தனையையும் நீக்கிவிட்டு, அவன் இரண்டாவது தியானத்தில் பிரவேசிக்கிறான்; அது (அந்நிலை) உள்ளமைதியாகும். மன உறுதியை மேலும் வலுப்படுத்துவதுமாகும். அதிலே நிலைத்த சிந்தனையில்லை. சித்தத்தை ஒருநிலைப்படுத்துவதில் அது தோன்றுவது, ஆர்வமும் ஆனந்தமும் நிறைந்தது.

பிக்குகளே! பின்னர் ஆர்வமும் தேய்ந்து மறைவதால், அவன் சமநிலை (அதாவது சமசித்தத்துவம் என்ற உபேட்சை நிலை) பெறுகிறான். அவன் சிரத்தையுடனும் மனநிறைவுடனும் இருக்கிறான்; அவன் உடலோடு இருக்கும்போதே ஆனந்த நிலையை அடைகிறான் - அந்நிலையையே ஆரியர்கள் (மேலோர்கள்) 'இராகத் துவேஷங்களற்ற ஏகாக்ரக சிந்தனையுடைய மனிதன் ஆழ்ந்த நிலையில் வாழ்கிறான்' என்று கூறுகிறார்கள். இவ்வாறு அவன் மூன்றாவது தியானத்தில் பிரவேசித்து, அதிலேயே நிலைத்திருக்கிறான்.

பிக்குகளே! பின்னர், இன்பத்தையும் துன்பத்தையும் துறந்து, அவன் முன் பெற்றிருந்த ஆனந்தத்தையும் சோகத்தையும் நீத்து, நான்காவது தியானத்தில் பிரவேசித்து, அதிலேயே அவன் நிலைத்திருக்கிறான்; அந்நிலை இன்ப துன்பங்கள், ஆனந்தம் ஆகியவை அற்ற நிலை - சமநிலையும், நிறைவும் கொண்ட பரிசுத்தநிலை. இதுவே நல்லமைதி எனப்படும்.[9]

* வைராக்கியம் - ஆசைகளை வெறுத்து ஒதுக்கல், வெறுப்பு.

** ஞானக்கண் - உண்மையை ஊடுருவிப் பார்க்கும் சக்தி.

மார்க்கங்களில் அஷ்டாங்க மார்க்கமே சிறந்தது. வாய்மையில் நான்கு வாய்மைகளே சிறந்தவை; சீலங்களில் வைராக்கியமே* சிறந்தது; மக்களில் ஞானக்கண்** உடையவனே சிறந்தவன். [1]

## 38. பன்னிரு நிதானங்கள்

பிறவி ஏற்படக் காரணமாகிய விதிகளைப்பற்றி விவாதம் செய்யக் கூடிய அறிவாளர் அநேகர் இங்கே இருக்கின்றனர்; ஆனால் பிறப்பை நிறுத்தும் வழியை அறிந்தவர் ஒருவர்கூட இல்லை. [16]

★★

நான் அடைந்த தருமம் ஆழ்ந்த பொருளுடையது, பார்வைக்கு அரியது, உணர்ந்து கொள்வதற்கு அரியது, நேர்த்தியானது, முதன்மையானது (சாதாரணச்) சிந்தனைக்கு அப்பாற்பட்டது, நுட்பமானது, ஞானிகளால் மட்டுமே உய்த்துணரத்தக்கது.

ஆனால் மக்களுடைய இந்த உலகம் தான் பற்றுக்கொண்டதை விடாது பிடித்துக் கொள்கின்றது. தான் பற்றுக் கொண்டதில் இன்பமடைகின்றது.

---

* சார்புகள் காரணமாகப் பொருள்கள் உற்பத்தியாவதைப் 'பதிச்ச - சமுப்பாதம்' என்ற பௌத்த தருமம் கூறும். சார்புகள் என்பவை நிதானங்கள் அல்லது காரணங்கள்; அவை பன்னிரண்டு:

1. பேதைமை - (அவித்தை - ignorance)
2. செய்கை - (ஸம்ஸ்காரங்கள் - thought ideations)
3. உணர்ச்சி - (விஞ்ஞானம் - cognitions)
4. அருவுரு - (நாமரூபங்கள் - name and form)
5. வாயில் - (ஷடாயதனங்கள் - six organs of sense)
6. ஊறு - (ஸ்பரிசம் - contact)
7. நுகர்ச்சி - (வேதனை - feelings or emotions)
8. வேட்கை - (திருஷ்ணை - craving)
9. பற்று - (உபாதானம் - attachment)
10. கருமத்தொகுதி - (பவம் - accumulated karma)
11. தோற்றம் - (பிறப்பு - re-birth)
12. வினைப்பயன் - (மரணம் - old age, death ect.)

பேதைமையிலிருந்து செய்கையும், செய்கையிலிருந்து உணர்ச்சியும், இவ்வாறே ஒன்றைக் காரணமாகக் கொண்டு அடுத்ததும் தோன்றும். எனவே பிறப்புக்கு மூலகாரணம் பேதைமை.

தான் பற்றுக்கொண்டதில் திளைத்து நிற்கின்றது. இந்த உலகம் இவ்வாறு (பொருள்களைப்) பற்றிக் கொள்வதால், சார்புகள்* காரணமாகவே பொருள்கள் உற்பத்தியாகின்றன என்பதை மக்கள் உணர்ந்து கொள்வது கஷ்டமாயுள்ளது. செயல்கள் யாவும் ஒடுக்கிய நிலையை அடைய முடியும் என்பதையும், பிறவிக்குக் காரணமான அடிப்படைகள் யாவற்றையும் ஒதுக்கிவிட முடியும் என்பதையும், வேட்கையை அழித்தல், உணர்ச்சிகளை அடக்கல், சிந்தையை அடக்கியே சும்மா இருத்தல் ஆகியவையே நிருவாணம் என்பதையும் மக்கள் புரிந்து கொள்வது கஷ்டமேயாகும்.[10]

**

இப்பொழுது எது இருப்பதால் அழிவும் மரணமும் ஏற்படுகின்றன? அழிவுக்கும் மரணத்திற்கும் காரணமாயுள்ளது எது?

எங்கே பிறப்பு உளதோ, அங்கே அழிவும் மரணமும் இருக்கின்றன; அழிவும் மரணமும் பிறப்பினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

எது இல்லாமலிருந்தால், பிறப்பு, தோற்றம், பற்று, வேட்கை, நுகர்ச்சி, ஊறு, ஆறுவகைப் புலன்கள் (நாம - ரூபமாகிய) மனமும் - உடலும் ஏற்படுகின்றன? மன - உடலை நிர்ணயிக்கும் காரணம் எது?

உணர்ச்சி (விஞ்ஞானம்) எங்கே உளதோ, அங்கே மன - உடலும் உண்டு; மன - உடலின் தோற்றத்திற்கு உணர்ச்சியே காரணம்.

இப்பொழுது எது இருப்பதால், உணர்ச்சி இருக்கின்றது? உணர்ச்சிக்கு காரணமானது எது?

மன - உடல் எங்கு இருக்கின்றதோ, அங்கே உணர்ச்சியும் உளது;மன - உடலே உணர்ச்சியை நிர்ணயிக்கின்றது.

இந்த உணர்ச்சி மன - உடலிலிருந்து திரும்புகின்றது. அதற்கு அப்பால் அது செல்வதில்லை. இந்த அளவுக்கு ஒருவன் பிறக்கலாம், அழியலாம் அல்லது மரிக்கலாம், அல்லது ஒரு நிலையிலிருந்து வேறு நிலைக்கு மாறலாம். அதாவது மன - உடல் காரணமாக உணர்ச்சி அமைகின்றது; உணர்ச்சி காரணமாக மன - உடல் அமைகின்றது. மன - உடல் காரணமாக ஆறு வகை வாயில்களும் அமைகின்றன, ஆறு வகை வாயில்கள் காரணமாக ஊறு (ஸ்பரிசம்) முதலியவையும் அமைகின்றன.

பிக்குகளே! துக்கம் யாவும் தோன்றுவது இவ்வாறுதான்.

எங்கே மறுபிறப்பு இல்லையோ, அங்கே அழிவும் மரணமும் இல்லை. மறுபிறப்பு நின்றதும், அழிவும் மரணமும் நின்று விடுகின்றன.

உணர்ச்சி இல்லாத நிலையில் மன - உடலும் இல்லை; உணர்ச்சி நின்றதும், மன - உடலும் நின்றுவிடுகின்றது.

மன - உடல் இல்லாத நிலையில் உணர்ச்சியும் இல்லை; மன - உடல் நின்றதும் உணர்ச்சியும் நின்றுவிடுகின்றது. "

★★

பிக்குகளே! 'பதிச்ச - சமுப்பாதம்' (பொருளுற்பத்திக்குரிய காரண நியதி) என்பது என்ன?

செய்கைகள் பேதைமையால் நிர்ணயிக்கப்படுகின்றன; உணர்ச்சி செய்கைகளால் நிர்ணயிக்கப்படுகின்றது; அரு - உரு(நாம - ரூபம்) உணர்ச்சியால் நிர்ணயிக்கப்படுகின்றது; வாயில் (புலன்களின் உணர்வு) அரு - உருவால் நிர்ணயிக்கப்படுகின்றது; நுகர்ச்சி ஊற்றினால் நிர்ணயிக்கப்படுகின்றது; வேட்கை நுகர்ச்சியால் நிர்ணயிக்கப் படுகின்றது; கருமத் தொகுதி பற்றினால் நிர்ணயிக்கப்படுகின்றது. தோற்றம் (பிறப்பு) கருமத்தொகுதியால் நிர்ணயிக்கப்படுகின்றது; வினைப்பயன் தோற்றத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது. துக்கம் அனைத்தும் தோன்றுவது இவ்வாறுதான்.

ஆனால் பேதைமை அறவே நீங்கி அழிந்து விட்டால் செய்கையும் தீர்ந்துவிடும்.

'செய்கை மீள, உணர்ச்சி மீளும்,
உணர்ச்சி மீள, அருவுரு மீளும்,
அருவுரு மீள, வாயில் மீளும,
வாயில் மீள, ஊறு மீளும்,
ஊறு மீள, நுகர்ச்சி மீளும்,
நுகர்ச்சிமீள, வேட்கை மீளும்,
வேட்கை மீளப் பற்று மீளும்,
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளும், கருமத்தொகுதி மீளத்
தோற்றம் மீளும், தோற்றம் மீளப்
பிறப்பு மீளும், பிறப்புப் பிணிமூப்புச்
சாக்காடு அவசலம் அரற்றுக்கவலை
கையாறு என்(று)இக் கடையின் துன்பம்
எல்லாம் மீளும்... *

துக்கம் அனைத்திலிருந்தும் மீட்சி பெறுதல் இவ்வாறுதான். "

★★

பிக்குகளே! வினைப்பயன் (முதுமை, மரணம் முதலியவை) என்பது என்ன?

* மணிமேகலை.

குறித்த மனிதர்களும், (விலங்கு, பறவை முதலிய இனங்களில்) குறித்த இனத்தைச் சார்ந்தவைகளும் தளர்ச்சியுறுதல், முதுமையடைதல், சிதைவுறுதல், நரைத்தல், சுருக்கு விழுதல், ஆயுள் குறுகல், வலிமையும், உணர்வுத் திறன்களும் குன்றுதல் ஆகியவையே அது. அது முதுமை எனப்படும்.

குறித்த மனிதர்கள் அல்லது ஜந்துக்கள் அழிந்து ஒழிதல், சிதறுண்டு போதல்,மறைதல், நிலையற்றுப்போதல், மரித்தல், ஒரு முடிவுக்கு வருதல், கந்தங்கள் சிதைந்து பிரிதல், உடல்அழிதல் - இது மரணம் எனப்படும். இந்தத் தளர்ச்சியும், இந்த இறப்பும் மூப்புச் - சாக்காடு எனப்படும்.

பிக்குகளே! தோற்றம் (பிறப்பு) என்பது என்ன?

குறித்த மனிதர்களாகவோ, ஜந்துக்களாகவோ பிறப்பை அடைதல், உற்பத்தியாதல், இறங்கி வருதல், கருவிலிருந்து ஜனித்தல், கந்தங்கள் ஒன்று சேர்ந்து (உருப்பெற்று) வெளித்தோன்றுதல், புலன்களின் உணர்ச்சிகளைப் பற்றுதல் - இதுவே தோற்றம் எனப்படும்.

பிக்குகளே! கருமத்தொகுதி (பவம்) என்பது என்ன?

கருமத் தொகுதிகள் மூன்று வகைப்படும்: சுவர்க்கம் முதலிய உலகங்களிலோ, பூவுலகம் போன்ற உலகங்களிலோ, கட்புலனாகாத உலகங்களிலோ, தோன்றுவதற்கு ஆயத்தமாதல். இது பவம் எனப்படும்.

பிக்குகளே! பற்று என்பது என்ன?

பற்றுக்கள் நான்கு வகைப்படும்; ஆசைகளைப் பற்றுதல், கருத்துக்கள் அல்லது கொள்கைகளைப் பற்றுதல், (யக்ஞும், பூசை முதலிய) கிரியைகளைப் பற்றுதல், 'நான்' என்ற அகங்காரத்தைப் பற்றுதல் - இது பற்று எனப்படும்.

பிக்குகளே! வேட்கை என்பது என்ன?

வேட்கையில் ஆறு தொகுதிகள் உண்டு: உருவத்திலே கொள்ளும் அவா, ஒலியிலே கொள்ளும் அவா, முகர்வனவற்றிலே கொள்ளும் அவா, சுவைகளிலே கொள்ளும் அவா, தூலப் பொருள்களிலே கொள்ளும் அவா, கருத்துக்களிலே கொள்ளும் அவா - இது வேட்கை எனப்படும்.

பிக்குகளே! நுகர்ச்சி என்பது என்ன?

நுகர்ச்சியில் ஆறு தொகுதிகள் உண்டு.

கட்புலன் சம்பந்தமாகத் தோன்றும் நுகர்ச்சி,<br>
செவிப்புலன் சம்பந்தமாகத் தோன்றும் நுகர்ச்சி,<br>
நாசி சம்பந்தமாகத் தோன்றும் நுகர்ச்சி,<br>
நா சம்பந்தமாகத் தோன்றும் நுகர்ச்சி,

உடல் சம்பந்தமாகத் தோன்றும் நுகர்ச்சி,
மனம் சம்பந்தமாகத் தோன்றும் நுகர்ச்சி,
இது நுகர்ச்சி எனப்படும்.

பிக்குகளே! ஊறு (ஸ்பரிசம்) என்பது என்ன?

ஊறு ஆறு தொகுதிகளுள்ளது; கண், செவி, நாசி, நா, உடல், மனம் ஆகிய ஒவ்வொன்றின் சம்பந்தமாகத் தோன்றும் ஸ்பரிசம் - இது ஊறு எனப்படும்.

பிக்குகளே! வாயில் (ஆறு வகைப்புலன்) என்பது என்ன?

கண், செவி, நாசி, நா,உடல், மனம் ஆகிய புலன்களில் ஒவ்வொன்றும் (வாயிலாம்) - இது வாயில் (ஆறு வகைப் புலன்) எனப்படும்.

பிக்குகளே! அருவுரு என்பது என்ன?

உணர்வு, பகுத்தறிதல், தீர்மானித்தல், வெளித்தொடர்பு கொள்ளல் ஆகிய மனநிகழ்ச்சிகள் அருவம் எனப்படும். நால்வகைப் பூதங்களும், அவைகளை ஆதாரமாய்க் கொண்ட உடலும் உருவம் எனப்படும். அருவமும், உருவமும் இத்தகையது. (இவை இரண்டும் சேர்ந்த) இது அருவுரு எனப்படும்.

பிக்குகளே! உணர்ச்சி என்பது என்ன?

உணர்ச்சி ஆறு தொகுதிகளாயுள்ளது; கண், செவி, நாசி, நா, உடல், மனம் ஆகிய ஒவ்வொன்றின் சம்பந்தத்தினாலும் ஏற்படும் உணர்ச்சி. இது உணர்ச்சி எனப்படும்.

செய்கைகள் என்பவை யாவை?

செய்கைகள் மூன்று வகை: உடலின் செய்கை, வாக்கின் செய்கை, மனத்தின் செய்கை. இவை செய்கைகள் எனப்படும்.

செய்கைகள் என்பவை யாவை?

செய்கைகள் மூன்று வகை: உடலின் செய்கை, வாக்கின் செய்கை, மனத்தின் செய்கை, இவை செய்கைகள் எனப்படும்.

பேதைமை என்பது என்ன?

துக்கத்தைப் பற்றியும், துக்கம் தோன்றுவதைப் பற்றியும், துக்கத்தை நீக்குதல் பற்றியும், துக்கத்தை நீக்கும் மார்க்கத்தைப் பற்றியும் அறியாதிருத்தல். இது பேதைமை எனப்படும். ஆகவே, பிக்குகளே, செய்கைகள் பேதைமையைச் சார்புகொண்டு ஏற்படுகின்றன, உணர்ச்சி செய்கைகளைச் சார்புகொண்டு ஏற்படுகின்றன, இவ்வாறே மற்றவைகளும் ஏற்படுகின்றன... இவ்வாறு தோன்றுகின்றது துக்கம் அனைத்தும்.

ஆனால் பேதைமை அடியோடு மறைந்தொழிவதிலிருந்து செய்கைகளும் தீர்ந்துவிடுகின்றன. செய்கைகள் தீர்வதிலிருந்து உணர்ச்சி தீர்ந்துவிடுகின்றன. இவ்வாறே மற்றவையும் தீர்ந்துவிடுகின்றன... இவ்வாறு துக்கம் அனைத்தும் தீர்ந்து போகின்றது. "

('பதிச்ச - சமுப்பாதத்தையும், அதைக் காரணமாய்க் கொண்டே உயிர்கள் தோன்றுவதையும் நன்கு தெரிந்துகொண்ட சீடன் தன் இறந்தகால நிலைமையையோ, எதிர்கால நிலைமையையோ, நிகழ்கால நிலைமையையோ எண்ணி ஆராய்ந்து கொண்டிருப்பானா? 'முன்பு நான் இருந்தேனா? அல்லது நான் இல்லையா? முன்பு நான் எதுவாயிருந்தேன்? முன் எப்படி இருந்தேன்? முன்பு நான் எதுவாயிருந்து எதுவாக மாறினேன்... நான் இனி இருப்பேனா, அல்லது இருக்க மாட்டேனா? எதிர்காலத்தில் நான் எதுவாக இருப்பேன்? எதிர்காலத்தில் நான் எப்படியிருப்பேன்? எதிர்காலத்தில் எதுவாயிருந்து, எதுவாக மாறுவேன்?... இப்போது நான் இருக்கிறேனா, அல்லது இல்லையா? நான் எதுவாக இருக்கிறேன்? நான் எப்படியிருக்கிறேன்? இந்த 'நான்' எங்கிருந்து வந்தது, எங்கே செல்லும்?' - இத்தகைய வினாக்களை எழுப்பி, உண்மையமான ஆரியச் சீடன் விசாரணை செய்துகொண்டிருப்பானா என்பதற்குப் புத்தர் பெருமான் அருளிய மறுமொழி வருமாறு:)

★★

ஒருகாலும் இல்லை! அவ்வாறு நடப்பது சாத்தியமில்லை! ஏன் சாத்தியமில்லை?

ஏனெனில், ஆரியச் சீடன் தனது நற்காட்சியால், பதிச்ச - சமுப்பாதத்தையும், அதன் காரணமாகவே எல்லாப் பொருள்களும் தோன்றியிருப்பதையும் உண்மையான முறையில் அறிந்திருக்கிறான். "

# 39. ஆன்மா

பிக்குகளே! உடல் ஆன்மாவற்றது. பிக்குகளே, உடல் ஆன்மாவாயிருந்தால், இந்த உடல் நோய்க்கு உட்படாது; உடல் சம்பந்தமாக, 'என் உடல் இப்படியிருக்கட்டும், என் உடல் அப்படியிருக்கட்டும்' என்று சொல்லக் கூடியதாக இருக்கும். பிக்குகளே, உடல் ஆன்மாவற்றதாக இருப்பதாலேயே உடல் நோய்க்கு உள்ளாகின்றது. 'என் உடல் இப்படி யிருக்கட்டும், என் உடல் அப்படியிருக்கட்டும்' என்று சொல்ல முடியவில்லை. [24]

★★

ஆதலால் பிக்குகளே, இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் ஆகிய எந்தக் காலத்திலும் உள்ள எந்த உடலையும் உணர்ந்து கொண்டவன் - அதன் தோற்றத்தைக் கொண்டோ, அதன் தூல உருவைக்கொண்டோ, சூக்கும உருவைக்கொண்டோ, அது தாழ்ந்திருந்தாலும், உயர்ந்திருந்தாலும், அது அருகிலிருந்தாலும், தொலைவிலிருந்தாலும், அது முறையாகவும் சரியாகவும் உணர்ந்து கொண்டவன், 'இந்த உடலெல்லாம் என்னுடையதன்று, இது நான் அன்று, ஆன்மா என்னுடையது அன்று!' என்று கருதவேண்டும். [24]

★★

'படைக்கப் பெற்ற யாவும் அநித்தியம் - நிலையற்றவை' - இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அமுங்குவதில்லை; இதுவே விசுத்தி (பரிசுத்தமான) மார்க்கம். [1]

★★

'படைக்கப்பெற்ற யாவும் துக்கமயமானவை' - இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை: இதுவே விசுத்தி மார்க்கம். [1]

★★

'படைக்கப் பெற்ற யாவும் அநாத்மம்* இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுங்குவதில்லை; இதன் விசுத்தி மார்க்கம். [1]

★★

மனிதன் பல பொருள்களின் சேர்க்கையாக விளங்குவோன் அல்லவா? கந்தங்கள் என்று நம் முனிவர்கள் கூறும் பல தாதுக்களின் சேர்க்கையாகவே நாம் இருக்கிறோம் அல்லவா? மனிதன் தூல

*அநாத்மம் - ஆன்மா இல்லாதவை; உலகில் எல்லாம் அநித்தம், துக்கம், அநாத்மம் என்பது பௌத்த தருமத்தின் அடிப்படைக் கொள்கை. ஒவ்வொரு மனிதனுக்கும், ஜந்துவுக்கும் அழிவில்லாத தனி ஆன்மா ஒன்று இல்லை என்பதே 'அநாத்மம்' என்பதன் பொருள்.

உருவையும், உணர்ச்சியையும், சிந்தனா சக்தியையும், (நன்மை தீமைகளை) அறியும் ஆற்றலையும் பெற்றிருக்கிறான். 'நான் இருக்கிறேன்' என்று மக்கள் கூறும்போது குறிப்பிடும் ஆணவம் கந்தங்களுக்குப் பின்னால் தங்கி நிற்கும் தனிப்பொருள் அன்று. மனம் உளது; உணர்ச்சியும் சிந்தனையும் உள, உண்மையும் உளது; நீதியான வழியில் மனம் செல்லும்போது அதுவே உண்மையாகும். மனிதனின் சிந்தனையைத் தவிர, அதற்குப் புறம்பாக 'நான்' என்று கருதத்தக்க தனியான ஆன்மா ஒன்று இல்லை. ஆணவம் தனித்தன்மையுடன் நிலையாயுள்ளது என்று நம்புகிறவன் பொருள்களின் உண்மை நிலையை உணராதவனாவான். ஆன்மாவைத் தேடி அலைவதே தவறு; அந்த ஆரம்பமே தவறாயுள்ளது, அது தவறான திசையிலேயே கொண்டு செலுத்தும். [3]

★★

சத்தியத்தின் முன்னிலையில் தான் என்னும் தனித்தன்மை அழிந்து, ஒருவன் தான் செய்ய வேண்டிய கடமையைப் பற்றியே கருத்துக் கொண்டும், அதை நிறைவேற்றும் ஆசை ஒன்றையே கொண்டும் விளங்கினால், அவனுக்கு முக்தி நிச்சயம். [25]

★★

(தான் தனியான ஆன்மா என்று கருதும்) ஆணவம் ஒரு ஜுரம்; அது நிலையற்ற ஒரு காட்சி, ஒரு கனவு; ஆனால் உண்மை புனிதமானது, ஆழமுள்ளது, நிலையானது, தருமத்தின் மூலமே நித்திய வாழ்வு பெறலாம். தருமமே என்றும் உள்ளது. [25]

★★

ஒருவன் தன் ஆணவத்தின் உண்மையையும், தன் புலன்களின் போக்கையும் உணர்ந்துகொண்டால், 'நான்' என்பதற்கு இடமில்லை என்று தெரிந்து கொள்வான்; அதன்மூலம் அவன் நிலையான சாந்தியைப் பெறுவான். உலகம் 'நான்' என்ற எண்ணத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்றது. அதிலிருந்து தவறான காட்சியே தோன்றுகின்றது. [25]

★★

பேதைமையாலும், மயக்கத்தாலுமே மனிதர்கள் தங்கள் ஆன்மாக்கள் தனித்தனியானவை என்றும், (எவ்விதச் சார்புகளுமில்லாது, சுயமாக) நித்தியமா யுள்ளவை என்றும் கனவு காண்கிறார்கள். [25]

★★

பேதை தன் தனி 'ஆன்மா' என்ற கருத்தை மேற்கொள்கிறான்; ஆனால் ஞானி அதற்கு ஆதாரமில்லை என்று காண்கிறான். இதனால் அவன் உலகைப் பற்றிய சரியான கருத்தைப் பெறுகிறான்; துக்கத்தால் ஒன்றுசேர்க்கப் பெற்றவை யாவும் மீண்டும் அழிவுறும் என்றும், உண்மை ஒன்றே நிலைத்திருக்கும் என்றும் அவன் சரியாக முடிவு செய்கிறான். [25]

# 40. உடல்

இந்த உடலாகிய வர்ணம் தீட்டிய பொம்மையைப் பார்! இது புண்கள் நிறைந்தது, (எலும்புகளாலும் சதையாலும்) ஒன்றாகக் கோத்து வைக்கப் பட்டது, நோய்க்கு இடமானது, பல எண்ணங்கள் நிறைந்துள்ளது, ஆனால் நிலையில்லாதது!

★★

இந்த உடல் நலிந்து தேய்வது, இது நோய்களின் கூடு, மிகவும் நொய்மையானது. இந்த அசுத்தக் குவியல் உடைந்து சிதறிப்போகும்; வாழ்வின் முடிவு சாவுதான். [1]

★★

உலகப் பற்றுள்ளவன் தன் உடலை வளர்க்கிறான். ஆனால் ஞானி தன் சித்தத்தை வளர்க்கிறான். தன் ஆசைகளைத் திருப்தி செய்வதிலேயே ஈடுபட்டிருப்பவன் தன் அழிவைத் தேடிக் கொள்கிறான்; ஆனால் தரும நெறியில் நடப்பவன் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதுடன், நீடிய வாழ்வையும் பெறுகிறான். [29]

★★

உடல் வலியை இழந்தவன் உண்மை ஞானத்தைப் பெற முடியாது. பசியாலும், தாகத்தாலும், களைப்பாலும் வாடிய ஒருவன் மனநிலை குலைந்து பின் சாந்தியோடிருக்க முடியாது; பூரணமான அமைதியைப் பெற்றாலன்றி, மனத்தினாலேயே அடைய வேண்டியதாயுள்ள முடிவை அவன் எப்படி அடையமுடியும்? புலன்களை இடைவிடாமல் திருப்தி செய்யத்தான் வேண்டியிருக்கிறது; அவைகளை அமைதியாக வைத்துக் கொண்டாலே சித்தமும் தன் நிலையில் நிற்கும். அமைதியுற்ற மனமே தியானத்திற்கு ஏற்றது; தியானத்தின் மூலமே அடைவதற்கு அரிய, அழிவற்ற, நிலையான சாந்தியை அடைய முடியும்.

★★

அந்தோ! வெகு சீக்கிரத்தில் இந்த உடல் தரை மீது சாய்ந்து கிடக்கும். (எல்லோராலும்) புறக்கணிக்கப்பட்டு, பிரக்ஞையில்லாமல், பயனற்ற மரக்கட்டைபோல், இது கிடக்கும்! [1]

# 41. மரணம்

உறக்கத்தில் ஆழ்ந்துள்ள கிராமத்தைப் பெரிய வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறது; அதுபோல், மனிதன் (வாழ்க்கையில் இன்பங்களாகிய) மலர்களைப் பறித்துக்கொண்டு அதிலே ஈடுபட்டிருக்கும்போதே, மரணம் அவனை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. [1]

★★

மனிதன் (இன்ப) மலர்களைப் பறித்துக்கொண்டிருக்கும்போது, அவன் இன்பங்களில் திருப்தியடையுமுன், மனம் கலக்கமுற்றிருக்கும் போதே, மரணம் அவனை வென்றுவிடுகிறது. [1]

★★

மனிதன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானத்திலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை. [1]

★★

எமனால் பிடிக்கப்பட்ட ஒருவனை அவன் பெற்ற மக்கள் காக்க முடியாது; தந்தையும் தமர்களும் காக்க முடியாது; உற்றாரை நம்பியும் பயனில்லை. [1]

★★

இந்த உலகத்தில் அநித்தியமான மனிதர்களுடைய வாழ்வு துன்பமும் வேதனையும் கலந்து அற்பகாலமே [illegible], பிறந்தவர்கள் (யாவரும்) மரணத்தை விலக்குவதற்கு எவ்வித வழியுமில்லை; முதுமை யடைந்ததும் மரணமே ஏற்படுகின்றது; உயிருள்ள ஜந்துக்கள் அனைத்திற்கும் இதுவே இயல்பாகும். [23]

★★

கனிவுற்ற கனிகள் விரைவிலே கீழே விடலாம். அதுபோல், பிறவி யெடுத்துள்ள மனிதர்கள் எந்த நேரத்திலும் மரணமடைந்து விடக்கூடும். [23]

★★

நரகர்களாகிய மனிதர்கள் ஒவ்வொருவராகத் தூக்கிச் செல்லப்படுகின்றனர்; பந்துக்கள் பார்த்துத் துக்கித்து அரற்றிக் கொண்டிருக்கும்போதே அவர்கள், கொலைக்களத்திற்கு எருதை அழைத்துச் செல்வதுபோல், அழைத்துச் செல்லப்படுகின்றனர், இதைக் கவனிக்கவும்! [23]

## 42. கரும நியதி

ஓ பிக்குகளே! இச்சா சக்தியை உபயோகித்தலையே *(volition)* நான் கருமம் என்று அழைக்கிறேன். [13]

★★

மனிதன் தன் பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானத்திலும் இல்லை; ஆழ்ந்த கடலிலும் இல்லை; மலையின் குகைகளிலும் இல்லை. [1]

★★

மாலுவக் கொடி கடம்ப மரத்தைச் சுற்றிப்படர்ந்து மரத்தையே அமுக்கிவிடுவதுபோல், ஒருவனுடைய தீவினையே அவனை அமுக்கிவிடுகிறது; பகைவர் செய்ய விரும்பும் தீமையை அவன் தானாகவே செய்துகொள்கிறான். [1]

★★

இரும்பிலிருந்தே துரு தோன்றினும், அதை அது அரித்துவிடுகிறது; அதுபோலவே (அறநெறி) பிறழ்ந்தவனை அவனுடைய கருமங்களை தீய கதியில் கொண்டு சேர்க்கின்றன. [1]

★★

பிராணிகள் யாவும், முன் ஜன்மங்களிலும், இந்த ஜன்மத்திலும், செய்யும் செயல்களின் கருமப் பயனாலேயே இப்போதுள்ள நிலையில் இருக்கின்றன. [3]

★★

பிக்குகளே! மனப்பூர்வமாக (வேண்டுமென்றே) செய்யப் பெற்ற சகல கருமங்களையும் அழித்து விடவே முடியாது என்று நான் உறுதியாய்ச் சொல்கிறேன். அப்படி அழித்தல் என்பது, இந்தப் பிறப்பிலோ, வேறு பிந்திய பிறப்பிலோ, உரிய சந்தர்ப்பத்திலேயே (கருமப் பயனை அநுபவிப்பதன் மூலம்) சாத்தியமாகும். [13]

★★

இயற்கையிலுள்ள மற்றப் பொருள்களைப் போலவே மனிதனின் வாழ்க்கையும் காரண - காரிய விதிக்கு உட்பட்டதாகும். இறந்த காலத்தில் விதைத்ததை இப்போது அறுவடை செய்ய வேண்டும். எதிர்காலத்தில் விளைவது இப்போது விதைப்பதேயாகும். [25]

★★

இந்த உடல் அசுத்தம் நிறைந்ததுதான், இதன் முடிவு மயானந்தான்; ஏனெனில் இது நிலையற்றது, மறுபடி இது தன் மூலப் பொருள்களாகிய கந்தங்களாகப் பிரிந்து விடுவதே விதியாகும். ஆயினும் வினைப் பயனைத் துய்ப்பதற்கு இதுவே களனாக விளங்குவதால், பாவத்தின் கருவியாக இல்லாமல், இதைத் தருமத்தின் கருவியாகச் செய்துகொள்ளும் சக்தி உன்னிடம் உளது. உடல் இன்பங்களில் திளைத்திருத்தல் நன்மையன்று. ஆனால் உடலின் தேவைகளைப் புறக்கணித்து, அசுத்தத்தின் மேலே குப்பையைக் கொட்டுவதுபோலே, நடந்து கொள்வதும் நன்மையன்று. சுத்தம் செய்யாமலும், எண்ணெய் ஊற்றாமலுமுள்ள விளக்கு அணைந்துவிடும்; அதுபோல் சுத்தம் செய்து பராமரிக்கப்படாமலும், (கடுமையான) தவத்தினாலும் நலிவுற்ற உடல் உண்மையின் ஒளியை ஏற்றுக்கொள்ளத் தகுதியான பாத்திரமாக விளங்காது. [25]

★★

கரும விதியை மாற்ற இயலாது, பிரார்த்தனைகள் பயனற்றவை, ஏனெனில் அவை வெறும் சொற்களேயாம். [26]

# 43. நிருவாணம்

'இது நான்' என்ற கருதாமையே விடுதலை. [4]

★★

'நான் இருக்கிறேன்' என்ற எண்ணத்தை அழித்துவிட்டபொழுது பிக்கு தீயிலிருந்து வெளியேறுகிறான். [13]

★★

உண்மையிலே, இராதா*, ஆசையை அழித்தலே நிருவாணம். [1]

★★

விடுதலை என்பதன் பொருள் நிருவாணம். [11]

★★

பிறப்பை அறுத்து முடிவு காண்பது நிருவாணம். [1]

★★

காமம், குரோதம், மயக்கம் ஆகியவற்றை அழித்தலே (கந்தங்களின்)சேர்க்கையில்லாத நிலை (நிருவாணம்) [11]

★★

(நிருவாணத்தைப் பற்றி அருகத்து பெற்றுள்ள) விஞ்ஞானம் என்ற கட்புலனாகாத, எல்லையற்ற அறிவு நிலையே அது, எந்தத் திசையிலிருந்தும் சென்று கரையேறக்கூடிய நிலையே அது.'**

★★

பிறரைச் சார்ந்து நிற்பவனிடம் சலனம் (உறுதியின்மை) இருக்கின்றது. சுதந்திரமாக உள்ளவனிடம் சலனமில்லை. சலனம் எங்கேயில்லையோ, அங்கே அமைதி உண்டு. அமைதி எங்கே உளதோ, அங்கே (மோகம் முதலிய வெறிகள் சம்பந்தமான) இன்பம் துய்க்கும் களியாட்டமில்லை. இன்ப வேட்டை எங்கே யில்லையோ, அங்கே (பிறப்பு இறப்பாகிய) வருதலும் போதலும் இல்லை. வருதலும் போதலும் எங்கேயில்லையோ, அங்கே ஒரு நிலையிலிருந்து மற்றொன்றுக்கு மாறுதலும் இல்லை. ஒரு நிலையிலிருந்து மற்றொன்றுக்கு மாறுதல் எங்கேயில்லையோ, அங்கே 'இங்கு' என்பதில்லை. 'அப்பால்' என்பதில்லை. 'இங்கும் - அங்கும்' என்பதுமில்லை. அதுவே துக்கத்தின் முடிவு. [4]

★★

---

* - ஒரு சீடன்.

** - அது' என்பது நீர், நிலம், நெருப்பு, ஜடப்பொருள், மனம், உடல் முதலிய எதுவும் இல்லாத இடம் எது என்பதற்குப் பதிலாகக் கூறப்பட்டுள்ளது.

புறத் தோற்றங்களான யாவும் ஒழிந்த பிறகு - தான் ஒரே உயிர்த்தத்துவம் மட்டும் எஞ்சி நிற்கின்றது; அது பிரபஞ்ச இயல்புகளுக்கு அப்பாற்பட்டுச் சுதந்திரமாயுள்ளது. விறகு தீர்ந்த பிறகும், சுடர் அணைந்த பிறகும், நித்தியமான ஒளியில் எரிந்து கொண்டிருக்கும் தீ அதுதான்; ஏனெனில் அந்தத் தீ சுடரிலுமில்லை, விறகிலுமில்லை. அந்த இரண்டின் உட்புறத்திலுமில்லை; ஆனால் மேலேயும், கீழேயும் எங்கும் உள்ளது அது. [5]

★ ★

நிலமும் நீரும் இல்லாத, ஒளியும், காற்றும் இல்லாத, எல்லையற்ற ஆகாயமும் (இடமும்) பிரஞ்ஞை உணர்வு இல்லாத, வெறுமையும் (சூனியமும்) இல்லாத, அறிதலும், அறிதலற்றதும் இல்லாத இந்த உலகம் அந்த உலகம் என்று இல்லாத, சூரியன் சந்திரன் இரண்டும் இல்லாத ஓர் இடம் இருக்கின்றது. அதை வருதலும் போதலுமற்றது என்றும், நிற்றல், இயங்குதல், ஒய்வுறுதல், மரித்தல், பிறத்தல் ஆகிய எந்நிலையுமற்றது என்றும் நான் கூறுகிறேன். அதற்கு நிலையுமில்லை, சலனமுமில்லை, ஆதரவுமில்லை. அதுவே துக்கத்தின் முடிவு. [6]

★ ★

ஓ பிக்குகளே! பிறப்பற்ற, ஆரம்பமற்ற, சிருஷ்டிக்கப்படாத, உருவாகாத ஒன்று இருக்கிறது. அப்படி ஒன்றில்லையானால், பிறப்புள்ள, ஆரம்பமுள்ள, சிருஷ்டிக்கப்பட்ட, உருவுள்ள உலகிலிருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாமற் போகும். [6]

★ ★

எந்த மனிதன் 'நான்' என்ற தனித்தன்மையை ஒழிக்கும் வகையில் தன் இதயத்தைச் செலுத்துகிறானோ, அவன், கங்கையின் பெருவெள்ளத்தில் ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு அபாயமின்றி நீந்திச் செல்லும் பலவானைப்போல், இன்பமாயும், களிப்புடனும், உற்சாகத்துடனும் இருப்பான். [11]

## - முற்றும் -

25 FEB 20

# அநுபந்தம்

## பௌத்தத் திருமுறைகள்

பாலி மொழியிலுள்ள பௌத்தத் திருமுறைகளுக்குத் திரிபிடகங்கள் என்று பெயர். பிடகம் என்றால் கூடை, திரி என்றால் மூன்று. எனவே மூன்று கூடைகளில் அவை நிறைந்துள்ளன. திரி பிடகங்களாவன: சுத்த பிடகம், விநய பிடகம், அபிதரும பிடகம்.

சுத்த பிடகம்: இது தீக நிகாயம், மஜ்ஜிம நிகாயம், சம்யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம், குத்தக நிகாயம் என ஐந்து நிகாயங்கள் அல்லது தொகுதிகளைக் கொண்டது. தீக நிகாயத்தில் 3 வக்கங்களும், மஜ்ஜிம நிகாயத்தில் 15 வக்கங்களும், சம்யுத்த நிகாயத்தில் 5 வக்கங்களும், அங்குத்தர நிகாயத்தில் 11 நிபாதங்களும் உள்ளன. குத்தக நிகாயம் 15 சிறு நூல்களைக் கொண்டது. அந்நூல்கள் வருமாறு:

### குத்தக பாடம்

| | |
|---|---|
| தம்மபதம் | உதானம் |
| இதிவுத்தகம் | சுத்தநிபாதம் |
| விமானவத்து | பேதவத்து |
| தேரகாதை | தேரிகாதை |
| ஜாதகம் | நிக்தேசம் |
| படிஸம்தாமக்கம் | அவதானம் |
| புத்தவம்சம் | சரியாபிடகம் |

விநய பிடகம்: இது பிக்குகள் பிக்குணிகளுடைய ஒழுக்கங்களுக்குரிய விதிகளைத் தொகுத்துக்கூறுவது. இதன் மூன்று பகுதிகள் சுத்தவிபங்கம், கந்தகை, பரிவாரம்.

அபிதரும பிடகம்: சுத்த பிடகத்தில் கூறப்பெற்றுள்ள தருமத்திற்கு இது விளக்கமாக அமைந்துள்ளது. இதன் ஏழு பகுதிகளாவன: